வானதி
பதிப்பகம்

அகத்தில் மகளிர்

டாக்டர் ராதா தியாகராஜன்

அகத்தில் மகளிர்

டாக்டர் ராதா தியாகராஜன்

வானதி பதிப்பகம்
13. தீனதயாளு தெரு
தி.நகர், சென்னை-17.

முதற் பதிப்பு : டிசம்பர், 1992

கலைத்தந்தை அவர்களின்
நூற்றாண்டு விழா வெளியீடு

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை : ரூ. 22.00

Laser Typeset at : LKM Computer Prints, Madras – 17
Printed at :
ஸ்ரீ முருகன் ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை-600 005.

முன்னுரை

மகளிர் அறிவுத்திறன், பேசுந்திறன், பண்பாட்டுணர்வு, வாழுங்கலை முதலியவற்றில் ஆடவர்க்கு ஒருவாற்றானும் தாழ்தலின்றி, ஒப்ப வைத்தும் உயர்வாக மதித்தும் எண்ணற்கு உரியர் என்பதைச் சங்ககாலந் தொட்டு இற்றை நாள்காறும் இலக்கியங்கள் இனிதெடுத்தியம்புகின்றன.

சங்க இலக்கியம் தோழி, தலைவி, பரத்தை என்னும் இளநங்கையரையும், செவிலி, நற்றாய் என்னும் முது பெண்டிரையும், அவர்தம் பல்வகைத் திறனும் புலப்படப் பாங்குறச் சித்திரிக்கின்றது. இச்சித்திரங்கள் அவ் விலக்கியத்து அகப்பொருள் நூல்களுள், கற்பார் கருத்தைக் கவரும் வண்ணம் கவினுற அமைந்துள்ளன.

சிலப்பதிகாரம், மணிமேகலை, இராமாயணம், பெரிய புராணம் முதலிய பெருங்காப்பியங்களில், வாழ்வில் பல்வேறு சிக்கல்களை எதிர்உறும் மகளிர், அவற்றை எங்ஙனம் தமது அறிவு மாண்பாலும் நன்மனச் செம்மையாலும் செஞ்சொல் திறனாலும் வெற்றிகொண்டு திகழ்கின்றனர் என்பதை அறிந்து மகிழ்கின்றோம். மகளிரின் இம்மாண்புடைத் திறங்கள், ஆடவர்க்கு ஆற்றல்சால் அருந்துணையாய் அமைவதையும் கண்டு இன்புறுகின்றோம்.

இன்னோரன்ன மகளிர் பெருநலங்களைக் குறித்து, யான் அவ்வப்போது இயற்றிய ஏழு கட்டுரைகளைத் தொகுத்து, அகப்பொருள் இலக்கியத்திலும், மனையகத்திலும் மகளிர் மாண்பு என்ற இரு பொருளும்பட, அகத்தில் மகளிர் எனப் பெயரிய

நூலாக வெளியிடலுற்றேன். பெண்களின் சமத்துவத்தைப் பெரிதெடுத்துப் பேசும் இக்காலத்தே, நந்தமிழ் இலக்கியங்கள் பண்டுதொட்டே மகளிர் மன மாண்புகளை அழகுற எடுத்துப்பேசி வருதலை அறிய, இந்நூல் நல்வாய்ப்பாகும் எனக் கருதுகின்றேன்.

அன்பர்கள் இந்நூலை ஏற்று, வாழையடி வாழை என வரும் மங்கையர் பண்பு நலன்கள் இக்காலத்தும் சிறந்து வளர உதவுவாராக.

வெறும் 'அகத்தில் மகளாக' மட்டும் அமைந்து வாழ்ந்த என்னை,

"மூலை இருந்தாரை முற்றத்தே விட்டவர்
சாலப் பெரியர் என்று உந்தீபற
தவத்தில் தலைவர் என்று உந்தீபற"

என்ற திருவுந்தியார் கூற்றுக்கேற்பத் தமிழ் மணமும் கலையறிவும் பெறச் செய்து, தமிழ்ப்பணி செய்ய வைத்த கலைத்தந்தை அவர்களின் திருவடிகளைப் போற்றி அவர்களின் நூற்றாண்டு விழா நினைவாக இதனை வெளியிடுகின்றேன்.

இந்நூலினை எழிலுறப் பதிப்பித்த வானதி பதிப்பகத்தார்க்கு என் நன்றி உரியது.

ராதா தியாகராசன்

மதுரை
18.12.1992

பொருளடக்கம்

அகத்தில் மகளிர்

அகப்பொருள் என்பது ஒருவனும் ஒருத்தியுமாய் வேறு வேறிடங்களில் பிறந்து வளரும் இருவர் தம்மில் தனித்துக்கண்டு கருத்தொருமித்து ஒருவரையொருவர் இன்றியமையாத அளவில், பெருகிய காதலால், கடிமணம் செய்து கொண்டு கணவனும் மனைவியுமாகி மனையறம் பூண்டு மக்களும் பொருளும் பெற்று மாண்புற வாழ்வதாகும்.

கடிமணம் ஊரறிய நிகழ்வது வரைவு எனவும், நாடறிய நிகழ்வது திருமணம் எனவும் இருகூறுபடும். இருவரும் ஒருவரையொருவர் தனித்துக்காண்பது முதல் வரைவு வரை களவு எனப்படும். மணம் புரிந்து செய்யும் மனையறம் கற்பு எனப்படும். களவும் கற்புமாகிய இரண்டையும் அன்பின் ஐந்திணை என்றும், ஒத்த அன்பு என்றும் கூறுவர். ஒருபாற் காதலைக் கைக்கிளை என்றும், அன்பு ஒவ்வாத மணத்தைப் பெருந்திணையென்றும் அகப்பொருள் இலக்கணங்கள் அறிவிக்கின்றன.

ஒத்த அன்பாகிய ஐந்திணை ஒழுக்கத்தையே அறிவுக்கும், அறத்திற்கும் ஏற்றது என்று கொண்டு

சான்றோர் அகப்பொருள் என உரைத்துள்ளனர். அப்பொருளே அகநானூற்றில் உள்ள பாட்டுக்கள் நானூறும் தங்கண் கொண்டிருப்பதால் இது அகநானூறு எனப்பெயர் பெற்றுள்ளது.

மக்களினத்துக்கு, அடிப்படை கணவனும் மனைவியும் ஆதலால் அவர்கள் அறநெறியில் அன்பால் பிணிப்புண்டு ஒரு மனமும் ஈருடம்புமாய் இயைவது கூறிய தமிழ்ச் சான்றோர் தாம் பாடும் பாட்டுக்களுக்கு அகப்பொருட் கருத்துக்களையே பெரிதும் பொருளாகக் கொண்டார்கள். அதனால் தமிழ் என்றாலே அகப்பொருள் என்று சொல்லவும் முற்பட்டனர். ஆரிய அரசர் பிரகத்தனுக்குக் கபிலர் பாடிக்காட்டிய அகப்பொருளைத் தமிழென்றே குறிக்கின்றார்கள். இவ்வண்ணம் தமிழ்க்கே சிறப்பாகவுள்ள அகப்பொருட் பாட்டுக்களை ஆராய்வது, அறிவுக்கும் அது நிலவும் உடம்புக்கும் தளர்ச்சியும் சோர்வும் தருவது என மணிவாசகப் பெருமான் அறிவிக்கின்றார்.

ஒருவன் தன் நண்பனுடைய உடற்சோர்வு கண்டு, "சிறைவான் ... தீந்தமிழின் துறைவாய் நுழைந்தனையோ அன்றி ஏழிசைச் சூழல்புக்கோ இறைவா... தடவரைத்தோட்கு என்கொலாம் புகுந்து எய்தியதே" என்று கேட்கின்றான். இதனால் அகப்பொருளும் ஏழிசையும் ஆராய்பவர்க்குத் தளர்ச்சியுண்டுபண்ணும் தன்மையுடையன என்று அறிகின்றோம். மணிவாசகரின் இப்பாடலில் – அகப்பொருள், இசையென்ற இரண்டனுள், அகப்பொருளை அடிகள் முற்படக் கூறியது ஏன்? "நெஞ்சில் மிக்கது வாய் சோர்ந்து விடும்" என்பர் நக்கீரர். (களவியல் உரை) உள நூலுக்கும் இது ஒத்த கருத்து.

இதனால், மணிவாசகப் பெருந்தகை இசையினும் அகப்பொருள் தலைமையும் வன்மையும் உடையது என எண்ணுகின்றார் எனத் தெளியலாம். ஆகவே அகநானூற்று அகப்பாட்டுக்களின் அருமையும் ஒருவாறு அறிகின்றோம்.

அகப்பொருள் இயற்கைப் புணர்ச்சி, இடம் தலைப்பாடு, பாங்கற்கூட்டம், தோழியிற் கூட்டம் என்ற நான்கையும் தன்னுள் கொண்ட களவு எனவும், பல்வேறு பிரிவுகளைத் தன்கண் கொண்ட கற்பு எனவும் இரண்டாய் இயங்குகிறது. தொல்காப்பியப்படி கற்பு ஒழுக்கத்தில் காணப்படும் பிரிவுகள், ஓதல், பகை, தூது, பொருள் என நால்வகைப்படும். பிற்கால இலக்கணப் புலவர்கள் பரத்தையிற் பிரிவையும் கூட்டி ஐந்தாகப் பிரித்தனர். இவற்றுள் களவொழுக்கத்தில், தலைவி, தோழி, செவிலி என மகளிர் மூவரும், கற்பொழுக்கத்தில் மேற்கூறிய மூவரோடு பரத்தைசேர, நால்வகை மகளிரும் வருகின்றனர். களவுக்காலத்தில் இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம் என்ற மூன்று பகுதியிலும் தலைவி பொருளாகச் சொற்கள் நிகழுமாயினும் அவள் பிறரோடு பேசுவதாகப் பாட்டுக்கள் இல்லை. அவள் அங்கே அவ்வாறு நின்றாள், இவ்வாறு நோக்கினாள் என்று தலைவனும் பாங்கரும் கூறுவார்களேயன்றி அவள் ஒன்றும் உரையாடாள். அதனால் அம்மூன்றையும் விடுத்து ஏனைக்களவுப் பகுதியிலும் கற்புப் பகுதியிலுமே ஈண்டுக் கருத்துக்கள் எடுத்துரைக்கப்படுகின்றன.

இளமையில் தலைவனைக் கண்டு கருத்தை இழக்கும் தலைவி இயற்கைப் புணர்ச்சி முதலிய மூன்று நிலையிலும் ஒரு பேச்சும் பேசாமல் நமக்கு வியப்பைத்

தருகிறாள். அதற்குக் காரணம் கூறவரும் தொல்காப்பியர் 'அச்சம், நாணம், மடனும் முந்துறுத்த – நிச்சமும் பெண்பாற்குரிய' என்பார். – இவற்றுள் மடம் என்பது இளமைக்காலத்து விளங்கும் அறியாமை. அதனால் அச்சொல் இளமைக்கும் உரியதாக – "மடநல்லாள்", "மடமங்கை", "மடவரல்", "மடந்தை" என்று பெண்களைச் சான்றோர் குறிக்கின்றார்.

மகளிர் அச்சம் நாணம் முதலியவற்றின் வடிவமாக இருத்தலின் அவர்கள் வாய்திறந்து பேசுவது குறைவு. அதிலும் அவர்கள் உள்ளம், விருப்பம் நிறைந்து விடின், ஒன்றுமே பேசமாட்டார்கள். அதனை "நிறைந்த காதலின் சொல்எதிர் மழுங்கல்" – எனத் தொல் காப்பியமும், "காமம் செப்பல் ஆண்மகனுக்கு அமையும்" என்று நற்றிணையும் கூறுகின்றன. இக்காரணத்தால் களவொழுக்கத்தில் முதல் மூன்று நிலையிலும் தலைமகள் பேசியதாக ஒரு குறிப்பும் அகநானூற்றில் இல்லை.

இயற்கைப் புணர்ச்சி, இடம் தலைப்பாடு என்ற பகுதிகளில் தலைவியின் கண்பார்வையால் காட்டப்பட்ட தோழியைத் தலைமகன் அறிந்து அவள் துணையிருந்தா லன்றித் தலைவியின் நட்பைப் பெற முடியாது என்று எண்ணி, அத்தோழியைக் கண்டு உரையாட முயல்கின்றான்.

தோழி தலைவியின் கருத்து அறியாமையால் ஓர் உரையும் நிகழ்த்தாமல், அவள் கருத்தையும் தலைவனைக் காணும்கால் தலைவிபால் எழும் மெய்ப்பாட்டையும் உற்றுநோக்கி உண்மை உணர்ந்து கொள்கிறாள். தலைவியொடு தனித்து உரையாடித் தான் கொண்ட கருத்தை உறுதி செய்து கொள்கின்றாள். ஆனால்

அதனைக் காட்டற்குரிய பாட்டுக்கள் அகநானூற்றில் இல்லை. தோழி தலைவனோடு உரையாடி அவன் குறையைத் தலைவி இசைந்து ஏற்குமாறு முயலும் கருத்துடைய பாட்டுகள் களவொழுக்கத்தின் தொடக்கமாக அகநானூற்றில் இடம் பெறுகின்றன.

தலைவியும், தோழியும் தினைக்காவல் புரிகின்றனர். தலைவியின் உள்ளத்து உறையும் காதலை வெளிப்படுத்தக்கருதிய தோழி, மானைக் காட்டி மானைப் பிடிப்பவர்போல, தானே ஒரு காதல் நிகழ்ச்சியைப் படைத்துக்கொண்டு 'தோழி, நெருநல் நம் புனத்திற்கு ஒருவன் வந்தான். அவன் மணிப்பூண் அணிந்து ஒரு மன்னவன் போலத் தோன்றினான். ஆனால், அத்தோற்றத்திற்கு மாறாக என் முன் நின்று பணிந்த சொற்களால் என்னை நோக்கி, 'கிளிகடியும் தட்டையைக் கையில் ஏந்தி, சூர் அரமகள் போலத் தோன்றுகிறாய். நீ யார் என்று சொல்லி அவன் என் முதுகிடத்தில் கிடந்த கூந்தலைத் தடவினான். என் உள்ளம் மழைபெய்யக் கரைந்து கெடும் மண்போல நெகிழ்ந்தது. உடனே, என் "உள் அவன் அறிதல் அஞ்சி – உள்ளில் – கடிய கூறி, இவ்வுலகத்தில் நீ எனக்கு நெருங்கிய தோழியே ஆயினும் இன்னுயிரன்ன நின்னொடும் சூழாது – முளையணி மூங்கிலின் கிளையொடு பொலிந்த, பெரும் பெயர் எந்தை – அரும் கடி (காவல் பொருந்திய மனை) செய்து – பின் இரங்கா வினையொடு மெய்யல் பெரும் பழி எய்தினேனே" என்று சொல்லுகிறாள். (அகம் – 268)

இங்கே தோழி தலைவியின் உள்ளத்தில் மறைந்து கிடக்கும் காதலை வெளிப்படுத்த முயல்கின்றாளாகையால் எடுத்த எடுப்பில் அறியாய் வாழிதோழி – என்கிறாள்.

தான் சொல்வதை நாணமிகுதியால் ஏலாது மறுக்கும் குறிப்பினளாதலின் எனக்கும் யான் சொல்லும் நிகழ்ச்சிக்கும் தொடர்பில்லை என்று பொருள்படுமாறு அறியாய்! வாழி என்று தோழி சொல்லவும் தலைவி மனத்தின்கண் தெளிவு தோன்றுகிறது. அவள் முகமலர்ந்து நோக்கவும் – உள்ளத்தே காதலன்பு இருப்பது எனக்குத் தெரிவிக்கப்படுமாயின் ஏற்றது செய்வேன், எனக்கு நீ சொல்லாது ஒளிக்கின்றாய் – என்ற கருத்துத் தோன்ற கலந்த காதல் உண்டெனின் நன்றுமன் என்றாள். இச்சொற்கள் தோழியினிடத்தே நடந்தது போன்ற ஒரு நிகழ்ச்சியை உள்ளடக்கிக் கொண்டிருப்பது ஒருபுறம் தோன்றி, அவள் அதனைத் தலைவியிடமோ ஏனையத் தோழியரிடமோ உரைப்பதற்கு நாணம் ஒருபால் தடுப்பது போலவும் நண்பர்கள் அல்லாததுபோலவும் தோன்ற நானும் நட்பும் இல்லோர்த் தேரின் யான் அலது இல்லை உலகத்தானே – என்று சொல்லுகிறாள். இதைக்கேட்கும் தலைவியின் உள்ளத்தே வேறொரு கருத்துத் தோன்றுகிறது. உனக்கும் தலைமகனுக்கும் உளம் கலந்த காதல் உண்டெனின், அது நன்று. நண்பரொடு பேசும்கால் நாணம் நடுநின்று தடுக்காது. அங்ஙனமிருக்க எனக்கு உரைப்பதற்கு நாணி, எனது நட்பையும் புறக்கணிக்கின்றாய் என்ற கருத்துத் தோன்றுகிறது.

அவள் தோழியைப் பார்த்து "நடந்தது யாது?" என்பாள் போல நோக்குகிறாள்; முதலாவது யான் இதனை என் உயிரொத்த நின்னோடு கலந்து அளவளாவி யிருக்க வேண்டும்; அதனைச் செய்யத் தவறினேன் என்பாளாய் "இன்னுயிரன்ன நின்னொடும் சூழாது" என்றாள். இரண்டாவது, யான் என் தந்தையின் காவலைப்

பொருளாக எண்ணாமல் அவனோடு அன்புறவு கொண்டேன். என் தந்தை பெரும் பெயருடையவன்; அவன் குடி மூங்கிற்புதர்போல் கிளைமலிந்து விளங்குவது; ஆகவே அவனது காவல் கடத்தற்கரியது என்பாள், முளையணி மூங்கிலின் கிளையொடு பொலிந்த பெரும் பெயர் எந்தை அருங்கடி நீவி என்றாள். அவ்வுரை தலைவியுள்ளத்தே அச்சத்தை விளைவிக்கிறது; அவள் முகம் வெளுக்கிறது. அதனைத் தோழியறிந்து கொண்டு, தந்தை காவலை ஏன் எண்ணவில்லையெனின், அதனையும் எண்ணினேன்; முடிவில் எற்றென்று இரங்கத்தக்கதாயின் அது தகும். யான் மேற்கொண்டது முடிவில் யானும் தந்தையும் இன்புற்று மகிழ்தற்குரியது என்பது தோன்ற, "செய்து பின் இரங்காவினை" என்றாள். அதுபற்றி இப்போது பழி எய்தினேன் எனின் அது நிலையில்லாது நீங்கக் கூடியது, "மெய்யல பெரும்பழி" என்று கூறினாள். இத்தனையும் கேட்டுத் தலைவி ஒன்றும் கூறாளாகவே, "அது நாடாய் கூறுதி" அதாவது நீயே ஆராய்ந்து செய்வது கூறுக என்று இயம்புகிறாள். இவையாவும் தன்னைக் குறித்தே கூறுகிறாள்; என் காதலுறவு இவட்குத் தெரிந்து விட்டது எனத் தெளிவும் துணிவும் எய்துகிறாள். இருவரும் மனம் கலந்து உரையாடுகின்றனர்.

இதன்கண் முள்மேல் நடக்கும் ஒள்ளியர்போலத் தோழி, படைத்துமொழிகளால் தலைவியின் மனத்தில் திண்ணிதாக மறைக்கப்பட்டிருக்கும் காதலுறவை உண்டென வுணர்வதும், பின்பு தன் மெய்யாற் புலப்படுத்துவதோடு அவளே தன்வாயாற் சொல்விப்பதும் பெண்ணறிவின் பெருமையை நன்கு காட்டுகின்றன.

“நானும் நட்பும் இல்லோர்த்தேரின் யான் அலது இல்லை இவ்வுலகத்தானே” எனத் தோழி கூறியது அவள் நெஞ்சக் கதவைத் திண்ணமாகத் திறந்து விடுகிறது; தலைவனோடு உறவு கொண்டது “செய்து பின்னிரங்காவினை” எனத் தோழி கூறியது, தலைவிக்குத் தன் செயலின் தூய்மையைக் காட்ட. “மெய்யல பெரும்பழி” என்றது, அதனால் வரும் பழிப்புரை பெரிதாய்த் தோன்றினும், நிலைபேறின்றி நீங்கிப் பெரும்புகழை விளைவிக்கும் என உணர்த்தி அவள் உள்ளத்தில் உலையாத் துணிவைத் தந்து உறுதி செய்கின்றது.

இவ்வண்ணம் தலைவியைத் தன்பக்கல் தழீக் கொண்ட தோழி தலைவனைக் காண்கின்றாள். அவனும் தோழியின் முயற்சி வெற்றி தருமோ என்ற கலக்கத்தால் உள்ளம் சோர்ந்து உரைத்திறம் இழந்து உயங்குகின்றான். அவனை நோக்கி,

“கடுந்தேர் இளையரொடுநீக்கி, நின்ற நெடுந்தகை
நீர்மையை;
அன்றி நீயும் தொழுதகு மெய்யை"

என்று சொல்லுகிறாள். மேற்கொண்ட களவொழுக்கம் பிறர் அறிதலாகாது என்று கருதி ஏறிவந்த தேரும் இயக்கும் பாகனும் இளையரும் நெடுந்தொலைவில் நீக்கி நிறுத்தி, எனது நிலைமையையும் தலைவியின் தலைமையையும் சீர்தூக்கி எண்ணம் திண்ணியனாய்த் தோன்றுகின்றாய் என்பாள், தேரையும் இளையரையும் நீக்கி, “நின்ற நெடுந்தகை நீர்மையை” என்றாள். இப்பாராட்டு எவ்வாறு முடியுமோ என அவன் முகத்தில் ஏக்கம் தோன்றவும், என்னால் தொழப்படும் தலைவியின் உள்ளம் கொண்டவனாதலால், நீயும் என்னால் தொழப்படு

கின்றாய் எனத் தலைவி இசைந்ததைக் குறிப்பால் உணர்த்த, "நீயும் தொழுதகுமெய்யை" என்று கூறுகிறாள். அவ்வாறின்றி நின் விருப்பம் நிறைவேற அவளை இணக்கிவிட்டேன் என்று சொல்வது, தோழியின்பால் உயர்வும், அதனால் தலைவியைத் தான் வேட்டபடி யாட்ட முடியும் என்ற செருக்கும் புலப்படுத்திக் கேட்போர் மனத்தில் அருவருப்பை உண்டுபண்ணும் என்பதை அறிந்தே தோழி அவனுக்கு அறைகின்றாள்.

என்பால் இத்தகைய அன்பு கொண்ட தலைவி என்னை இத்தனை நாள் அலைத்தது நன்றன்றே என்று ஓர் எண்ணம் தலைவன் உள்ளத்தெழுமே எனத் தோழி எண்ணுகிறாள். அன்பர்களிடையே இது போலும் எண்ணம் பிறக்குமாயின் அவர்களது மனவொருமை கெடும்; அன்பின் விளைவாகிய இன்பம் தேய்ந்தொழியும். அதனால் அவள் தலைவியின் நிலைமையை எடுத்துரைக்கலுற்று, "அழிவு முந்துறுத்துப் பன்னாள் வந்து பணிமொழி பயிற்றலின், குவளையுண்கண் கலுழ நின்மாட்டு இவளும் பெரும் பேதுற்றனள்; தாயுடை நெடுநகர்த் தமர் பாராட்டக் காதலின் வளர்ந்த மாதராதலின் பெருமடம் உடையரோ சிறிதே" என்று சொல்லுகிறாள். உள்ளத்தின் கருத்தழிவை மெய்யிலே புலப்படுத்திக் கொண்டு ஒருநாள் இருநாள் அன்றிப் பலநாள் நீ வந்து பணிவு தோன்றும் மொழிகளைச் சொல்லி நின்றது காணக்காணத் தன் பொருட்டன்றோ இவர் இத்துணைத் துன்பத்துக் குள்ளாகின்றார் என்று எண்ணி, வருத்தம் மேலிட்டுக் கண்ணீர் கசிய செய்வதறியாது அறிவு பேதுற்று அன்பு மீதூர்ந்து அயர்வுறுகின்றாள் என்பது தோன்ற, "அழிவு முந்துறுத்துப்

பன்னாள் வந்து பணி மொழி பயிற்றலின் குவளை யுண்கண் கலுழ நின்மாட்டு இவளும் பெரும் பேதுற்றனள்" என்றாள். இப்பெற்றியாள் என்னை இத்தனை நாள் அலக்கண் செய்து அலைக்க வேண்டாவே என நினையாதவாறு. இவள் தன் தாயகத்தே தமராயினார் பலரது அன்புச் செல்வச் சூழலில் அவர்களின் பாராட்டுக் கிடையே வளர்ந்தவளாதலால், எதனையும் கண்டாங்கு விரைந்து எண்ணி முடிவு காணும் அறிவுடையளல்லள் என்பாளாய்ப் "பெருமடமுடையரோ சிறிதே" என்று இசைக்கின்றாள்.

இவற்றைக் கேட்டதும் தலைவற்கு அவளைக் காண்டல் வேண்டுமென்ற வேட்கை மீதூர, உள்ளத்தில் விதுவிதுப்பும் உடலில் விதிர்விதிர்ப்பும் தோன்றுகின்றன. நரம்புகள் துடிக்கலுற்றன. கூர்த்த மதியினளாதலால் தோழி, "குன்றின் தோன்றும் குவவுமணல் சேர்ப்ப" என்றாள். மணற்குன்றுகள் கற்குன்றுபோல் தோன்றும் நெய்தல் நிலத்தவனே என்பது பொருள். கடற்காற்றுப் போந்து கடிதாய் வீசிய போதினும் சிறு துகளும் பிறழாது இறுகி நிற்கும் நின் நாட்டு மணற் குன்றுகள்; அது போல காதற்கடற்காற்று எழுந்து குன்றன்ன நின் மனத்தைக் கடுகி முடுகித் தாக்கினும் நீ அறிவு திறம்பாத அண்ணலாதல் வேண்டும் என்று அறிவுறுத்துகின்றாள். ஆற்றவும் பெருகும் அவனது ஆர்வம் தடைப்படுவதால் அவன் அயர்வு கொள்ளாதவாறு "இன்று இவண் விரும்பா தீமோ" என இயம்புகிறாள். அங்ஙனமாயின், "நாளை வரலாமோ?" என்று அவன் கேட்பானென முன்கூட்டியே உணர்ந்து "ஐய, அதோ, புன்னைமரத்தின் தலைக்கு மேல் தோன்றும் பனைமரத்தின் அடியில் நின்று கூப்பிடு தூரத்தே

எம்முடைய சிறிய நல்லவூர்; அங்கே எம் பெற்றோரைக் கண்டு ஆவன செய்க என்பாளாய், "பூவிரி புன்னை மீது தோன்று பெண்ணைக் கூஉங்கண்ணஃதே தெய்ய... பெருநீர் வேலி எம் சிறுநல்லூரே" (அகம் 310) என்று மொழிகின்றாள்.

"எங்களுடைய நல்ல ஊர் அண்மையில் இருக்கிறது என்பவள் புன்னைமரத்தையும் பனைமரத்தையும் சுட்டிக் கூறியது ஏன்" என்று தலைவன் தோழிபால் விடைபெற்றுச் செல்பவன் நினைக்கலுற்றான். நாளைவரின் அவ்விடம் வருக எனக் குறிப்பாய் உரைக்கின்றாள் என எண்ணினான். மறுநாள் அவன் தினைப்புனம் சென்று தோழியைக் காணவும், அவள், "துறைவ, பெருமையென்பது கெடுமோ ஒரு நாள் மண்ணாமுத்தம் அரும்பிய புன்னை தண்ணருங் கானல் வந்து நும் வண்ணம் எவனோ என்றனிர் செலினே" (அகம் 30) என்று சொன்னாள். இதைக் கேட்கும் தலைவன், புன்னைப் பொழிலின் கண் வந்து காணுமாறு இடம் குறிக்கின்றாள் என நினைத்து அவ்வாறே மறுநாள் தலைவியைத் தோழி குறித்த அவ்விடத்தே கண்டு உரையாடி இன்புறுகின்றான்.

இவ்வண்ணம் சில நாட்கள் நிகழ்கையின், தலைவனது காதலன்பின் பெருக்கத்தைத் தோழி அறிந்து மேலே அதனை வளர்க்கக்கருதி அவனை இரவின்கண் வருமாறு குறிப்பாய் மொழிகின்றாள். பகற்போதில் வந்த தலைவன், ஞாயிறு மறையுங்காறும் இருந்துவிட்டுப்பின் தன்மனைக்குச் செல்வான் புறப்படவும்,

"பன்னாள் எவ்வம் தீரப்பகல்வந்து புன்னையம் பொதும்பின் இன்னிழல் கழிப்பி மாலைமால்

கொளநோக்கிப் பண்ணாய்ந்து வலவன் வண்தேர் இயக்க", நீயும் செலவு விருப்புற்றனை, அதனை ஒழிகதில் (அகம் 340) என்று சொல்லுகிறாள். அவனுக்கு ஒருபால் உவகையும் ஒருபால் வியப்பும் உண்டாக, அது காணும் தோழி, பெரும, நீ இவளுடைய "செறி தொடி திருத்திப் பாறுமயிர் நீவி இனி மடந்தை நின் தோழியொடு மனையெனச் சொல்லிய அளவை தான் பெரிது கலுழ்ந்து தீங்காயினள்; நீ "நொதுமலர் போலப் பிரியின் கதுமெனப் பிறிதொன்றாகலும் அஞ்சுவல்" என்று சொல்லுகிறாள். இச்சொல் தலைவன் உள்ளத்தைக் கலக்கிச் செய்வதறியாது திகைக்கச் செய்கிறது. தோழி அதற்கொரு வழிசொல்பவள் போல,

> சேணின் வருநர் போலப் பேணாய்
> இருங்கலியாணர் எம் சிறுகுடித் தோன்றின்
> வல்லெதிர்கொண்டு மெல்லிதின் வினைஇ
> துறையும் மான்றின்று பொழுதே, சுறவும்
> ஓதம் மல்கலின் மாறாயினவே
> எல்லின்று, தோன்றல், செல்லாதீமென
> எமர்குறை கூறத் தங்கி, ஏமுற
> இளையரும் புரவியும் இன்புற நீயும்
> இல்லுறை நல் விருந்தயர்தல்,
> ஒல்லுதும் பெரும நீ நல்குதல் பெறினே" **(அகம் 300)**

என்று உரைக்கின்றாள்.

நெடுந்தொலைவிலிருந்து வருபவர் போல எம்மனைக்கு வருதல் வேண்டும். வரின் எம் பெற்றோர் நின்னை மிக்க விருப்புடன் வரவேற்பர். அவர்கள் விருந்தோம்பும் நல்லறம் மிகவுடையர்; அவ்விருந்தினை நினக்குச் செய்யும் வாய்ப்பினை எமக்கு நீ அருளல் வேண்டும் என்கிறாள். நீ வரின் எம் பெற்றோர் சிறிதும்

தயங்காது விரைந்து எதிர்வந்து வரவேற்று மெல்லிய தண்ணிய சொற்களால் உன்னை வினவுவர் என்பாள், "வல்லெதிர் கொண்டு மெல்லிதின் வினைஇ" என்றாள். அவர்கள் வழங்கும் பரிவுரை எப்படியிருக்கும் என்பதை விளக்கலுற்று, பொழுது கழிந்ததால், கடல்துறை இருள் சூழ்ந்தது; கடலோதம் கழியிற் பரந்து பெருகியதால் போகும் வழியில் சுறாமீன்கள் உலவும்; அதனால் செல்லுதல் வேண்டா என மொழிவர் என்பாள்,

துறையும் மான்றின்று பொழுதே சுறவும்
ஓதம் மல்கலின் மாறாயினவே,
எல்லின்று, தோன்றால், செல்லாதீமே (அகம் 300)

என எமர் குறையுற்றுக் கூறுவர் என்றும், நினக்கேயன்றி நின்புரவிக்கும், நின்னோடு வந்த இளையர்க்கும் (ஏவலர்க்கும்) "இல்லுறை நல்விருந்தயர்தல் ஒல்லுதும் பெரும" என்றும் தோழி கூறுகிறாள்.

இவ்வாறு இரவின்கண்ணும் தலைமகன் வரவு செலவு செய்கிறான்; தலைமக்கள் இருவர் உள்ளமும் காதலன்பு சிறந்து ஒருவரையொருவர் பிரிந்துறைய முடியாத எல்லையை நெருங்குகிறது. இந்நிலையில் தோழி தலைவனைச் சிறிது அலைத்து விரைவில் மணம் புரிந்து கொள்ளற்குரிய நினைவு எழுமாறு தூண்டுகிறாள். தலைவன் இரவிற்போந்தவழி அவனைக் காணவிடாது வேறு பலமொழிந்து தடுக்கின்றாள். பின்பு அவனைக் கண்டு,

இனமணிப்புரவி நெடுந்தேர்கடவி
மின்னிலைப்பொலிந்த விளங்கிணர் அவிழ்பொன்
தண்ணறும் பைந்தாது உறைக்கும்
புன்னையங்கானல் பகல் வந்தீமே" (அகம் 80)

என்று உரைக்கின்றாள்.

பகல்வரின் இரவு வருக என்றும், இரவுவரின் பகல் வருக என்றும் அலைக்கும் தோழியின் கருத்தை அறிந்து கொண்ட தலைவன் தலைவியுள்ளத்துக் காதலன்பின் திறம் காணவும், அதன் பெருமை கண்டு இன்புறவும் விரும்பி, விரைந்து மணம் புரிந்து கொள்ள விழையாதவன் போலக் களவு ஒழுக்கத்தையே நீட்டிக்கின்றான்.

தோழி அவன் கருத்தையுணராமல், அவன் களவின்பத்தையே மேலும் கருதுகின்றானே; அவன் கருத்தில் கடிமணம் பற்றிய நினைவே தோன்றவில்லையே என நினைக்கிறாள்; திருமணத்தைக் கடிதில் முடித்துக் கொள்க எனத்தானே தெற்றென எடுத்துரைப்பது தலைமைப் பண்பும் தலைமைச் செலவும் உடைய தலைமகற்குத் தகவன்று என எண்ணிக் குறிப்பாக உரைக்கின்றாள்.

தலைமகனைத் தனியே கண்டு, "யாயே கண்ணினும் கடுங் காதலள்; எந்தையோ நிலன் உறப்பொறான், சீறடி சிவப்ப எவன் இலஇயங்குதி என்னும்; யாமோ, பிரிவின்று இயைந்த துவராநட்பின், இருதலைப்புள்ளின் ஒருயிரம்மே", இது எமது நிலை, இனி நீவரின், தலைவி நின்னைக் கண்டு இன்புறும் திறம் இல்லாமையால் உயிர் வாழாள்" என்பாளாய், நீவரின் மெல்லியலோரும்தான் வாழலளே" (அகம் 12) என்று இசைக்கின்றாள்.

இது கேட்கும் தலைமகன் திருமண முயற்சியில் விரைந்து ஈடுபடாது நீட்டிக்கின்றான். தலைமகட்குக் காதலன்பு முறுகி உள்ளத்தை வருத்தி உடலை மெலிவிக்கிறது. தோழிக்கும் மனம் நிலைகுலைந்து

அழிகிறது. அந்நிலையில் தலைமகனை அத்தோழியே காண்கிறாள். வெளிப்படையாகவே விரைந்து மணம் செய்து கொள்ள வேண்டுமெனத் துணிந்து, "பெரும, குளிர்ந்த இச்சோலையில் யாம் தனித்திருப்பதறிந்து வந்தனை; நன்று; ஆயினும் எமக்கு நின் வரவு இன்பம் செய்யாது தீங்கே செய்தது'' என்பாளாய், ''பனியிருஞ்சோலை எமியம் என்னாய், தீங்கு செய்தனையே ஈங்கு வந்தோயே" என்றாள். இதனைச் செவியேற்றதும், தலைவியின் மதிமுகம் கண்டு மகிழ்வது கருதி மலர்ந்த முகத்துடன் வந்த அவனுடைய மனம் திடுக்கிட்டது; முகத்தில் வாட்டம் புலப்பட்டது. உடனே, தோழி நீ வாராது "நாளிடைப்படின் என் தோழி வாழாள்; தோளிடைமுயக்கம் நீயும் வெய்யை" என்றாள். என்றது, நீ வந்தொழுகும் காலத்தில் ஒரு நாள் வாராது இடைப்படின் தலைவி உயிர்வாழமாட்டாத அத்துணை இன்னல் எய்துகிறாள்; நின் காதலன்பையும் நான் அறிகின்றேன். நீயும் இடையறவு படாது வருதலைச் செய்வது, நீ அவள் பால் கொண்ட காதலின் பெருக்கத்தைப் புலப்படுத்துகிறது; எனவே நீவிர் இருவரும் ஒருவர் ஒருவரை இன்றி அமையாத ஒத்த அன்பினராய் உள்ளீர்கள் என்பாளாய், "நாளிடைப்படின் என் தோழி வாழாள் தோளிடை முயக்கம் நீயும் வெய்யை" என்றாள். இந்நிலையில் நீ வரைவு முயலாமல் களவே விரும்புவதால் வரும் பழியை எண்ணுகின்றாயில்லை. சான்றோர், பழியை எய்துவித்துப் பின்னர் இன்பம் நுகர்வது இல்லை; ஆதலால் நீ வரைந்து கொள்வதால் வரும் குற்றம் யாது? என்று வினவலுற்று, ''கழியக் காதலராயினும் சான்றோர் பழியொடுவரூஉம் இன்பம் வெஃகார், வரையின் எவனோ, வான்தோய்வெற்ப'' என்றாள். மல்லல் மலையனைய

மாண்புடைய நினக்கு இவளை மணந்து கொள்வது ஒருகாலும் மாசுதாராது என்று வற்புறுத்தற்கு, வான்தோய்வெற்ப என்று குறித்துரைக்கின்றாள்.

எங்களுக்கோர் ஆர்வம். கலைமான் வாழும் மலைச்சாரலில் நீவிர் இருவரும் மணந்தமை அறியாது பெற்றோர், பெண் கோள் ஒழுக்கமாய்த் தொன்று தொட்டுவரும் நும் திருமணத்தைச் செய்யுங்கால் விருந்தினர் போல யாங்கள் இருப்ப இவள் மேற்கொள்ளும் நாணத்தையும் ஒழுக்கத்தையும் காணவேண்டும் என்பாளாய், "கணக்கலை இகுக்கும் கறியிவர் சிலம்பில் மணப்பரும் காதல் புணர்ந்தமை அறியார், தொன்றியல் மரபின் மன்றல் அயரப் பெண் கோள் ஒழுக்கம் கண்கொள நோக்கி, நொதுமல் விருந்தினம் போல இவள், புதுநாண் ஒடுக்கமும் காண்குவம் யாமே" (அகம் 112) என்று சொல்லுகிறாள். தலைமகன் அவளை மலர்ந்து நோக்கிச் சிறு நகை செய்து நீங்குகின்றான்.

பின்பொருநாள் இரவில் தலைவன், தோழியும் தலைவியும் இருக்கும் செவ்வி நோக்கி அவர்கள் அறியாமல் சிறைப்புறம் சென்று நிற்கிறான். அதனைத் தோழி அறிந்து கொண்டாளாயினும், வெளியே புலப்படுத்தாது தலைவியொடு சொல்லாடுகின்றாள். காதல் நோய் மிகுந்து கலங்கிய மனத்தினளான தலைவி, தோழியை நோக்கி, "நம் தலைவர் வரும் காலம் இது; ஊர்மன்றும் நம்மனையும் ஒலியவிந்தன; கொன்றாற் போலும் கொடுமையுடன் இரவு யாமம் வரின் காதல் நோய் கடல் போல் பெருகிக் கரைபொழிகிறது'' என்பாளாய், ''மன்றுபாடவிந்து மனைமடிந்தன்று;

கொன்றோரன்ன கொடுமையோடு இன்றே, யாமம் கொளவரின் கனைஇக் காதல், கடலினும் உரைஇக் கரை பொழியும்மே" என்றாள். ஊரவர் ஒலியின்றி அடங்கும் இரவுப்போது இத்தகைய நினைவுகளை எழுப்புவது இயற்கையே என்று இயம்புகிறாள். நாம் இவ்வாறாக என் நெஞ்சு என் செய்கிறது தெரியுமா? கானநாடராகிய நம் காதலர் வருவதை அறிகிறது; மழை பொழிந்த இவ்விரவில் களிற்று முதுகில் கயிற்றால் உண்டாக்கிய தழும்புபோல அவர் வழியைக் காண்கிறது; இதில் இடையிடையே உள்ள பள்ளங்களில் நீர் நிறைந்திருக்கிறது. அவற்றை மிதித்துக் கொண்டு அவர் வருகின்றார்; அப்பொழுது என் நெஞ்சம் அவருடைய தளர்ந்த அடியைத் தாங்குகிறது. அவ்வாறு செய்தற்கு அது நின்னையோ என்னையோ முன் கூட்டியே உசாவியிருக்க வேண்டுமன்றோ என்பாளாய், அவன் வரும் வழியைக் "கானநாடன்வரூஉம் யானைக் கயிற்றுப் புறத்தன்ன கன்மிசைச் சிறுநெறி" என்றாள்; கரிய யானை கருங்கற் பாறையாகவும், அதன் முதுகில் உள்ள கயிற்றுத் தழும்பு, அப்பாறைமேல் தேய்ந்து தோன்றும் சிறு வழியாகவும் கூறுவது தலைமகனுக்கு இன்பம் தருகிறது. வழியிற் பள்ளங்களில் நீர் தேங்கி நிற்பதை, "மாரிவானம் தலைஇ நீர்வார்பு இட்டருங்கண்ண படுகுழி" எனவும், இருளில் அவன் தன் அடிகளைப் பைய வைத்து நடப்பதை "இருளிடை மிதிப்புழி" எனவும் சொல்லோவியம் செய்கிறாள். தோழிக்கு வியப்பு மேலிடுகிறது. அவர் கால் எடுத்துவைக்குந்தோறும் என் நெஞ்சம் அவர் அடியைத் தாங்குதல் நினைத்து அங்கே சென்றுவிட்டது என்பாள், "இருளிடை மிதிப்புழி நோக்கி அவர் தளரடி தாங்கிய சென்றது இன்று" என்று உரைக்கின்றாள். தோழி ஒன்றும் கூறமாட்டாது நின் நெஞ்சம் நன்னெஞ்சம் என்கிறாள்.

உடனே, தலைவி, தோழியைக் கைப்பற்றி, நன் நெஞ்சம் சென்றது எனக்கும் தெரியாது, நினக்கும் தெரியாது; இவ்வாறு "நன்னர் நெஞ்சம் என்னொடும் நின்னொடும் சூழாதுகைமிக்கு" சென்றது காண் என்று உரைக்கின்றாள்.

இதனைக் கேட்டதும் தலைவன் அன்பு மீதூர்ந்து அவர்கள் முன் சென்று இன்பவுரையாடி நீங்குகிறான்.

மறுநாளே தலைவன் திருமணத்துக்கு ஆவன செய்தல் மேற்கொண்டான். இதற்கிடையே அவன் தலைவி மனையின் அயலே சென்றானாக, அவன் செவிப்படத் தோழி தலைவியொடு உரையாடுபவளாய்,

"நீடுநீர் நெடுஞ்சுனை ஆயமொடு ஆடாய்
உயங்கியமனத்தையாகிப் புலம்பு கொண்டு
இன்னையாயினை; நின் நிறம் நோக்கி
அன்னை வினவின ளாயின் அன்னோ,
என்னென உரைக்கோயானே" **(அகம் 358)**

என்று சொல்லி வருந்துகிறாள்.

அவட்கு விடை கூறலுற்ற தலைவி, எனக்கும் ஒன்றும் விளங்கிற்றிலது; நமது தலைவர் மணவினையைத் தாழ்க்குவராயின், "வேறுணர்ந்து அன்னையும் பொருள் உகுத்து அலமரும்; மென்முறிச் சிறுகுளகு அருந்து (ஆர்ந்து) தாய்முலைபெறாமறி கொலைப்படுத்தல் வேண்டி, வெறி புரி ஏதில் வேலன் கோதை துயல்வரத் தூங்குமாயின், அதூஉம் நாணுவல் இலங்குவளை நெகிழ்ந்த செல்லல்" *(அகம் 292)* என்று உரைக்கின்றாள்.

மகட்கொடை வேண்டித் தலைவியின் பெற்றோரை அயலார் அணுகுகின்றனர்; அதனைத் தோழியறிந்து தலைவிக்குரைப்ப, அவள், "தோழி, யாக்கை

இன்னுயிர் கழிவதாயினும் நின்மகள் ஆய்மலர் உண் கண் பசலை, காதல் நோய் எனச் செப்பாதீமே" என்றாள். "யான் வேறு என் சொல்வேன்'' எனத் தோழி கவன்றாளாக, நாடன் நெஞ்சமர் வியன்மார்பு உடைத்தென அன்னைக்கு அறிவிப்பேங்கொல் அறிவியேங் கொல் என இருபாற்பட்ட சூழ்ச்சி, ஒருபால் சேர்ந்தன்று" (அகம் 52) என்று சொல்லுகின்றாள்.

இவ்வாற்றால் தலைவியின் ஆற்றாமை கண்ட தோழி, தலைவனை எதிர்ப்படுகின்றாள். அவன் அவளைக் கொண்டுடன் செல்லக் கருதுகிறான். அது கேட்டதும், தலைவியின் பெருநாணமும், சுரத்திடைச் செல்லமாட்டா மையும் காரணமாகக் காட்டி மறுத்தாள். பின்பு எய்தியுள்ள சூழ் நிலையை ஆராய்ந்து உடன் போக்குக்குத் துணிந்து இசைவு தந்து தலைவிக்குத் தெரிவிக்கலானாள். தலைவியை நோக்கி, இனி, "உன்னங் கொள்கையோடு உளம் கரந்து உறையும் அன்னை சொல்லும் உய்கம்;

ஈரம் சேரா இயல்பின் பொய்ம் மொழிச் சேரியம் பெண்டிர் கௌவையும் ஒழிகம்; நாம் உவத்தற்குரிய செய்தி யொன்றுள்ளது. தலைவர், பொம்மலோதி நம்மொடு ஓராங்கு இன்று செலவயர்ந்தனர்" என்றாள். அச்சொற்கள் தலைவிக்கு ஒருபால் உவகையும், உடன் போதற்கு ஒருபால் நாணமும் தோன்றக் கண்டு அதை நான் உணராமல் இல்லை; காட்டு யானைகள் ஆறு கடி கொள்ளும் அருஞ்சுரம் நிரையிதழ் உண்கண் மகளிர்க்கு அரிய'' என்பதை எடுத்துரைத்து அவரைச் செவழுங்குவித்த துண்டு; (அகம் 65) எனினும் வேறு வழியின்மையும் நான் உணர்கின்றேன்" என்று கூறுகின்றாள்.

இவற்றைச் செவியேற்ற தலைவி "ஆம், பைப் பயப்பசந்த நுதலும் சாய் ஐதாகின்று; என் தளிர்புரை மேனியும், பலரும் அறியத் திகழ்தரும் அவலமும் உயிர்கொடு கழியினல்லது எவனோ?" (அகம் 95) என்று சொல்ல அவள் அதனைத் தலைமகற்குரைப்பாளாய், "நன்னெடுங்கதுப்பொடு பொருந்தோள் நீவி, நின்னிவண் ஒழிதல் அஞ்சிய என்னினும் செலவுதலைக் கொண்ட பெருவிதுப்புறுவி" (அகம் 283) என்று உரைத்து உடன் போக்குக்கு உரிய காலமும் இடமும் குறித்தாள்.

போக்குத் துணிந்த நாளில் தோழி, தலைவியை நெருங்கி, "வேலும் விளங்கின; இளையரும் இயன்றனர்; தாரும் தையின, தழையும் தொடுத்தன" என்றாள். "செலவு மேற்கொண்டார்க்கு இது துணையாயின், வழியின் வெம்மைக்குக் காப்பு யாது" என்பாயாயின் கூறுவல் கேள்" எனத் தொடங்கிய தோழி, வெம்மை நீங்க மழை பெய்துளது என்பாள், "நிலம் நீரற்ற வெம்மை நீங்கப் பெயல் நீர் தலைஇ உலவையிலை நீத்துக் குறுமுறி ஈன்றன மரனே; நறுமலர் வேய்ந்தன போலத் தோன்றிப் பலவுடன் தேம்படப் பொதுளின பொழிலே" என்றாள். இனிக் காட்டினிடையே செல்லும் வழியும் நன்றாயிருக்கிறது; காலமும் பால்போல் விளங்கும் நிலவு தோன்றும் நல்லிரவு; புறப்படுதல் வேண்டுமெனத் தெரிவிப்பது போல மாலையும் வந்தது என்பவள், "கானமும் நன்றாகிய; பாலெனப் பரத்தரும் நிலவின் மாலைப்போது வந்தன்று தூது" என்றாள்.

தலைவிக்குத் தான் பிறந்து பயின்ற இடத்தையும் தன்னோடு உடன் பயின்ற தோழியையும் பிரியும் வருத்தம் மிகுந்தது. கருத்திற் கலக்கமும் கண்களில் நீரும் பிறந்தன.

உடனே தோழி, அவள் உள்ளத்தைத் தேற்றுவாளாய், நீயும் கலங்கா மனத்தையாகி என் சொல் நயந்தனை கொண்மோ'' என்றாள். தலைவி ஒன்றுங் கூறாது வாளாங்கிருப்ப, சிறிது இடித்துரைத்துத் தூண்டு முயற்சியுற்று, "தெற்றியுலறினும் வயலை வாடினும் நொச்சிமென்சினை வணர்குரல் சாயினும் நின்னினும் மடவள் நனி நின்நயந்த அன்னை." அவளைவிடுத்து நின் ஐயன்மாரை எண்ணுக. அல்லல் மிகினும் உள்ளத்தே அலமரல் எய்தாது புலிபோல் அடங்காவுள்ளமும் மடங்காச் செயலும் படைத்த செம்மல்கள். அவர்களது செம்மல் உள்ளத்தை நோக்கி நீயும் மனம் திண்ணியாளாதல் வேண்டும் என்பவள், "அல்லல் தாங்கி நின் ஐயர் புலிமருள் செம்மல் நோக்கி வலியாய்" (அகம் 259) என்று உரைக்கின்றாள். பின்பு அவண் போந்த தலைவற்குத் தக்கது கூறித் தலைவியை அவனுடன் கூட்டி அனுப்புகிறாள்.

மகள் போகியதறிந்து தாயும் பிறரும் வருந்துகின்றனர். அவள் பிரிவாற்றாது செவிலி பெரிதும் புலம்பி அவளைத் தேடிச் செல்லுகிறாள்.

அவள் உள்ளத்தே தலைவியின் பிள்ளைப்பருவ நிகழ்ச்சிகள் நினைவில் எழுகின்றன. "தேன் பெய்து மணிசெய் மண்டை (வள்ளம்)த் தீம்பால் ஏந்தி, ஈனாத்தாயர் மடுப்பவும் உண்ணாள் (அகம் 105); தாயர் வற்புறுத்தவும் அச்சுறுத்தவும் உண்ணாது பந்தர்க்கீழ் ஓடி இயலுவள்; அப்பெற்றியோள் "கொல்லை இரும்புனம் நெடிய என்னாது மெல்லென் சேவடி மெலிய, ஏகவல்லுநள் கொல்லோ" (அகம் 89) என ஏங்குகிறாள்.

செல்லும் வழியில் குடிநீர் இல்லாது வெயில் வீற்றிருந்த வெம்பல் அருஞ்சுரத்தில் மக்கள் ஊற்றுத் தோண்டி நீர் முகந்து உண்பது காண்கின்றாள்; தன் மகளை நினைக்கின்றாள்; "தேன்கலந்து அளைய தீம்பால் ஏந்திக் கூழையுளர்ந்து மொழிமை கூறவும் மறுத்த சொல்லளாகி, வெறுத்த உள்ளமொடு உண்ணாதவள், என் மனையினின்றும் அதை நினையாது கொண்டு சென்ற அறனிலாளன் தோண்ட வெய்துயிர்த்துப் பிறைநுதல் வியர்ப்ப உண்டனள் கொல்லோ" (அகம் 207) என்று சொல்லிப் புலம்புகிறாள்.

இவ்வாறு உடன் போக்கால் களவு வெளிப்படத் தலைமக்கள் மணம்புரிந்து கொண்டு மனையறம் புரிகின்றனர்.

அக்காலை அவள் மனைநலம் காண்டல் விருப்பால் தோழி வருகின்றாள். அவளைத் தலைவி பேரன்புடன் வரவேற்று இன்புறுகின்றாள். மனைவாழ்வின் கண் தலைவனது அன்பொழுக்கத்தை அறிய விரும்புகிறாள் தோழி. அவட்குத் தலைவி, உள்ளம் மகிழ்ந்து உவகை மீதூர்ந்து, தலைவன், நற்குடியிற் பிறந்தவன்; குடிசெயல் வகையில் குறையா ஆண்மையன்; அன்பாற் கூடியவரைப் பின்பு பிரிதல் இல்லாதவன்; தீயவற்றை வழுக்கியும் வாயாற் சொல்லாத மாண்பினன்; அன்பே அவன் வடிவு என்று கூறி என்னை அவற்கு மணம் செய்தனை எனத் தன் நன்றியைத் தெரிவிப்பாளாய், "குடிநன்குடையன் கூடுநர்ப்பிரியலன், கெடுநா மொழியலன் அன்பினன் எனக் கூறிப் புணர்த்தாய்" என்றாள். நீ கூறினவேயன்றி மேலும் நலங்கள் பலவுடையன்; அவற்றுள் சிலவே நீ அறியவல்லாய்

ஆயினை; ஆயினும் அத்தனையும் புனைந்துரையாகாது மெய்ம்மையே என்றற்கு வல்ல கூறிவாய்வதிற் புணர்த்தோய் நல்லை, காண்'' என்றும், இவ்வாறு அன்புடையாரின் அன்பறிந்து, அன்பால் அவரொடு புணர்த்தாய் ஆதலால் உன்பால் மாறா அன்புடையேன் என்றற்கு "நிற்காதலம், தோழி" என்றும் எடுத்துரைத்தாள். அது கேட்டதோழி களவுக்காலத்தே அவர்பால் விளங்கிய அன்பு கண்டு உண்மையாராய்ந்து அது செய்தேன்; அக்காலத்தே பெறற்கு அரிய நிலையில் இருந்தேம்; கற்புக் காலத்தே நாம் எளிய மாயினமாதலின் அவரது அன்பின்திறம் திரியாது சிறத்தல் வேண்டுமே; நீ கூறுவது என் கருத்தில் பல்வேறு எண்ணங்களை எழுப்புகிறது என்பாள் போன்ற குறிப்புடன் நோக்குகிறாள். அதனை உணர்ந்த தலைவி, அதியமான் நெடுமான் அஞ்சியை நினைப்பித்து, அவனுடைய பழம்புகழைத் தன் பாட்டினால் நிலைபெறுவித்த பாணன் எழுத்தெண்ணித் தாளவறுதி செய்யும் பெரும்பண்களில் வல்லுநன்; அவற்றை அடிமணையாகக் கொண்டு புதிது புதிதாகத் திறம் வகுத்து, மக்களை இன்புறுத்தும் புகழ் மிகுந்த இசைப் புலமை கைவந்தவன். அவன் புதுவது புனைந்த திறத்தினும் புத்தின்பம் நல்கிப் புந்திமகிழ்விக்கும் பொறப்புடையர் நம் காதலர் என்பாள், "கடும்பரிப்புரவி நெடுந்தேர் அஞ்சி நல்லிசை நிறுத்த நயவரு பனுவல், தொல்லிசை நிறீஇய உரைசால் பாண்மகன் எண்ணுமுறை நிறுத்த பண்ணினுள்ளும் புதுவது புனைந்த திறத்தினும் இனியன்'' என்றும், அவனது அன்பும் தலைநாள் போன்ற விருப்புறு நிலையில் குறையாது இன்பம் செய்கிறது என்பாளாய், "வதுவை நாளினும் இனியனால் எமக்கே'' என்றும் இயம்புகிறாள்.

இவ்வாறு தலைமகனது அன்புள்ளம், களவுக் காலத்தில் நிலவிய இடையீடுகளாலும் இடையூறுகளாலும் சிறிதும் உடைந்து தன் பெருக்கத்திற் சுருக்க மெய்தாது பிறங்குவது கூறியது, தோழிக்குப் பெரியதோர் உவகை நல்குகிறது. அவளும் தலைமகளோடே தங்கி அவள் செய்தற்குரிய அறங்கட்குத் துணை செய்கின்றாள்.

அகத்தில் வரும் மகளிர்களில், சொல் நிகழ்த்தும் தலைவி, தோழி, செவிலி ஆகிய மூவரும் சிறந்தோர் ஆவர். அவருள் தலைவி, பெண்மைக்கு வேண்டிய உயர் பண்புகள் அனைத்தும் நிரம்பப் பெற்றவள். உயரிய குடிப்பிறப்பும் மனையறத்துக்குரிய மாண்பும் அவளிடம் விளங்கித் தோன்றுகின்றன. தலைவியின் குணநலங்களைக் கூறவந்த தொல்காப்பியர் "அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்த நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப" என்று கூறுகின்றார்.

அச்சம் என்றவுடன், மனத்திண்மையின்றி எதனைச் செய்தற்கும் அஞ்சியொடுங்கும் கோழைமை என்பது பொருளாகாது. பழிபாவங்கட்கு அஞ்சும் பண்பே அச்சம் எனப்படுகிறது. திருவள்ளுவரும் "பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்'' என்ற குறட்பாவில் இதனை வற்புறுத்துகின்றார். தலைவன் செயல்வகைகளில் தவறு தோன்றுகிறது; அது தன் மனைவாழ்வுக்கு மாசுதரும் என்ற அச்சம் அவள் நெஞ்சை அலைக்கின்றது. தவறுபட்டார்க்குப் பீடுநடையும் பெருமித நோக்கும் அமைவதில்லை. அவன் தாழ்ந்த உள்ளத்தனாய், தன்பால் வரக்கண்ட தலைவி, தான் கூறுவது ஒருகால் தருக்குரையாக அவனுக்குத் தோன்றுமோ என்ற அச்சத்தால், மிக்க பணிவுடன்,

"தருக்கேம் பெருமநின் னல்கல் விருப்புற்றுத்
தாழ்ந்தாய்போல் வந்து தகவில செய்யாது
சூழ்ந்தவை செய்து மற்று எம்மையும் உள்ளுவாய்
வீழ்ந்தார் விருப்பற்றக்கால்" (கலி 69)

என்று விளம்புகிறாள். நம் குடிப்பெருமைக்கும் தகுதிக்கும் உரியவற்றை நன்கு எண்ணிச் செய்தல் வேண்டும் என்ற கருத்துத் தோன்ற, தகவில செய்யாது சூழ்ந்து பின் அவற்றைச் செய்யக்கருது; அதற்குயாமும் துணையாவோம் என்பாள், "சூழ்ந்தவைமற்றும் எம்மையும் உள்ளுவாய்" என்று கூறுகின்றாள்.

"அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது அஞ்சல் அறிவார் தொழில்" என்பர் திருவள்ளுவர். பெண்கட்கு வேண்டும் எனப்படும் அச்சம், அஞ்சத் தகுவதற்கு அஞ்சும் அச்சம். பழிபாவங்கட்கும் இழிவுபயக்கும் செயல்வகை தம்மையறியாது தோன்றுமிடத்தும் எய்தும் அச்சமே தொல்காப்பியர் எடுத்துரைத்தது. தலைவன்பால் தவறுகண்ட தலைவி அவனைக் கடிந்துரையாது அன்போடு வரவேற்கக் கண்ட தோழி வியந்து நோக்கினாள். அவட்கு விடைகூறித் தெளிவிப்பாள், "எள்ளின் இளிவாம் என்று எண்ணி அவர் திறம் உள்ளும் உயிர்க்காதல் நெஞ்சு" என்று கூறுகிறாள்.

இனி, மடம் என்பது அறியாமையன்று; இளமைக் காலத்து உலகியலின் பரந்த உண்மைகளை அறியாத நிலைமை. எக்காலத்தும் எவ்விடத்தும் சென்று பரந்து காணும் திறம் ஆண்கட்கு இருப்பது போல மகளிர்க்கு அமையாமையின், அந்த அறிவுச் சிறுமை மடம் எனக் குறிக்கப்படுகிறது. அந்நிலைமை இளமையொடு ஒத்து இயங்குதலால், அந்த நயம் பற்றி மகளிரைச் சான்றோர்

மடமகள், மடவரல், மடந்தை, மடவார் என்று குறிப்பர். முற்றும் அறியாமை என்ற பொருளதாயின், தொல்காப்பியர் முதலிய சான்றோர் பெண்கட்குரிய சீரிய பண்புகளுள் ஒன்றாகக் கூறமாட்டார்கள். அறிவு, செறிவு, நிறை முதலிய நற்பண்புகள் பெண்களிடமே சிறப்பாக அமைந்தவை என்று வற்புறுத்தவே, தொல்காப்பியர், "செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும் அறிவும் அருமையும் பெண்பாலான" என்று உரைக்கின்றார்.

கணவன்பால் கொண்ட காதலன்பின் மிகுதியால், "மணிக்கேழ் அன்னமா நீர்ச் சேர்ப்ப, இம்மை மாறி மறுமையாயினும் நீயாகியர் எம் கணவனை, யானாகியர் நின் நெஞ்சு நேர்பவளே" (குறுந். 49) என்றாள். அதனைக் கேட்ட தோழி, அதனை அவள் செயலில் காணவேண்டுமென எண்ணியிருக்கையில், ஒருகால் தலைவி தலைவனோடு புதுப்புனலாடச் செல்கின்றாள். புனலாடுங்கால், அவன் புணை பற்றியும் பற்றாமலும் நீந்தக் கண்டு, தானும் அவனோடு நீந்தினாள். இதனை நுணுகி நோக்கிய தோழி, இவள்,

"தலைப்புணைக் கொளினே தலைப்புணைக் கொள்ளும்
கடைப்புணைக் கொளினே கடைப்புணைக் கொள்ளும்
புணைகை விட்டுப் புனலோடு ஒழுகின்
ஆண்டும் வருகுவள் போலும்" (குறும் 222)

என்று வியந்து கூறுகிறாள்.

ஒருகால் தலைவன் நற்பண்பை வியந்து அவனுடைய நண்பன் உரைக்குமிடத்து, "ஏந்தலோடு எம்மிடை நற்பால் கேண்மை நாடொறும் எய்தல், அப்பாற் பிறப்பினும் பெறுகமற்று எமக்கே" என்றான். அதனைக் கேட்ட தோழி, "மாறிப்பிறக்குமிடத்து, முன்னைப்பிறப்பை

மறக்கச்செய்வது அதன் இயல்பு, என்று அறிவுடையோர் கூறுகின்றனர்'' என்றாள். தலைவியும், ஆம் என்று உடன்பட்டு, "சாதல் அஞ்சேன்; அஞ்சுவல், சாவின் பிறப்புப் பிறிது ஆகுவதாயின், மறக்குவென்கொல் என் காதலன் எனவே'' என்று மொழிகின்றாள். இதனால் அவளுடைய அறிவின் பெருமையை நன்கு காணலாம்.

இல்லிருந்து நல்லறம் புரியும் மகளுடைய மாண்பு கூறிய திருவள்ளுவர், "தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகை சான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண்'' என்றார். எனவே மனைத் தலைவிபால் தற்காத்தல், தற்கொண்டான் பேணல், தகைசான்ற சொற்காத்தல், சோர்வின்மை என்ற நான்கு மாண்புகள் இன்றியமையா என்பதை அறியலாம்.

தற்காக்கும் திறம் தலைவிபால் இளமையிலேயே அமைந்து கிடக்கிறது. ஒருகால் தலைவி தன் தாயொடு உரையாடி இருக்கையில், தலைவன் உண்ணுநீர் வேண்டி வந்தான். அவன் முற்றத்தே நின்று, "இல்லிரே, உண்ணுநீர் வேட்டேன் எனவந்தாற்கு அன்னை, அடர்பொன் சிரகத்தால் வாக்கிச் சுடரிழாய், உண்ணுநீர் ஊட்டிவா என்றாள்; என, யானும் தன்னை அறியாது சென்றேன் மற்று என்னை, வளைமுன்கைபற்றி நலியத்தெருமந்திட்டு அன்னாய் இவனொருவன் செய்தது காண் என்றேன்; என்றேனா, அன்னை அலறிப்படர்தந்தாள் என்றாள். தற்காக்கும் வன்மை என்பால் இல்லை என்று அவனோ அன்னையோ எண்ணலாகாது என்பதற்காகவே, "இவனொருவன் செய்தது காண் என்றேன்'' என்று சொன்னாள். தாய் இவளது மென்மை நினைந்து அஞ்சி அலறிக் கொண்டு ஓடி வந்தாள். அந்நிலையில் அவன்

அஞ்சியதும், அவனைக் காத்தற் பொருட்டுத்தான் மேற்கொண்ட சூழ்ச்சியும் புலப்பட, "தன்னையான் உண்ணுநீர் விக்கினான் என்றேன்" என்றாள். இதனால் தலைவி தற்காத்தலும் தற்கொண்டாற் பேணலும் ஆகிய இருநலங்களும் உடையளாதல் தெளிவு.

தன் கணவன் தன்பால் காதல் குன்றாது பிரிவிலா நெஞ்சத்தோடு உறைவது கண்டு, தலைவி அதனை வியந்து, "என்றும் என்தோள் பிரிபறியலரே" (நற். 1) என்று சொல்லுகிறாள். சொல் தவறாமையோடு, நாட்கள் பல கழியினும், மனத்தன்பு குறைதற்கு உரிய சொல்லும் செயலும் அவர்பால் தோன்றுவதில்லை என்றற்கு "நின்ற சொல்லர், நீடு தோன்றினியர்" என்பது அவளுடைய கூரிய அறிவை நன்கு புலப்படுத்துகிறது. அவனது அன்பின் பெருமையை "புரையமன்ற புரையோர் கேண்மை" என்று சொல்லிப் பின் அதை அளந்து கூறுபவள் போல, "நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று, நீரினும் ஆரளவின்றே, சாரல் கருங்கோல் குறிஞ்சிப்பூக் கொண்டு பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே" (குறுந். 3) என்று கூறுகிறாள். குறிஞ்சிப்பூக் கொண்டு பெருந்தேன் இழைக்கும் நாடன் என்பதில் ஓர் அரிய குறிப்புண்டு. குறிஞ்சிப்பூ பன்னிரண்டாண்டிற்கு ஒரு முறை பூப்பது; அதனுடைய தேனும் இனிமை மிக வாய்ந்தது. அதன் அருமை அறிந்து நாட்டவர் உடனே அதனை ஈட்டிக் கொள்வர்; அதுபோலத் தலைவனும் அரிய பொருள் தோன்றுமிடத்து உரிய முயற்சி செய்து மிகுதியாக ஈட்டும் வினைசெயல் திறமுடையன் என்று பாராட்டுகின்றாள். ஈட்டிய பொருளை எடுத்தாளும் உரிமையைத் தன்மனைக் கிழத்திபால் தந்து அறம் புரியச் செய்வதுபற்றி அவனது

அன்பும் அவன்பால் தனது அன்பும் நிலத்தினும் வானினும் கடலினும் மிக்க பரப்பும், உயர்வும் ஆழமும் உடையது என்கிறாள். இதனைத் தொல்காப்பியரும் பாராட்டி, "உரிமை கொடுத்த கிழவோன் பாங்கில் பெருமையின்திரியா அன்பு" என்று கூறுகின்றார்.

மேலும் தன்னைநயந்து இன்றியமையாது வாழ்பவரைக் கைவிட்டுச் சிறுசெயல் மேற்கொண்டு பெறற்கரிய பெருமையும் புகழும் நெகிழ விடுவது அவர்பால் அறவே இல்லை என்பது விளங்க,

> "நீரின்றமையா உலகம் போலத்
> தம்மின்றமையா நம்நயந்தருளி
> நறுநுதல் பசத்தல் அஞ்சிச்
> சிறுமை யுறுபவோ செய்பறியலரே" (நற். 1)

என்று உரைக்கின்றாள்.

பொருள் செயல், குடி செயல்வகைகள் காரணமாகத் தலைவன் பிரிந்து சென்றவழிக் குறித்த காலம் கடந்தமை கண்டு தோழி ஒருவாறு தலைவனைக் குறை கூறினாளாக, தலைவி, தன் கற்பு மாண்பு தோன்ற,

> "நன்னலம் தொலைய நலம்மிகச் சாஅய்
> இன்னுயிர் கழிவதாயினும் உரையல் அவர்நமக்கு
> அன்னையும் அத்தனும் அல்லரோ
> புலவியது எவனோ அன்பலங்கடையே" (குறுந். 93)

என்று இயம்புகிறாள்.

இனிய சுவைப்பொருள் மிக்கவழித் தெவிட்டல் போல அன்புமிக்க வழிப் புலவியும் பிணக்கமும் தோன்றிச் சினம் விளைவித்து இன்பம் நல்குவதுண்டு. இது பெரும் பான்மையும் தலைவிபால் தான் தோன்றும். நிறையும்

பொறையும் ஆகிய மாண்புமிக்க தலைவிக்கு ஊடல் உணர்வும் பிணக்கமும் தோன்றுவானேன் என்ற வினாவுக்குத் திருவள்ளுவர், அது உண்ணும் உணவில் உப்புக்கலப்பதுபோல என்பாராய், "உப்பமைந்தற்றால் புலவி அது சிறிது மிக்கற்றால் நீளவிடல்" என்பர். அதனை உணர்ந்தே தலைவி, அவன்பால் புலத்தற்குரிய தவறு இல்லையாயினும், உளதுபோலப் படைத்துக்கொண்டு ஊடுவதுண்டு. அக்காலை தலைவனது காதலன்பு வெளிப்பட்டு இன்பம் செய்வதனால், "இல்லைதவறு அவர்க்காயினும் ஊடுதல் வல்லது அவர் அளிக்குமாறு" என்று தலைவி கூறுகிறாள். (குறள். 1321)

இவ்வாறு ஊடல் தோன்றிய போதும், அவள் அவனது தகைமைக்கு மாறாக ஒன்றும் கூறமாட்டாள். "ஆறியகற்பின் அடங்கிய சாயல் ஊடினும் இனிய கூறும் இன்னகை" (பதிற். 16) ஆகிய இப்பண்புகளே தலைவிபால் சிறந்து விளங்குகின்றன. ஊடல் தோன்றியபோது அவட்கு இனியகூறும் இயல்பு எவ்வாறு அமைகிறது? "எழுதுங்கால் கோல்காணாக் கண்ணேபோல் கொண்கன், பிழைகாணேன் கண்டவிடத்து" என்று தான் இனிய கூறுதற்குக் காரணம் காட்டுகிறாள். காணமாட்டா மைக்குக் காரணம் யாது எனின், அவனோடு உண்டாகிய நட்பு என்பவள், "சிறுவெண் காக்கை, நீத்து நீர் இருங்கழி இரைதேர்ந்துண்டு, பூக்கமழ் பொதும்பர்ச் சேக்கும் துறைவனொடு யாத்தேம் யாத்தன்று நட்பே, அவிழ்த்தற்கரிது அது முடிந்தமைந்தன்றே" (குறுந். 313) என்றாள்; அதனால், அவனது தகைமையொன்றே நோக்குவது அவட்கு இயல்பாயிற்றேயன்றி, வேறு நலம் தீங்குகளை எண்ணுவதில் அவள் மனம் செல்லவில்லை.

அதனை அவள், தோழிக்குரைப்பது ஒருபால் நிற்க மன்றத்துநிற்கும் மாமரத்தின் தளிரை நோக்கி,

"மன்றப்பணைமேல் மலைமாந்தளிரே நீ
தொன்றிவ் வுலகத்துக் கேட்டும் அறிதியே,
மென்றோள் நெகிழ்த்தான் தகையல்லால்
யான் காணேன், நன்று தீதென்று பிற" (கலி. 142)

என்று கூறுவது காணலாம்.

"எள்ளின் இளிவாம் என்று எண்ணி அவர் திறம்
உள்ளும் உயிர்க்காதல் நெஞ்சு"

என்ற திருக்குறளிலும் அவள் தலைவனது சொல் (புகழ்) காத்தலே கடனாக எண்ணுவது காணலாம்.

ஒருகால், தலைவனொடு புலந்தே தீரவேண்டிய சூழ்நிலை எய்திற்று. அவனும் தன்மனையகம் வந்தான். ஆயினும், புலவி நிகழவில்லை. அதுகண்ட தோழி மிக்கமகிழ்ச்சியுற்று அவளை வாழ்த்தினாள்; அவட்குத் தலைவி தான்புலவாமைக்குக் காரணம் இது வென்பாளாய்,

"அம்மவாழி தோழி யான் இன்று,
அறனிலாளனைக் கண்ட பொழுதில்,
சினவுவென் தகைக்குவென் சென்றனென்
பின்னினைந்து இரங்கிப் பெயர்தந்தேனே" (ஐங். 118)

என்றாள். பின் நினைவதாவது, அவனைச் சினந்து எள்ளினால், அவன் தகைமைக்கிழிவு தோன்றும் என்பது, இதுகாறும் கூறியவற்றால், கற்பும் காதலும் நற்பால் ஒழுக்கமும் கிழவோள் மாண்புகள் என்று தொல்காப்பியர் வரையறுத்த குணநலங்கள் தலைவிபால் விளங்கக் காண்கின்றோம்.

இம்மாண்புகட்கு அணி செய்வது போல மற்றோர் சிறப்பும் தலைவிக்குண்டு. அது அவள் தன்மகனுக்கு ஆசிரியையாய் ஒழுக்கம் கற்பிப்பதாகும். உயர் தலைவன்பால் மாறா அன்புடையளாதலின் அவனது புறத் தொழுக்கம் அவள் மனத்தை அலைக்காமல் இல்லை. அக்குறைபாடு தன் மகன்பால் அமைதல் கூடாது என்ற கருத்தால்

"செம்மால், வனப்பெல்லாம் நுந்தையை ஒப்பினும் நுந்தை
நிலைப்பாலுள் ஒத்த குறி என்வாய்க் கேட்டொத்தி,
கன்றியதெவ்வர்க் கடந்து களங்கொள்ளும்
வென்றிமாட்டொத்தி பெரும மற்று ஒவ்வாதி
ஒன்றினேம் யாம் என்று உணர்ந்தாரை நுந்தைபோல்
மென்றோள் நெகிழவிடல்
பால் கொளல் இன்றிப் பகல்போல் முறைக் கொல்காக்
கோல்செம்மை யொத்தி பெருமமற்று ஒவ்வாதி
கால்பொரு பூவின் கவின்வாட நுந்தைபோல்
சால்பாய்ந்தார் சாயவிடல்
வீதலறியா விழுப்பொருள் நச்சியார்க்கு
ஈதல் மாட்டொத்தி பெரும மற்று ஒவ்வாதி
மாதர்மென்னோக்கின் மகளிரை நுந்தை போல்
நோய்கூர நோக்காய்விடல்" (கலி. 86)

என்று அறிவுறுத்துகின்றாள்.

தலைவி மனைக்கு அரசியாக ஆட்சி நடத்துபவளாதலின், அவளுடைய மனம் அறிவும் அன்பும் அறமும் திறம்பாது இயங்குதற்குத் துணையாய் அமைந்தவள் தோழி. தோழி என்ற சொல்லே அவள் தலைவியோடு ஒத்தநலமும் சிறப்பும் உரிமையும் உடையவள் என்பது விளக்கும், தோழமையென்ற சொல்லே மிக்க நன்மதிப்பும் உயர் கடமையும் நிறைந்தது

எனக்கம்பர் கூறுவது யாவரும் நன்கு அறிந்தது. "தோழமை யென்றவர்சொல்லிய சொல்லொரு சொல்லன்றோ" என்று குகன் வாய் மொழியாகக் கம்பர் உரைக்கின்றார்.

அகத்துறையில் வரும் மகளிருள் தோழியின் சொல்லும் செயலுமே ஏனை எல்லோரினும் மாண்புற்று விளங்குகின்றன. அவளுடைய கல்வியறிவினும் உலகியலறிவு மிக்க ஒட்பம் உடையதாகும். உலகியலறிந்து அதனோடு ஒப்ப 'ஒழுகுதல் கல்லாதவர் பலகற்றும் அறிவிலாதார் என்ற திருக்குறட்கு அவள் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குகிறாள்.

தலைவனுடைய சொற்களால் தலைவிபால் அவன் கழி பெருங்காதலுற்றுக் கையறவு படுகின்றான் என்பதைத் தோழி அறிந்து கொள்கிறாள்; ஆனால், "நாணும் மடனும் பெண்மையவாதலின், குறிப்பினும் இடத்தினும் அல்லது வேட்கை, நெறிப்படவாரா அவள் வயினான" என்று தொல்காப்பியரும், "நோயலைக் கலங்கி மதனழி பொழுதில், காமம் செப்பல் ஆண்மகற்கு அமையும், யாம் எம் பெண்மை தட்ப நுண்ணிதின்தாங்க" என்று இளந்திரையனாரும் கூறுவது போலத் தலைவி தன் கருத்தைக் கண்போன்ற தோழிக்கும் தெரிவிக்கின்றா ளில்லை. தானாகவே தோழி தலைவிக்குரைப்பதும் அறமாகாது. இங்கே தான் தோழியின் மதி நுட்பம் சிறந்த துணை புரிகிறது. மகளிர் தமது கருத்தில் ஒருத்தனுக்கு இடம் அளித்துவிட்டால் பின்பு அதனைத் தெய்வத்துக்கும் இடமாக்கார். அதனைக் கருவியாகக் கொண்டு தோழி ஒரு சூழ்ச்சி செய்கிறாள். நல்ல கணவனைப் பெறுதல் வேண்டிக் கன்னிப் பெண்கள் பாவை நோன்பும் பிறைதொழுவதும் செய்வது அந்நாளை மரபு. கணவன்

தோன்றியபின் அந்நோன்பும் பிறை தொழுதலும் ஆகாதவை. அதனால், மாலையில் பிறை தோன்றக் கண்டு தலைவிக்குக் காட்டி, "முன்னும் தொழத்தோன்றி முள்ளெயிற்றாய் அத்திசையே இன்னும் தொழத் தோன்றிற்று ஈதோகாண், மன்னும், பொருகளிமால் யானைப் புகார்க் கிள்ளி பூண் போல், பெருகு ஒளியால் மிக்க பொறை" என்று உரைக்கின்றாள். இதில் முன்னே நாம் தொழுமாறு தோன்றிய இப்பிறைத் திங்கள், இப்பொழுதும் நாம் தொழுதல் வேண்டி, ஒளிபெருகித் தோன்றுகிறது காண் என்பாளாய். முன்னும் தொழத்தோன்றி, அத்திசையே இன்னும் தொழத் தோன்றிற்று ஈதோகாண்" என்று சொல்லி, நாம் நன்கு கண்டுதொழ வேண்டி, ஒளி பெருகித் தோன்றுகிறது என்றற்குப் "பெருகு ஒளியால் மிக்கபிறை" என்று கூறுகிறாள். தலைவி தன் மாட்டாமையையும் அதற்குரிய காரணத்தையும் சொல்லி விடுகிறாள்.

சங்ககாலத்தில் மணம் புரிந்து கொள்ளும் ஆடவர் அதற்குரிய பொருளைத் தாமே தேடிக் கொணர்தல் வேண்டும்; பெற்றோர் செய்த பொருளைக் கொண்டு மணம் செய்து கொள்வது அவர்களின் ஆண்மைக்குப் பெருமையன்று என்பது கருத்து. உரையாசிரியர், பெற்றோர் செய்த பொருள் கொண்டு மணம் செய்து கொண்டால் பிதிரரும் தேவரும் இன்புறார் என்று கூறுவர். அதனால் தலைவன் மணத்துக்குப் பொருள் கொணரப் பிரியக் கருதித் தோழிக்குக் கூறவும், அதனை மறுத்தல் கூடாமையின், காலம் நீட்டியாது விரைந்து போதரவேண்டும்; நின் பிரிவு தரும் வருத்தத்தை நீயல்லது நீக்குவார் இல்லை என்ற கருத்துப்பட,

"பெருநன்று ஆற்றின் பேணாரும் உளரே
ஒரு நன்று உடையளாயினும் புரிமாண்டு
புலவி தீர அளிமதி ...... தண்ணறுஞ்சாரல்
மென்னடை மரையா துஞ்சும்
நன்மலை நாட நின்னலது இலளே" (குறுந். 115)

என்று சொல்லுகிறாள். மறுபடியும் அவள் தலைவியின் நிலையை உரைக்கலுற்றவள்,

"தாயுடன்று அலைக்கும் காலையும் வாய்விட்டு
அன்னாய் என்னும் குழவி போல,
இன்னா செய்யினும், இனிது தலையளிப்பினும்,
நின் வரைப்பினள் என் தோழி,
தன்னுறு விழுமம் களைஞரோ இலளே" (குறுந். 397)

என்று சொல்லி விடுக்கின்றாள்.

பின்பு அத்தோழி, தலைவி அவன் பிரிவு நினைந்து வருந்தாமைப் பொருட்டு, "மகிழ்நன் மார்பே வெய்யையால் நீ, அழியல் வாழி தோழி, நன்னன் நறுமா கொன்று நாட்டிற்போக்கிய ஒன்றுமொழிக் கோசர்போல, வன்கண் சூழ்ச்சியும் வேண்டுமால் சிறிதே" (குறுந். 73) என்று சொல்லி, தலைவனது நட்புறவைப் புகழ்ந்து, "பெருங்கை இருங்களிறு ஐவனம் மாந்திக், கருங்கால் மராம்பொழில் பாசடைத்துஞ்சும் சுரும்பிமிர் சோலை மலை நாடன்கேண்மை பொருந்தினார்க் கேமாப் புடைத்து" (ஐந். எழு. 12) என்று கூறுகிறாள். பெருங்கையானை தனக்குரிய ஐவனம் மேய்ந்துண்டு மராமரப் பொழிலில் இலையுதிர்ந்துள்ள நிலத்தே கிடந்து சுரும்புபாட இனிதுறங்கும் என்று நீயும் அவன் செல்வ மனையிடத்து நுகர்வன நுகர்ந்து தமர் பாராட்ட இனிது உறைவாய் என்ற குறிப்பும் தோன்றக் கூறுகிறாள். இவ்வாறு

இருவர்பாலும் தகுவனகூறி அவர் வாழ்வு சிறப்பதே தன் நினைவும் சொல்லும் செயலும் குறிக்கொண்டமையச் செய்வது தோழியின் செயலாவது காணலாம்.

நற்றாயின் தூண்டுதலால் அவளுடைய செவிலி தோழியை வினவுகையில், உண்மையை மறைக்காமலும் அதனால் தலைவிக்கு ஒரு களங்கமுண்டாகாமலும் நயமாக உரைக்கின்றாள். "அன்னாய் வாழி வேண்டு அன்னை நின்மகள், பாலும் உண்ணாள் பழங்கண் கொண்டு, நனிபசந்தனள் எனவினவுதி, அதன்திறம், யானும் தெற்றெனவுணரேன், மேனாள் மலிபூஞ்சாரல் என்தோழிமாரோடு ஒலிசினை வேங்கை கொய்குவம் சென்றுழிப் புலிபுலி யென்னும் பூசல் தோன்ற ... வரிபுனை வில்லன் ஒருகணை தெரிந்து கொண்டு, யாதோமற்றம் மாதிறம் படரென வினவி நிற்றந்தோனே, அவற்கண்டு எம்முள் எம்முள் மெய்ம்மறைபு ஒடுங்கி, நாணி நின்றனெமாகப் பேணி, ஐவகை வகுத்த கூந்தல் ஆய்நுதல், மையீரோதி மடவீர் நும் வாய்ப் பொய்யும் உளவோ என்றனன் ... (யாம் எதிர்மொழி ஒன்றும் கூறேமாக) நின்மகள் உண்கண் பன்மாண் நோக்கி சென்றோன்மன்ற அக்குன்று கிழவோனே; பகன்மாய் அந்திப் படுசுடரமையத்து, அவன் மறைதேஎம் நோக்கி மற்று இவன் மகனே தோழி என்றனள், அதனளவு உண்டு கோள் மதிவல்லோர்க்கே" (அகம். 48) என்று தோழி கூறுகிறாள்.

தாயர் மனத்தில் பெருங்கலக்கம் பிறக்கிறது. அதனைத் தோழி நோக்குகின்றாள்; தலைவியின் மனப்பான்மையையும் எண்ணுகிறாள்; தலைவனது கழிபெருந்தகைமையும் அவள் கருத்தில் நிலவுகிறது. தனது நிலையையும் எண்ணுகிறாள். புனத்தே விளையாடவிட்ட

தாயின் அன்பையும் ஆராய்கிறாள். "நின்குற்றமில்லை நிரைதொடியும் பண்புடையவள்; என் குற்றம் யானும் உணர்கலேன் - பொன்குற்று அருவி கொழிக்கும் அணிமலைநாடன் தெரியுங்கால் தீயதிலன்'' என்று சுருங்கச் சொல்லி, செவிலி எய்திய வருத்தத்தை வடித்தெடுத்து அறியுநர் வினாயும், தெய்வங்களைப் பரவியும் தொழுதும் விரவுமலர்தூயும் வேறுபல் உருவின் கடவுட்பேணி நறையும் விரையும் ஓச்சியும் அலவுற்று, எய்யா மையலை நீயும் வருந்துதி; என்று சொல்லிச் செவிலியின் மனத்தை நெகிழ்விக்கிறாள். தலைவி நிலையை விளக்கத் தொடங்கி, அவள், தன் 'உட்கரந்துறையும் உய்யா அரும்படர் செப்பல் வன்மையின் செறித்து அடக்கிக் கொண்டாள். பின்பு யான் கடவியதனால், அவள் பையத்தன் வாய் திறந்து, "சால்பும் வியப்பும் இயல்பும் குன்றின், மாசறக் கழீஇ வயங்கு புகழ் நிறுத்தல், ஆசறு காட்சி ஐயர்க்கும் அந்நிலை எளிய என்னார் தொன்மருங்கு அறிஞர் மாதரும் மடனும் ஓராங்குத்தணப்ப நெடுந்தேர் எந்தை அருங்கடி நீவி, இருவேம் ஆய்ந்த மன்றல் இதுவென நாம் அறிவுறாலின் பழியும் உண்டோ'' என்றாள். அது கேட்டு நாம் அறிவித்தல் போலத் தலைவர் வாராராயின் என் செய்வது; "யாம் மகள் ஈதும் நீர்மகள் கொண்மின் என யாரும் தாம் மகள் நேரார்" (சீவக. 1056) அன்றோ என்றேன். அதற்கு அவள், ''ஆற்றின் வாராராயினும் ஆற்ற ஏனையுலகத்தும் இயைவதால் நமக்கென, மம்மர் நோக்கம் கலங்கிக் கையற்று "ஆனாச் சிறுமையள் இவளும் தேம்பும்". இங்கே எனது நிலை மிக்க இடுக்கணுற்று இரங்கத் தக்கதாயிற்று. ''இகல் மீக்கடவும் இருபெருவேந்தர்,

வினையிடை நின்ற சான்றோர்போல இருபேரச்சமொடு யானும் ஆற்றலென்". உலகியலின் திறம் வேறு. மகட்கொடையால் விளையும் நலங்களும் மகள் வேண்டினோரின் குடிமைச் சிறப்பும் தகுதியும் தமக்கு ஒப்பவோ சிறிது உயர்ந்தோ இருத்தல் வேண்டும் என்பது மகட் கொடைக் கண் நிலவும் உலகநடை. அதனைத் தழுவி நடப்பது ஒட்பம் என்றும் அதனைக் கடந்தோ, சுருங்கியோ நடவாமை அறிவுடைமையென்றும் திருவள்ளுவர் கூறுவர். அதனை நன்கு ஆராயாது மேற்கொண்ட திறத்தை உரைக்கின்றேன் என்பாள், "கொடுப்பின் நன்குடைமையும் வண்ணமும் துணையும் பொரீஇ எண்ணாது, எமியேம் துணிந்த ஏமம்சால் அருவினை" என்று உரைக்கின்றாள். நன்கும் நிரலும் வண்ணமும் துணையும் ஒப்பநோக்கே மாயினும் அவை தாமாகவே நன்கு அமைந்துள்ளன என்றற்கு ஏமம்சால் அருவினை என்றும், இவ்வினைவிளைவை நேரிற்பெற்று நுகரும் திறம் எமக்கே உரிமையாதல்பற்றி யாமே துணிந்தேம் என்றற்கு எமியேம் துணிந்த அருவினை என்றும் குறிப்பிட்டாள். பெற்றோரும் சான்றோரும் செய்தற்குரிய ஆராய்ச்சி நிகழ இடம் தராமைபற்றி நீ சினம் கொள்ளுதற்கு இடமுண்டு; அது நிகழ்ந்த வண்ணம் கூறுவேன்; அது கேட்கின் நீ சினம் கொள்ளாது எம்மை வியந்து பாராட்டுவாய் என்பாளாய், நிகழ்ந்த வண்ணம் நீ நனியுணரச் செப்பலான்றிசின் சினவா தீமோ" என்று முன் மொழிகின்றாள். பின்பு அவள், யானையினின்றும் தங்களைக் காத்து அன்பு செய்த தலைவனது அருஞ்செயலை விரித்துக் கூறி, அவனைக் "குன்று கெழு நாடன் எம் விழைதருபெருவிறல்" என்றும், "நேரிறை முன்கைபற்றி நுமர்தர நாடறி நன்மணம் அயர்கம்

சின்னாள், கலங்கல், ஓம்புமின் இலங்கிழையீர் என ஈரநன்மொழி கூறி," பொழுது புலர்ந்தமையின் எம்மை நம் "மூதூர் வாயில் உண்டுறை நிறுத்துப் பெயர்ந்தனன்" என்று சொல்லி அது கொண்டு, தலைவி, நாளும் "வலைப்படு மஞ்ஞையின் நலம் செலச் சாய் நினைத்தொறும் கலிழுமால்'' என்று மொழிகின்றாள். இதன்கண் தலைவனது உயர்ந்த பண்பை வெளிப்படுத்துகிறவள், இடையிடையே அவன் தலைவியைத் தனித்துக் காணமுயன்று, அது மாட்டாமையால், "இளமையின் இகந்தன்று மிலன் வளமையின் தன்னிலை தீர்ந்தன்று மிலன்" என்று கூறுகிறாள். இளமை நலமிகுதியால் இவளது நிலைமையை எண்ணி யறியும் அறிவு உரமும் செல்வமிகுதி பயக்கும் தருக்குணர்வால், இவளைக் காண்டலருமைக்கு உள்ளத்தே துனியுற்றுக் கையொழியாத பெருமையும் உடையன் எனத் தாய் நன்கு தெளியுமாறு இனிதுரைக்கின்றாள்.

இனி, தலைமக்கள் மணம் செய்து கொண்டு மனையறம் புரிகையில் அவரது வாழ்வு பெருமையாற் பிறங்குதல் வேண்டித் தலைவன் அறிவு பொருள் புகழ் முதலியன குறித்துத் தன் மனையின் நீங்கி வேறு நாடுகட்குச் செல்லுதல் உண்டு. அக்காலத்து வழியருமையும் கொடுமையும் இளமையின் வளமையால் பிரிவருமையும் காதலர் உள்ளத்தில் மிக்க கலக்கத்தையும் துயரத்தையும் தருவது இயல்பு. இந்நிலையில் இருவர்க்கும் தகுவன உரைத்து அவரது வாழ்வு அறம் திறம்பாது புகழ்விளைவிக்கும் செயலில் ஈடுபடச் செய்யும் கடமை தோழிக்கு எய்துகிறது. தலைவனுடைய செல்வ நிலையையும் தலைவியின் அன்புமிகுதியையும் எண்ணும்

தோழி, தலைவன் பொருள் வேண்டிப் பிரிவது சிறவாமை காண்கிறாள். தனது பொருட்பிரிவை அவன் குறிப்பாகத் தோழிக்கு உணர்த்தினானாக, அவள் அதுபற்றிச் சிந்திக்க லுற்றாள். அவனும் நுண்ணிய அறிவினனாதலின், தலைவிபால் தனக்குள்ள காதலன்பு வெளிப்படுமாறு அவள் நலங்களைப் புனைந்து பேசலுற்றான். அதுதான் தக்க செவ்வியென்று கைக்கொண்டு, துணைமலர் எழில்நீலத்து ஏந்தெழில், மலருண்கண், மணமௌவல் முகையன்ன மாவீழ்வால் நிரைவெண்பல், மணநாறும் நறுநுதல் மாரிவீழ் இருங் கூந்தல், சிலநிரைவால்வளை செய்யாய் எனப் பலபல கட்டுரை பண்டையின் பாராட்டி உரைக்கின்றீர். பண்டு இவ்வாறு பாராட்டியதற்குக் காரணமுண்டு; அப்போது நுமது உள்ளத்து அன்பினை யாம் அறிய உணர்த்துவது கருத்தாக இருந்தது; யாங்களும் அதனால் மனம் உவந்தோம். இப்போது இத்துணைப் பாராட்டு வேண்டாவே; வேண்டாத இவ்விதப்புரை எமது உணர்வைத் தூண்டவே உங்கள் கருத்தை உணர்ந்து கொண்டோம். "இனிய சொல்லி இன்னாங்குப் பெயர்ப்பது, இனி அறிந்தேன். அது துனியாகுதலே" என்றாள். தனது மறைவான எண்ணம் வெளிப்படுகிறதே என்ற நினைவு எழவே அவன் முகத்தில் அசடு வழியலுற்றது. அது கண்டதும், தோழி, பொருளல்லவரைப் பொருளாகச் செய்வதாதலால், பொன்னும் மணியுமாகிய "பொருளல்லால் பொருளும் உண்டோ என, மருளிகொள் மட நோக்கம் மயக்கப்பட்டு அயர்த்தாயோ" என்றாள். "பொருளல்லது இல்லை பொருள்" என்ற உணர்வு உமது அறிவை மயக்கிவிட்டது; அதனால் பிறந்த மருட்சி நுமது பார்வையிலும் முகத்திலும் வயங்கித் தோன்றுகின்றது என்பாள். "மருளிகொள் மட நோக்கம்" கண்டேன்; நீ

பொருள் வேட்கையால் மயங்கி எமது அன்பை மறந்தாய் என்பாள், "மயக்கப்பட்டு அயர்த்தாய்" என்றாள்.

நிறைந்த அன்பால் எம்மையல்லது பிற நினையாது நிமிர்ந்து நின்ற உன் உள்ளத்தே இந்தப் பொருளல்லாத பொருள் நினைவு எவ்வாறு தோன்றிற்று என எண்ணினேன்; ஏதிலார் யாரோ உனக்கு இவ்வெண்ணத்தை ஊட்டி விட்டனர்; அவர் உரையையே நீ பொருளாகக் கருதிவிட்டாய் என்பாள், "காதலார் எவன் செய்ப பொருளில்லாதார்க் கென ஏதிலார் கூறும் சொல் பொருளாக மதித்தாயோ" என்றாள். காதலன்பு நாளும் பெருகி அருட்செல்வத்தை எய்துவிக்கும் சிறப்பியல்பை அறியாத ஏதிலார் கூறும் சொல் பொருளாகாது என்றற்கு ஏதிலார் சொல் மதித்தாயோ என்றாள்.

இனி, அன்புடைய மனைவாழ்வு நல்கும் இன்பத்துக்கு நெறியிரண்டு; ஊடலும் கூடலும் என்பன; இவை ஒன்றுக் கொன்று ஏதுவும் பயனுமாய் இன்பத்தை விளைவிப்பன. பொருட்பேற்றுக்கும் நெறியிரண்டுண்டு; ஒன்று நேரியது; மற்றது மாறியது. மாறிய நெறியாவது செம்மை நெறியை இகந்து நின்று இம்மைக்கும் மறுமைக்கும் துன்பம் பயப்பது. இது பொருட்குள்ள குறை. இதனை விரும்பி இவளைப் பிரிந்து செல்லக் கருதுவது பீடன்று என்பாள், "செம்மையின் இகந்து ஓரீஇப்பொருள் செய்வார்க்கு அப்பொருள், இம்மையும் மறுமையும் பகையாவதறியாயோ" என்றாள்.

நீ நெறி விலக்கிப் பொருள் செய்தலும் கூடும்; "அறன் கடைப்படா வாழ்க்கையும் என்றும் பிறன்கடைச் செலாச் செல்வமும் இரண்டும் பொருளினாகும்" என்று தலைவன் கூறவும், அவன் மனம் பொருட் பிரிவு நோக்கி

நிற்பதை உணர்கிறாள் தோழி. அவனை நோக்கி, பெரும நுமது கருத்து அதுவாயின், "எம்மையும் பொருளாக மதித்தீத்தை நம்முன் நாம், கவவுக் கைவிடப்பெறும் பொருள் திறத்து அவவுக் கைவிடுதல்; அதுமன்னும் பொருள்'' என்று உரைக்கின்றாள். பொருளே நும் காதலாயின், எம்மையும் அப்பொருளாக மதிக்க வேண்டுகிறேன். என்றாலும், எம் கூட்டத்தைக் கைவிட்டுச் சென்று பெறற்கரிய அப்பொருள்மீது அவாக் கொள்ள வேண்டா; அந்த ஆசையின்மையே நிலையான பொருளாகும். இக்கூற்று, "செல்வம் என்பது சிந்தையின் நிறைவே, அல்கா நல்குரவு அவா எனப்படுமே'' என்ற குமரகுருபரரது அறிவுரையை நினைப்பிக்கின்றது.

இவ்வாறு தலைவிபக்கல் நின்று தலைவனைப் பொருட்பிரிவில் நினைவு கொள்ளாவாறு தோழி பேசினும் தலைவன், காதலினும் கடமையே பெரிது எனவற்புறுத்தி நீங்குகிறான். தோழியும் அவன் சொல்லை மேற்கொண்டு தலைவிக்குத் துணையாய் உரியபணிபுரிந்து ஒழுகுகின்றாள். தலைவிக்குப் பிரிவுத் துயர் பெருகக் கண்டு தலைவன் விரைந்து வருவன் என்பாளாய், "அரிதாய அறன் எய்தி அருளியோர்க் களித்தலும் பெரிதாய பகைவென்று பேணாரைத் தெறுதலும் புரிவமர் காதலின் புணர்ச்சியும் தரும் எனப் பிரிவெண்ணிப் பொருள் வயின் சென்ற நம் காதலர், வருவர் கொல் வயங்கிழாய் வலிப்பல்யான் கேள்இனி'' என்று உரைக்கின்றாள். அருளப்படுவோர்க்கு அளித்தல் அறமும் பகைதெறுதல் பொருளும், காதலரொடு கூடி வாழ்தல் இன்பமும் பொருளால் ஆகும் என்பது கருத்து. இவ்வாறு உறுதியென உணர்ந்தோர் கூறும் பொருள் கருதிச்

சென்றாராகலின் அவர் விரைந்து வருவர் என்றது கேட்ட தலைவி, பொருள்மேற் சென்ற காதலர் உள்ளம் மேன்மேலும் அப்பொருளையே நாடுமே யன்றி வேறில்லை; "செயல்படுமனத்தர் செய்பொருட்கு அகல்வர், அது அதன் பண்பு" *(நற். 24)*; அதன் பிணிப்பினின்றும் அவர் விரைந்து வருவர் என்பது எவ்வாறு பொருந்தும் என்று உரைக்கின்றாள். அவட்குத் தோழி, அவர் பிரிவுரைத்த போது நினது பிரிவாற்றாமை நினைந்து எம்மையும் உடன்கொண்டு சென்மின் என வேண்டினேனாக, செல்லும் காடு, அடி தாங்கும் அளவின்றி அழலன்ன வெம்மையும் இலையுதிர்ந்த மரங்களும், வாடிய மூங்கில்களும் பொருந்தித்துன் புறுத்தும் தகையதாகும் என்று சொன்னவர், அங்கே "துடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப் பிடியூட்டிப் பின்னுண்ணும் களிறு எனவும் உரைத்தனர்". தானும் தன் பிடியும் உண்ணக் கருதிய சின்னீரைக் கன்று உண்டு கலக்கியதற்கு வெகுளாது எஞ்சிய நீரைக் காதல் மடப்பிடிக்கு ஊட்டிப் பிறகே களிறு அருந்துவது காணுமிடத்துக் காதலர் உள்ளம் நம்மை நினைக்கும் அன்றோ? ஒருபால், வெயில் வெம்மைக்கு ஆற்றாது பெடைப்புறா வருந்தக் கண்ட அதன் சேவல், தன்மென் சிறகை விரித்து விசிறியாற்றும் என்பார், "அன்பு கொள்மடப்பெடை அசைஇய வருத்தத்தை மென்சிறகரால் ஆற்றும் புறவெனவும் உரைத்தனர்; மற்றொருபால், எங்கும் நிழலின்மைகண்டு வெயில் வெம்மைக்கு ஆற்றாத பெண்மானது வருத்தத்தைக்கண்டு மனம் வெதும்பிய ஆண்மான், தான் வெயிலில் நின்று தன் நிழலில் அது தங்குமாறு செய்யும் என்பாராய், "அக்காட்டுள் இன்னிழல் இன்மையால் வருந்திய

மடப்பிணைக்குத் தன்னிழலைக் கொடுத்தளிக்கும் கலையெனவும் உரைத்தனரே என்று சொல்லி,

"இனைநலம் உடைய கானம் சென்றோர்
புனைநலம் வாட்டுநரல்லர் மனைவயின்
பல்லியும் பாங்கொத்திசைத்தன,
நல்லெழில் உண்கணும் ஆடுமால் இடமே **(கலி.11)**

என்று தேற்றுகின்றாள்.

இனி, செவிலியென்பவள் தலைவியை வளர்த்த தாய். தலைவியின் உள்ளம் உடல் ஆகிய நலங்களை நுணுகி நோக்கிப் பாதுகாக்கும் வகையில் தோழிபோலச் சிறந்து, தலைவியும் தோழியும் உரைப்பவற்றைச் செவியேற்கும் உரிமையால், அவளையே பெரும்பாலும் தாய் என்பர். "ஆய்பெரும் சிறப்பின் அருமறைகிளத்தலின், தாய் எனப்படுவோள் செவிலி யாகும்" என்று தொல்காப்பியர் கூறுகின்றார். அவளைத் தோழியின் தாய் என்றும் உரைப்பர்.

செவிலியின் மனமாண்பு காண்டற்குத் தலைவி போக்குடன் பட்டுச் சென்ற வழி அவள் வருந்திக் கூறுவனவற்றால் நன்கு அறியலாம்.

தலைவி தலைவனொடு சென்றாள் என்ற செய்தி தெரிந்ததும் செவிலி எய்தும் துயர்க்கு அளவில்லை. அவள் புலம்புவது அயலகத்து முதுபெண்டிர் தேற்றுகின்றனர். அவர்களை நோக்கி, "தாங்குநின் அவலம் என்றனிர் அது மற்று யாங்ஙனம் ஒல்லுமோ அறிவுடையீரே" (நற். 184) என்று சொல்லி, அவள் விளையாடிய நொச்சி நிழலையும் மேடையையும் காணுந்தோறும் என் உள்ளம் வெந்து கழிகிறது என்பாள், "உள்ளினும் உள்ளம் வேமே உண்கண் மணி வாழ்பாவை நடைகற்றன்ன என் அணியியல்

குறுமகள் ஆடிய, மணியேர் நொச்சியும் தெற்றியும் கண்டே" (நற். 184) என்று கூறுகின்றாள். தலைவியைத் தேடிச் சென்று காணாது திரும்பி வந்தவர் சொற் கேட்டதும், தலைவி வைத்து விளையாடிய பாவை கிளி, பூவை யாகியவற்றைப் பார்த்து,

"இது என் பாவைக்கு இனிய நன்பாவை
இது என் பைங்கிளி எடுத்தபைங்கிளி
இது என் பூவைக்கு இனிய சொல் பூவை"

என்று புலம்பி இவற்றைக் காண்டொறும் காண்டொறும் கலங்க நீங்கினளோ என் பூங்கணோளே (ஐங். 375) என்பது நம் நெஞ்சை உருக்குகின்றது.

தலைவி சென்ற வழி வெயில் வீற்றிருந்த வெம்பலை யரும்சுரம் என்பது கேள்வியுறும் செவிலி, அக்கொடுஞ் சுரத்தில் என்மகளைக் கொண்டு சென்றானே பொய்வல்காளை, அவன் தாய் என்னைப் போல ஒருநாளைக்கு வருந்துவாளாக என்பாளாய்,

"நினைத்தொறும் கலிழும் இடும்பை எய்துக, வெஞ்சுரம் என்மகள் உய்த்த வம்பமை வல்வில் விடலை தாயே" (ஐங். 373) என்று வைதுரைக்கின்றாள். "எல்லாம் விதிப்படி நடக்கும்; விதியைத் தான் நோக வேண்டும்" என்று ஏனைமகளிர் உரைக்கவே, அதனால் செவிலி கண் சிவந்து "நாடொறும் கலிழும் என்னினும் இடையின்று, காடுபடு தீயின் கனலியர் மாதோ, நல்வினைநெடுநகர் கல்லெனக் கலங்கப் பூப்புரை யுண்கண்மடவரல் போக்கியபுணர்த்த அறனில்பாலே" (ஐங். 376) என்று வெகுண்டுரைக்கின்றாள்.

தலைவி தலைவனது ஊர் சென்று சேர்ந்தாள் என்ற செய்தி கேட்டு, அவளுடைய திருமணத்தைத்

தன்மனையின்கண் செய்து காணவேண்டுமென்ற ஆசை தோன்றுகிறது. அந்நிலையில் அவள் சான்றோர் சிலரை விடுத்து, மணத்துக்கு முன்னணியாக நடக்கும் சிலம்பு கழி மணத்தை நும்மனையில் நடத்துக; நாடறிய நடக்கும் வதுவை மணம் எம்மனையில் நிகழ்த்துவம் எனச் சொன்னாலென்ன என்பாளாய், "நும்மனைச் சிலம்பு கழீஇ அயரினும், எம் மனை வதுவை நன்மணம் கழி கெனச் சொல்லின் எவனோ மற்றே வென்வேல், மையற விளங்கிய கழலடிப் பொய்வல்காளையை ஈன்ற தாய்க்கே" *(ஐங். 399)* என்று இசைக்கின்றாள்.

தலைவி மனையறம் புரிவதைக் காண்கின்றாள் செவிலி. அவளுடைய அறிவும் ஒழுக்கமும் காண அவட்கு உவகை பெரிதாகின்றது. இளமையில் தேன்கலந்த பால்தரின் அருந்துதற்கு மறுத்து,

"முத்தரிப் பொற்சிலம்பொலிப்பத் தத்துற்று. அரிநரைக் கூந்தல் செம்முது செவிலியர், பரிமெலிந்தொழியப் பந்தர் ஓடி, ஏவல் மறுக்கும் சிறு விளையாட்டி, அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந்தனள் கொல், கொண்ட கொழுநன் குடிவறன் உற்றெனக் கொடுத்த தந்தை கொழுஞ்சோறுள்ளாள், ஒழுகுநீர் நுணங்கறல்போலப் பொழுது மறுத்துண்ணும் சிறுமதுகையளே" *(நற். 110)* என்று வியந்து உரைக்கின்றாள். தலைவி தான் பெற்ற மகன் நடுவிருக்க, தலைவனோடு கூடியிருக்கும் இனிய காட்சியைக் கண்டு கழிபேருவகை எய்திய செவிலி,

"மறியிடைப்படுத்த மான்பிணை போலப் புதல்வன் நடுவணனாக நன்றும், இனிது மன்றவவர் கிடக்கை முனிவின்றி நீனிற வியலகம் கவைஇய, ஈனும்

உம்பரும் பெறலருங் குரைத்தே" (ஐங். 401) என்று மகிழ்கின்றாள். இவ்வாறே தலைவன் தலைவியைப் பிரியாது அன்புற்றொழுகுவது கண்டு, "சீறூரோளே மடந்தை வேறூர் வேந்துவிடு தொழிலொடு செல்லினும் சேர்ந்துவரல் அறியாது செம்மல் தேரே" (குறுந். 242) என்று வியக்கின்றாள்.

இவற்றை நோக்கின் செவிலி பெற்ற தாயினும் பெரிய தாயாய்த் தலைவியின் வாழ்வில் எத்துணை ஈடுபாடும் அன்பும் உடையளாய் விளங்குகிறாள் என்பது இனிது விளங்கும். தோழியிடத்துக் காணப்படும் நற்பண்பு அனைத்துக்கும் செவிலியே காரணம்; ஏனெனில் தோழியைச் செவிலியின் மகள் என்று தொல்காப்பியர் கூறுகின்றார். ஒரு தாயும் அவள் மகளும் ஆன ஒருகுடும்பமே தலைவியின் வாழ்வில் அறம் திறம்பா நினைவும் அன்பு குன்றாச் சொல்லும் அறிவு குறைபடாச் செயலும் கொண்டு பணிபுரிந்து ஒழுகுவது நமக்குப் பெருமிதம் தருகிறது. இவ்வாறு ஒவ்வொரு குடும்பமும் அறத்தில் திரியாப்படர்ச்சியுற்றுப் பெருகிப் புகழ் நிறுவிப் பொன்றா இன்பத்தில் நின்று நிலவுதல் வேண்டுமென்பது அகப்பொருள் நூல்களின் குறிக்கோளாவது காணலாம்.

2. பேசும் மகளிர்

நங்கையொருத்தியின் நலம் கண்ட சான்றோரான ஓரம்போகியார்,

"இனையள் என்றவட் புனைவளவு அறியேன்
சில மெல்லியவே கிளவி" (குறுந். 70)

என்று கூறுகின்றார். இவ்வாறே கௌணியன் விண்ணந்தாயனைக் காணச்சென்ற ஆவூர் மூலங்கிழார் அவனுடைய மனைவியர் மாண்புகளை வியந்து,

"சில சொல்லின் பல் கூந்தல் நின்
நிலைக்கொத்த துணைத் துணைவியர்
தமக்கொத்த தொழில் கேட்ப" (புறம். 166)

என்று பாராட்டுகின்றார்.

இங்ஙனமே, ஏனைச் சங்கச் சான்றோர் பலரும் மகளிரின் சொல் நலங்களை, வழங்கும் மொழித் திறங்களை நன்கு அறிந்து,

"நன்னுதல்,
செயிர்தீர் கொள்கைச் சின்மொழித் துவர்வாய்
அவிர்தொடி முன்கை ஆயிழை மகளிர்" (அகம் 75)

"மழைக்கண்,
சின்மொழி பொலிந்த துவர்வாய்ப்
பன்மாண் பேதை" (அகம் 341)

"முள்ளெயிற்றுச் சின்மொழி அரிவை" (அகம். 361)

என்று புகழ்ந்துரைக்கின்றனர்.

இனி, இவர்களுடைய கூற்றுக்களை நோக்கின், மகளிர் பலபேசிக் காலம் கழிப்பவரல்லர்; சிலவே பேசும் சிறப்புடையவர் என்று அறியலாம். அச்சில சொற்களும் எங்ஙனம் இருக்குமென வினவின், அதனைச் சான்றோர் தெரிவிக்கின்றனர்.

சேரமான் பல்யானைச் செல்கெழுகுட்டுவன் மனைவியின் நாநலம் கூறவந்த பாலைக் கோதமனார்,

"நாடுடன் விளங்கும் நாடா நல்லிசைத்
திருந்திய இயல்மொழித் திருந்திழை கணவ" (பதிற். 24)

என்றும், குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறையின் மனைக்கிழத்தியின் மாண்பு கூறும் பெருங்குன்றூர்கிழார்,

"கொடுங்குழைக்கு அமர்த்த நோக்கின், நயவரப்
பெருந்தகைக் கமர்ந்த மென்சொல், திருமுகத்து
மாணிழை அரிவை" (81)

என்று சிறப்பிக்கின்றார்.

எனவே, மகளிர் சில சொற்களே வழங்கினும், அவை திருந்திய இயலும், பெருந்தகைமையும் மென்மையும் உடையவாய்ப் பிறங்கும் என்று இனிது தெளியலாம்.

ஆண்பெண் இருபாலார்க்கும் பொதுப்பட அறங்கூறும் திருவள்ளுவர்,

"பலசொல்லக் காமுறுவர் மன்ற மாசற்ற
சிலசொல்லல் தேற்றா தவர்"

என்பர்;, ஆயினும், சிலவாய் மெல்லியவாய்த் திருந்திய இயல்பினவாய சொற்களையே மகளிர் வழங்குவர் என்று சங்கச் சான்றோர் கூறுவது குறிக்கத் தக்கது. இதுகண்டு தான் போலும், அரசமா தேவி ஒருத்தியைக் கூறவந்த கொங்குவேளிர்'

"பல்பூண் சில் சொல் பட்டத் தேவியர்"

என்று எடுத்துரைக்கின்றார்.

பேசும் மகளிர் சிலவே பேசுவானேன் என்றொரு கேள்வி இங்கே எழலாம். அதற்கு அவர்களின் இயல்பு உணர்ந்துரைக்கும் தொல்காப்பியர் ஒரு காரணம் காட்டுகின்றார். கடல் போற் பெருகிய கருத்துக்கள் உள்ளத்தே நிறைந்திருப்பினும், உரைத்தற்குரிய இடமும் காலமும் உற்றவிடத்தல்லது மகளிர் உரைப்பதிலர்; பலவற்றைக் குறிப்பாலும், சிலவற்றையே சொல்லாலும் உணர்த்துவர் என்பாராய்,

"உற்றுழி யல்லது சொல்லல் இன்மையின்
அப்பொருள் வேட்கைக் கிளவியின் உணர்ப"

என்றும் அப்பண்பு அவர்கட்கு எவ்வாறு அமைகின்றது எனின், அதற்குரிய செறிவும் நிறைவும் பிறவும் அவர்பால் இயல்பிலே வாய்த்துள்ளன என்று அடுத்த நூற்பாவால் இயம்புகின்றார்.

"செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்
அறிவும் அருமையும் பெண்பாலான"

என்பது தொல்காப்பியம்.

சங்க காலத்தில் சேரநாட்டை ஆண்ட வேந்தருள் ஒருவனான ஆடுகோட் பாட்டுச் சேரலாதன் ஒருகால் விறலியர் என்ற நாடக மகளிரின் ஆடல்பாடல்களில் மிகுதியும் ஈடுபட்டிருந்தான்; அச்செயல் பகைவரது இகழ்ச்சிக்கு இடனாகும் என்று எண்ணினார் காக்கை பாடினியார் என்ற சிறப்புடைய நச்செள்ளையார். அவர் அதனைச் சேரமானுக்குத் தெருட்டக்கருதி அதற்கேற்ற இடம் வாய்த்ததும், நேரே சென்று,

"அமிழ்து பொதி துவர்வாய் அசைநடைவிறலியர்
பாடல்சான்று நீடினை உறைதலின்
வெள்வேல் அண்ணல் மெல்லியன் போன்மென
உள்ளுவர் கொல்லோ நின் உணராதோரே" (பதிற். 51)

என நான்கே வரிகளில் சிலவே மொழிகின்றார். இச் சிலவற்றுள்ளும் அவன் நீடினன் உறைதற்குரிய காரணத்தையும் அதனால் உண்டாகும் விளைவையும் சுருங்கச் சொல்லி விளக்கிவிடுகின்றார். விறலியரின் சொல்லில் பொதிந்துள்ள சுவைநலத்தை "அமிழ்து பொதி துவர் வாய்" என்றும், ஆடலின்பத்தை "அசைநடை" என்றும் குறித்து அவை முறையே செவிக்கும் கண்ணுக்கும் இன்பம் பயந்து அவன் கருத்தைக் கவர்ந்தமையும் அதனால் "பாடல் சான்று நீடினை உறைதலின்" என்று காட்டி, அது வாயிலாக அவன் அறிவு மயங்கினமையும் சொல்லாமற் சொல்லி, இக்காரணங்களால் பகைவர் எள்ளி இகழ்வர் என்ற அறிவுரையை, "வெள்வேல் அண்ணல் மெல்லியன் போலும் என உள்ளுவர் கொல்லோ" என்றும், இவ்வாறு உரைப்பதனால் வேந்தன் வருந்தாமற்பொருட்டு, "நின்னை உணராதோர்" என்றும் பேசுகின்றார்.

தன் கணவனான கோப்பெரும்பேகன் வேறொருத்திபால் தன் கருத்தையிழந்து அவளுறையும் ஊர்க்குப் போய் வருகின்றான் என்பதனால் மனம் வருத்தம் எய்தியிருந்த கண்ணகி ஒருகால் சான்றோரான ஆசிரியர் பரணரோடு பேசும்போது,

"யாம் அவன் கிளைஞரேம் அல்லேம்; கேள் இனி;
எம் போல் ஒருத்தி நலம்நயந்து என்றும்
வரூஉம் என்ப வயங்கு புகழ்ப் பேகன்
ஒல்லென ஒலிக்கும் தேரொடு
முல்லை வேலி நல்லூரானே" (புறம். 144)

என்று உரைக்கின்றாள். கணவனான பேகனுக்கும் தனக்கும் உள்ள அன்புறவு மாறிவிட்டமையும், அதற்குரிய காரணத்தையும் சில சொற்களில் தெளிய உரைப்பது தான் கண்ணகியின் பெண்மைப் பேச்சுக்குப் பெருமை தருகிறது. காதலிருவர் கருத்தொருமித்து ஆதரவு பட்ட இல்வாழ்க்கை இன்பம் சிதைந்தது என்பவள், "யாம் அவன் கிளைஞரேம் அல்லேம்" என்றும், அதற்குரிய காரணம் சொல்லுகிறேன், கேள் என்பது போலக் "கேள் இனி" என்றும் முன்மொழிந்து, பின்பு, அவன் வேறு ஒருத்தியை விரும்பி ஒழுகுகிற திறத்தை,

"எம்போல் ஒருத்தி நலன் நயந்து முல்லை
வேலி நல்லூர்க்கு என்றும் வரூஉம் என்ப"

என்று பேசுகின்றாள். அவனால் விரும்பப்படுபவள் இழிந்த பரத்தையன்று; என்னைப் போன்ற அரச குடியிற் பிறந்த அழகும் நலமும் ஆரப் பெற்றவள் என்று குறிப்பதற்கு "எம்போல் ஒருத்தி நலன் நயந்து" என்று கூறுகிறாள். இதுகேட்கின், அம்மடந்தையோ, அவளை விரும்பும் பேகனோ மனத்தில் வெறுப்புக்கொள்ளாதபடி

"எம்போல் ஒருத்தி" என்பது அவளது பேச்சின் அருமையைப் புலப்படுத்துகிறது. மேலும் அவன் ஒருநாள் இருநாள் அல்ல; ஒவ்வொரு நாளும் அவன் போகின்றான் என்பது விளங்க, "என்றும் வரூஉம் என்ப" என்று கூறுகிறாள். அவளும் யான் உறையும் இவ்வூரிடத்தே இந்த நல்ல ஊரின்கண்ணே இருக்கின்றாள் என்பாளாய் "வரூஉம்" என்றும், அதனை நான் நேரில் காணவில்லை; ஊரார் அனைவரும் உரைக்கின்றார்கள் என்பதற்கு, "வரூஉம் என்ப" என்றும் மொழிகின்றாள். மேலும் அவள் கணவனான பேகனைக்குறிக்கும்போது "வயங்கு புகழ்ப்பேகன்" என்பதிலும் ஒரு கருத்து உண்டு.

பேகன்,

> "மடத்தகை மாமயில் பனிக்கும் என்று அருளிப்
> படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்
> கடாஅ யானைக் கலிமான் பேகன்"

என்ற புகழ்படைத்தவன்; கொண்ட மனைவி தனித்துப் பனித்து வருந்த மயில் பனித்து வருந்தும் என்று மயிலுக்குப் படாஅம் அளித்தான் பேகன் எனின், அஃது அவன் புகழ்க்கு மாசு தரும் என்று தான் வருந்துவதை "வரூஉம் என்ப வயங்கு புகழ்ப் பேகன்" என்ற சொற்களால் கண்ணகி கூறுவதை அறிகிறோம்.

இதனோடு சங்க விலக்கியம் பேசும் மகளிரை விடுத்துத் திருக்குறளில் நுழைந்தால், அதனுள்ளும் பேசும் மகளிர் பலர் காணப்படுகின்றனர்.

அறிவும் செறிவும் உடைய கணவனை மணந்து பொறையும் நிறையும் உடையளாய் வாழ்கின்றாள் ஒரு மங்கை. கடமை காரணமாகக் கணவன் சிலநாள் பிரிந்திருக்க வேண்டியவனாக இருப்பதை அறிகின்றாள்.

காதலினும் கடமை பெரிது; ஆயினும் அவன் பிரிவு அவள் நெஞ்சைச் சுடுகிறது. பிரிவை மறுப்பதும் அறமன்று; என் செய்வாள். விடை வேண்டுகிற கணவனை நோக்கி,

> "அரிதரோ தேற்றம் அறிவுடையார் கண்ணும்
> பிரிவு ஓர் இடத்து உண்மையான்"

என்று சொல்லுகிறாள். எத்துணைக் கூர்த்த மதிநலம் உடையராயினும், அவரிடத்தும், அவர் சொல்லிலும் தெளிவு, உறுதிப்பாடு காண்பது அரிதாவுள்ளது; எங்ஙனம் எனில், "பிரியேன், பிரியின் உயிர் தரியேன்" என்று சொல்லி எவ்வாறேனும் பிரிவதை அவர் செய்கின்றனர் அன்றோ என்று சொல்லுகிறாள்.

கணவன் செயலில் தவறு கண்டு உரியவர் அவன் மனைவிக்குச் சொல்கின்றனர்; அவளும் அறிகின்றாள். ஆவன கூறி நன்னெறி நிறுத்தற்கும் அவட்கு உரிமையுண்டு. கணவன் வரக்கண்டதும் வரவேற்று இனியன தந்து இன்னுரை மொழிந்து அவனை மகிழ்விக்கின்றாள்: அதனைக் காணும் ஏனை மகளிர் அதனை எடுத்துரைத்து நகையாடுகின்றார்கள். அவர்கட்கு விடைகூறுகின்றவள், அவரை இகழ்ந்து புறம் போக்குவேனாயின், யார்க்குக் குறைவு? எங்கள் குடும்பத்துக்குத்தான் இழிவுண்டாகும்; எனக்கும் பழியாகும். அதனை நினைந்தே என் நெஞ்சு அமைகின்றது என்பாளாய்,

> "எள்ளின் இளிவாம் என்றெண்ணி அவர்திறம்
> உள்ளும் உயிர்க் காதல் நெஞ்சு"

என்று கூறுகிறாள். "எள்ளின் இளிவாம்" என்ற இரண்டே சொற்களில் ஏனை மகளிர் பலரின் வாயடங்கச் செய்வது, பேசும் அம்மங்கையின் பேச்சுநலத்துக்கு இனிய சான்று பகர்கிறது.

இனி, காப்பியச் சூழலுக்குச் செல்வோம். சிலப்பதிகாரத்தில் கண்ணகி, மாதவி, கவுந்தியடிகள், மாதரி, அரசியர் எனப் பலமகளிர் பேசுகின்றனர்.

கண்ணகி கோவலனை மணந்து தனிமனையில் வாழ்க்கை நடத்துகிறாள். அவள் நலங்களைக் கோவலன் பலசொற்களால் பாராட்டிப் பாரித்துரைத்து மகிழ்கின்றான். அக்காலை உரைக்கத் தகுவன ஒன்றும் இல்லாமையால் வாளா இருந்த கண்ணகி, கோவலன் மாதவி மனைக்குப் பிரிந்து சென்றிருந்தபோது, தன் மனைக்குத் தேவந்தி வரக்கண்டு அவளோடு உரையாடுகின்றாள். தேவந்தி தன் வரலாற்றை விரித்துரைத்தமையால், கண்ணகியும் தான் கண்ட கனவைத் தேவந்தியைவிடச் சிறிது சுருங்க வுரைப்பவள், கனவின் முற்பகுதியை விளங்கக் காட்டி இறுதியில் தானும் தன் கணவனும் தெய்வமாகும் திறத்தை விளக்காமல் "யான் உற்ற நற்றிறம் கேட்கின் நகையாகும்" என்று சொல்லி முடித்துவிடுகின்றாள். நல்லது கூறல் இன்பம் பயக்குமாயினும், சொற்கள் பெருகுமாயின் சோர்வும் உவர்ப்பும் விளைவித்தலைக் கண்ணகி நன்கு உணர்ந்திருந்தாள் என்பதை "நகையாகும்" என்பதனால் அறிகின்றோம்.

சோமகுண்டம் சூரியகுண்டம் துறைமூழ்கிக் காமவேள் கோட்டம் தொழுதால் கணவரோடுகூடி இன்புறலாம் எனத் தேவந்தி கூறியதற்குக் கண்ணகி இரண்டே சொற்களால் "பீடு அன்று" என்றுரைத்து மறுக்கும் திறம் அவளது இயற்கைப் பேச்சு நலத்தைக் காட்டுகிறது. சிறிதுபோதில் அங்கே கோவலன் வந்து "குலம்தரு வான்பொருட்குன்றம் தொலைத்த, இலம்பாடு

நாணுத் தரும்'' என்று சிலசொற்களைக் கூறுகின்றான். பல சொல்லுதற்குக் கண்ணகிக்கு வாய்ப்புண்டாகிறது. "உற்றுழி யல்லது சொல்லல் இல்லை'' என்று தொல்காப்பியம் கூறிற்றே யன்றி, உற்றுழிப் பெருகப் பேசுவதைஅது மறுக்கவில்லை. சலம்புணர் கொள்கைச் சலதியோடு ஆடியதால் இலம்பாடு தோன்றி நாணுத் தருவது இயல்பே; அது நினைந்து இனி வருந்தவேண்டா; சிலம்புள; கொள்ளும்'' என்று கண்ணகி கூறலாம். மேனியில் வாட்டமும் மனத்தில் வருத்தமும் நிறைந்திருந்தமையின், வெறிதே முறுவலித்து, "சிலம்புள கொள்ளும்'' என்று கூறியொழிந்தாள்.

மதுரைப்புறஞ்சேரியில் மாதரி மனையில் தங்கிக் கோவலனுக்கு உணவு சமைத்து அளித்து மகிழ்ந்திருக்கும் போது, "எழுக என எழுந்தாய், என் செய்தனை'' என்று கோவலன் கேட்கவும், கண்ணகி புகார் நகர்க்கண் அவன் பிரிவால் அறவோர்க் களித்தல் முதலிய அறம்புரியும் திறம் இழந்து இருந்த நிலைமையையும் அவன் தாய் தந்தையர் அவளுடைய "நோயும் துன்பமும்'' அறிந்து அருள்செய்து பாராட்டிய திறத்தையும் சிலபல சொற்களால் எடுத்துரைத்து, மாற்றா உள்ளத்தால் அவன் சொல்லை ஏற்றெழுந்தமையையும் இயம்புகின்றாள்.

கோவலன் இறந்தது கேட்டபின், மடையுடைந்த வெள்ளம் போலக் கண்ணீர் பெருக்கிக் கையறவு மீதூர, பற்பல சொல்லிக் கண்ணகி புலம்பினாள். வேந்தன்முன் சென்று தானே தன் வழக்கினை விரித்துரைத்தாள்.

இனி, மாதவி ஆடலும் பாடலும் அழகும் மேதகக் கொண்ட மடந்தையாயினும் சிலவே பேசும் பெண்மை நலம் பெருகியிருக்கின்றாள். கடற்கானலில் தன்னைப்

பிரிந்து சென்ற கோவலன் மீள வாராமையால் வருத்தமுற்றுத் திருமுகம் விடுத்தாளாக அதனை அவன் மறுத்துவிடுகின்றான்; அதனால் கையற்ற நெஞ்சமொடு கலங்கி வேறுபல கூறாமல், "மாலை வாராராயினும் மாணிழை, காலை காண்குவம்" என்று மொழிகின்றாள்.

கோவலன் பிரிந்தமைக்கும், பிரிந்தவன் மீளத் தன்பால் வாராமைக்கும் உரிய காரணத்தை மாதவியால் அறிந்துகொள்ளமுடியவில்லை. பின்பு அவன் கண்ணகியுடன் இரவில் ஒருவரும் அறியாமல் புகார் நகரின் நீங்கிச் சென்றது தெரிந்து கோசிகமாணிபால் விடுத்த ஓலையிலும்,

"குரவர் பணியன்றியும் குலப்பிறப்பாட்டியொடு
இரவிடைக் கழிதற்கு என்பிழைப்பு ? அறியாது
கையறும் நெஞ்சம்"

என்றே கவல்கின்றாள்.

கவுந்தியடிகள் துறவொழுக்கமும் முதுமை.யும் உடையவளாதலின், கோவலன் கண்ணகியாகிய இருவர்க்கும் காவிரி நாட்டின் நலங்களையும், அதன் வழிதுறைகளின் இயல்புகளையும் விரித்துரைக்கின்றாள். வழியெதிர்ப்பட்ட வம்பப்பரத்தையும் வறுமொழி யாளனும் வினவியபோது,

"எள்ளுநர் போலும் இவர் என்பூங்கோதையை
முள்ளுடைக் காட்டின் முதுநரியாகுக"

எனக் கவுந்தி தவந்தரு சாபம் இடுவதும், மாதரிபால் கண்ணகியை அடைக்கலம் தந்தபோது கவுந்தியடிகள் மாதரி கண்ணகியைப் போற்றவேண்டிய முறை, கண்ணகியின் கற்புக்கடம்பூண்ட பொற்பு முதலியவற்றை

மிகவிரிவாகப் பேசுவதும், கவுந்தியடிகளின் தகுதிக்கும் சால்புக்கும் பொருந்துவனவாகவுள்ளன. அன்பு, அறிவு, தேற்றம், ஒழுக்கம் ஆகிய நற்பண்புகளுக்கு ஆண்பெண் என்ற வேறுபாடு இல்லையென்பது இம்மங்கைநல்லார் பேசும் பேச்சுக்களில் சிறந்து தோன்றுகிறது.

இனி, மணிமேகலையை நோக்குவோமாயின், ஆங்கும் மாதவி சிலசொற்களே பேசும் செம்மை குன்றாமல் திகழ்கின்றாள்.

சித்திராபதி விடுத்த வயந்தமாலை மாதவிபால் போந்து,

"கற்றுத்துறை போகிய பொற்றொடி நங்கை
நற்றவம் புரிந்தது நாணுடைத்து என்றே
அலகில் மூதூர் ஆன்றவரல்லது
பலர் தொகுபு உரைக்கும் பண்பில் வாய்மொழி
நயம்பாடில்லை நாணுடைத்து"

என்று கூறவும், மாதவி மனத்தே வெம்மையுற்று,

"காதலன் உற்ற கடுந்துயர் கேட்டுப்
போதல் செய்யா உயிரொடு நின்றே
பொற்கொடி மூதூர்ப் பொருளுரை இழந்து
நற்றொடி நங்காய் நாணுத் துறந்தேன்
காவலன் பேரூர் கனையெரி மூட்டிய
மாபெரும் பத்தினி மகள் மணிமேகலை
அருந்தவப் படுத்தல் அல்லது யாவதும்
திருந்தாச் செய்கைத் தீத்தொழிற்படாள்
ஆங்கனம் அன்றியும் ஆயிழை கேளாய்
ஈங்கு இம்மாதவர் உறைவிடம் புகுந்தேன்"

என்று தான் புத்தமாதவர் பள்ளியடைந்த வரலாறு கூறி, அவ்விடத்தே தான் புத்த தருமம் கேட்ட செய்தியை

"மறவணம் நீத்த மாசறு கேள்வி
அறவண அடிகள் அடிமிசை வீழ்ந்து
மாபெரும் துன்பம் கொண்டு உளம் மயங்கிக்
காதலன் உற்ற கடுந்துயர் கூறப்
பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்
பிறவார் உறுவது பெரும் பேரின்பம்
பற்றின் வருவது முன்னது பின்னது
அற்றோர் உறுவது அறிக என்றருளி
ஐவகைச் சீலத்து அமைதியும் காட்டி
உய்வகை இவைகொள் என்று உரவோன் அருளினன்"

என்று உரைக்கின்றாள்.

காப்பியத் தலைவியான மணிமேகலை இளமை மாறாத வளத்தினளாயினும், புத்தமாதவர் நல்லறம் கேட்டுத் துறந்த வுள்ளமும் சிறந்த செய்கையும் உடையவள். அதனால் பலவிடங்களில் நன்கு பேசும் நாநலம் பெறுகின்றாள்.

மலர் வனத்துள் சுதமதியோடு இருந்தபோது உதயகுமரன் போந்து அவளைக் காணமாட்டானாய்த் திரும்பச் சென்றதும், அவன்பால் தன்மனம் சென்றதை மணிமேகலை சிறிதும் ஒளிக்காமல்,

"கற்புத்தான் இலள் நற்றவ உணர்விலள்
வருணக் காப்பிலள் பொருள் விலையாட்டி என்று
இகழ்ந்தனனாகி நயந்தோன் என்னாது
புதுவோன் பின்றைப் போனது என் நெஞ்சம்"

என்று உள்ளது கூறி,

"இதுவோ அன்னாய் காமத் தியற்கை
இதுவே யாயின் கெடுக தன்திறம்"

என உறுதி கொள்கின்றாள்.

மணிபல்லவத்தில் துயில் நீங்கி எழுந்த மணிமேகலை தான் இருந்த இடம் புகார் நகரத்து உவவனத்தில் ஒருமருங்கு என எண்ணி, தன்னோடு போந்த சுதமதி இல்லாமைகண்டு,

"உவவன மருங்கில் ஓர் இடம் கொல் இது;
சுதமதி ஒளித்தாய், துயரம் செய்தனை
கனவோ நனவோ என்பதை அறியேன்
மனம் நடுக்குறூஉம்; மாற்றம் தாராய்
வல்லிருள் கழிந்தது மாதவி மயங்கும்
எல்வளை வாராய்"

என்றுசொல்லி அரற்றுகிறாள்.சுதமதி தன்னை விட்டு நீங்கிவிட்டாள்போலும் என எண்ணுகிறாள்; நெஞ்சில் வேற்றுமைக் கருத்து எழுகிறது. அதனால்,

"விட்டகன்றனையோ ?
விஞ்சையில் தோன்றி விளங்கிழை மடவாள்
வஞ்சம் செய்தனள் கொல்லோ, அறியேன்"

என்று மொழிந்து, எங்கும் திரிந்து ஒருவரையும் காணாமையால் அழுகிறாள்; அரற்றுகிறாள். அவள் மனத்தில் தந்தையாகிய கோவலன் நினைவு எழுகிறது.

"எம் இதிற்படுத்தும் வெவ்வினை உருப்பக்
கோற்றொடி மாதரொடு வேற்று நாடடைந்து
வைவாள் உழந்த மணிப்பூண் அகலத்து
ஐயாவோ"

என்று அழுகின்றாள். பின்பு அங்கே தோன்றிய புத்த பீடிகையைத் தொழுது வணங்கிப் பழம் பிறப்புணர்ந்து அச்சம் நீங்கினாள்.

மணிபல்லவத் தீவகம் காக்கும் தீவதிலகையைக் கண்டுஅவளொடு கோமுகிப் பொய்கையடைந்து அமுதசுரபி தன் கைவரப் பெறுகின்றாள் மணிமேகலை. அப்பொழுது அவள் பேசும் சொற்கள் அவளுடைய உள்ளக்கிடக்கையை நன்கு புலப்படுத்துகின்றன.

"நாவலொடு பெயரிய மாபெரும் தீவத்து
வித்தி நல்லறம் விளைந்த அதன்பயன்
துய்ப்போர் தம்மனைத் துணிச்சிதர் உடுத்து
வயிறுகாய் பெரும்பசி அலைத்தற்கு இரங்கி
வெயில் என முனியாது புயல் என மடியாது
புறங்கடை நின்று புன்கண் கூர்ந்துமுன்
அறங்கடை நில்லாது அயர்வோர் பலரால்;
ஈன்ற குழவி முகம் கண்டு இரங்கித்
தீம்பால் சுரப்போள் தன் முலைபோன்றே
நெஞ்சு வழிப்படூஉம் விஞ்சைப் பாத்திரத்து
அகன்சுரைப் பெய்த ஆருயிர் மருந்து அவர்
முகம் கண்டு சுரத்தல் காண்டல் வேட்கையேன்"

என்று மணிமேகலை தீவதிலகையோடு பேசுவது, தன்நாட்டு மக்களின் பசிப்பிணியைப் போக்குதற்கு மணிமேகலை கொண்டிருந்த ஆர்வத்தைப் புலப் படுத்துகிறது.

மணிமேகலையைக் காதலித்து அவளை வன்முறையிற் கைப்பற்றக் கருதிய உதயகுமரன் கொலையுண்டு இறந்ததற்கு மணிமேகலை தான் காரணம் என்று கருதினாள் அவன் தாயாகிய அரசமாதேவி. அவள் வஞ்சனையாக மணிமேகலையைத் தன்னோடு இருக்க வைத்துத் தீமை பல செய்ய முயன்றாள். அம்முயற்சி முற்றும் கெட்டொழிந்தன. தன் மகன் பொருட்டு

இத்தனையும் செய்தாள் அரசி என்று அறிந்ததும், மணிமேகலை அவளை நோக்கி,

"பூங்கொடி நல்லாய் பொருந்தாது செய்தனை (மகன்)
உடற்கழு தனையோ உயிர்க்கழு தனையோ
உடற்கு அழுதனையேல் உன்மகன் தன்னை
எடுத்துப் புறங்காட்டு இட்டனர் யாரே ?
உயிர்க்கழு தனையேல் உயிர் புகும் புக்கில்
செயப்பாட்டு வினையால் தெரிந்துணர்வரியது
அவ்வுயிர்க்கு அன்பினையாயின் ஆய்தொடி
எவ்வுயிர்க் காயினும் இரங்கல் வேண்டும்"

என்று கூறுகின்றாள். பொய்யும் களவும் மேற்கொண்டோர் எய்தும் துன்பத்தை அவளுக்கு மேலும் உரைத்து,

"பொய்யாற் றொழுக்கம் பொருள் எனக்கொண்டோர்
கையாற் றவலம் கடந்தது முண்டோ
களவேர் வாழ்க்கையர் உறூஉம் கடுந்துயர்
இளவேய்த் தோளாய்க்கு இது என வேண்டா;
மன்பேர் உலகத்து வாழ்வோர்க்கு இங்கிவை
துன்பம் தருவன துறத்தல் வேண்டும்;
செற்றம் செறுத்தோர் முற்ற உணர்ந்தோர்;
மல்லல் மாஞாலத்து வாழ்வோர் என்போர்
அல்லல் மாக்கட்கு இல்லது நிரப்புநர்;
திருந்தேர் எல்வளை! செல்லுலகு அறிந்தோர்
வருந்திவந்தோர் அரும்பசி களைந்தோர்;
துன்பம் அறுக்கும் துணிபொருள் உணர்ந்தோர்
மன்பதைக் கெல்லாம் அன்பொழியார்"

என்று மண்ணில் நல்வாழ்வு பெறும் திறத்தை மணிமேகலை உரைக்கின்றாள்.

இம்மணிமேகலைக்குப் பின்னே தோன்றி நிலவிய காலத்தில் காரைக்காற் புனிதவதியார் பேசும்

மகளிரினத்துப் பெருமகளாக விளங்குகின்றார். புனிதவதியார் சிவனடியார்க்கு இட்ட மாங்கனியைக் கொணர்க எனக் கணவன் கேட்டபோது, இறைவன் அருளால் எய்திய கனியைக் கொணர்ந்து அளிக்கின்றார். அதன் சுவை கண்டு, இது முன் யான் தந்த கனி யன்று; எங்கே பெற்றனை என்று கேட்க, அவர் "ஈசன் அருள்" என்று இரண்டே சொற்களில் விடை தந்து தமது மாண்பை நிறுவுகின்றார்.

"ஈசன் அருள்" என்றது கேட்டும் தெளியாத கணவன் தெளியுமாறு வேறொரு கனி வருவித்து அளித்த புனிதவதியாரைத் தெய்வம் என்று நினைத்துக் கணவன் அவரைக் கைவிட்டு நீங்கிவிடுகின்றான். பின்பு அவன் இருக்குமிடம் அறிந்து சுற்றத்தார் புனிதவதியாரை அவனிடம் கொண்டு சென்றபோது, அவன் மனைவியான புனிதவதியாரை வணங்கிச் சுற்றத்தாரை நோக்கி,

"மானுடம் இவர் தாம் அல்லர்
நற்பெருந்தெய்வம் ஆதல் நான் அறிந்து"

அகன்றேன் என்று சொல்லி அவர்களையும் பணியுமாறு சொன்னான். அந்நிலையில் புனிதவதியார் அவனோடு ஒன்றும் உரையாடாமல், ஈசனை நினைத்து அனைவரும் கேட்குமாறு உரைக்கலுற்று,

ஈங்கு இவன் குறித்த கொள்கை
இது; இனி இவனுக்காகத்
தாங்கிய வனப்பு நின்ற
தசைப்பொதி கழித்து இங்கு உன்பால்
ஆங்கு நின்தாள்கள் போற்றும்
பேய்வடிவு அடியேனுக்குப்
பாங்குற வேண்டும்"

என்று சொல்லி இறைவனைப் பரவினார். தமது உடல் வனப்புத் தமது கணவனுக்காக அமைந்தது என்றும், அவன் அதனை வேறாக நினைத்து வேண்டாதபோது, வனப்பு நீங்கிய பேய்வடிவு வேண்டும் என்றும், ஈசன் தாள்கள் போற்றுவதற்கு அப்பேய் வடிவு ஏற்றது என்றும் புனிதவதியார் பேசுவது அவரது திருவருள் ஞானத்தின் பெருமையையே காட்டுகிறது.

பேய்வடிவு பெற்றதும் அவர் கயிலைக்குச் சென்று இறைவனைக் கண்டு வழிபடுகின்றார். இறைவன் அவரை அன்புடன் நோக்கி, "நம்பால் இங்கு வேண்டுவது என்?" என்று கேட்கவும், 'இறைவனே, எனக்கு இறவாத இன்ப அன்பு வேண்டும்" என்று முதலில் வேண்டுகிறார்.

"இறவாத இன்ப அன்பு
வேண்டிப் பின் வேண்டுகின்றார்;
பிறவாமை வேண்டும்; மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும், இன்னும்
வேண்டும் நான் மகிழ்ந்துபாடி
அறவா நீ ஆடும் போது உன்
அடியின்கீழ் இருக்க"

என்றார்.

இங்ஙனம் இறைவனோடு பேசி வரம்பெற்றதோடு நில்லாமல் திருப்பதிகங்கள் பல காரைக்கால் அம்மையார் பாடியுள்ளார். அவை அமைப்பு முறையில் பாட்டேயாயினும் பொருள் முறையில் இனிய பேச்சுக் களாகவே உள்ளன.

"அம்மையே, ஈசன் ஈசன் என்று பேசுகின்றாயே, அவன் எங்கே உள்ளான்" என்று சிலர் கேட்க, அவர்களை நோக்கி,

"பிரான் அவனை நோக்கும் பெருநெறியே பேணிப்
பிரான் அவன்தன் பேரருளே வேண்டிப் – பிரான் அவனை
எங்குற்றான் என்பீர்கள்; என்போல்வார் சிந்தையினும்
இங்குற்றான் காண்பார்க்கு எளிது"

என்பர். சிலர் அவ்விறைவன் மேலுலகத்தில் உள்ளான் என்றும் சிலர் தேவருலகத்தில் உள்ளான் என்றும் கூறுகின்றார்களே என்று சொல்ல, அவர்களுக்கு அம்மையார்

"வானத்தான் என்பாரும் என்கமற்று உம்பர்கோன்
தானத்தான் என்பாரும் தாம்என்க – ஞானத்தான்
முன் நஞ்சத்தால் இருண்ட மொய்ஒளிசேர் கண்டத்தான்
என் நெஞ்சத்தான் என்பன் யான்"

என்று கூறுவர்.

அம்மையார்க்கு இறைவன் திருவுருவத்தில் உள்ளம் ஈடுபடுகிறது. நீறணிந்தகோலம் அவர் நெஞ்சை மகிழ்விக்கிறது. அதை நினைந்து,

"பண்புணர மாட்டேன் நான் நீயே பணித்துக்காண்
கண்புணரும் நெற்றிக் கறைக்கண்டா – பெண்புணரும்
அவ்வுருவோ மால்உருவோ ஆனேற்றாய் நீறணிவது
எவ்வுருவோ நின்உருவ மேல்"

என்று கேட்பர்.

"அன்றும் திருவுருவம் காணாதே ஆட்பட்டேன்
இன்றும் திருவுருவம் காண்கிலேன் – என்றும்தான்

எவ்வுருவோன் நும்பிரான் என்பார்கட்கு என்னுரைக்கேன்
எவ்வுருவோ நின் உருவம் ஏது"

என்று இறைவனோடு கொஞ்சிக்குலவிப் பேசுகின்றார்.

அம்மையார்க்குப்பின் சில நூற்றாண்டுகள் கழித்துத் திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் முதலியோர் தோன்றுகின்றார்கள். அவர்கள் காலத்தே திலகவதியார் மங்கையர்க்கரசியார் முதலிய நன்மகளிர் இருந்து அறிவு மணம் கமழும் பேச்சுக்களால் நம்மை மகிழ்விக்கின்றார்கள்.

திலகவதியார் திருநாவுக்கரசின் உடன்பிறந்த தமக்கையார் ஆவர். அவர்க்குத் திருமணநாள் குறித்த சிறிது காலத்தில் தாய்தந்தையர் இறந்துவிடுகின்றனர். மணம் நிகழ்வதற்குமுன்பே, மணமகனும் போர்க்களத்தில் மடிந்துபோகின்றான். இந்நிலையில் திலகவதியார் உள்ளம் பெருந்துன்பத்தால் கலங்கி வருந்துகிறது. "எனக்கு மணம் குறித்தபோதே நான் மணமகனுக்கு உரிமையாய்விட்டேன்; இம்மண்ணுலகில் இல்லையெனினும் மறுமையில் அவர் உயிரோடு என் உயிரை இசைவிப்பேன்" என்று எண்ணித் தம்பியாகிய நாவுக்கரசை நோக்கி,

"எந்தையும் எம்அனையும் அவர்க்கு
எனைக்கொடுக்க இசைந்தார்கள்;
அந்தமுறையால் அவர்க்கே
உரியது நான்; ஆதலினால்
இந்த உயிர் அவர் உயிரோடு
இசைவிப்பேன்"

என்ற தம் துணிவை எடுத்துரைத்தார். அது கேட்டு அவர் சாமும் உயிர் துறப்பதாகக் கூறினார். தம்பியார் உளராக

வேண்டும் என்று எண்ணித் திலகவதியார் மணமின்றியே சிவத்தொண்டு புரிந்து வாழ்ந்து வரலானார்.

சிறிதுகாலத்துக்குப் பின் திருநாவுக்கரசர் சமண சமயம் சார்ந்து பாதிரிப்புலியூரில் தங்கித் தருமசேனர் என்ற புகழ்பெற்றார். அவர் தம்மைக் கைவிட்டுச் சமணரானது திலகவதியார்க்கு மிக்க வருத்தம் தந்தது. பின்பு தருமசேனரான நாவுக்கரசர் சூலைநோயால் பெருந்துன்பம் உழந்து திலகவதியாரிடம் வந்து தமது நிலைமையைச் சொல்லி வணங்கவும், திலகவதியார் அவரை வேற்றவர்போல நோக்கி,

"கோளில் பரசமய நெறிக் குழியில்
விழுந்து அறியாது
மூளும் அருந்துயர் உழந்தீர்
எழுந்திரீர்" எனமொழிந்தார்.

அதுகேட்டு மனம் புண்பட்டு மிக்க வருத்தமுற்று எழுந்த நாவுக்கரசரை அருள்நோக்கம் செய்து,

"கற்றை வேணியர் அருளே
காணும் இது; கழலடைந்தோர்
பற்றறுப்பார் தமைப் பணிந்து
பணி செய்வீர்"

என்று பரிவுடன் பேசித் திருவைந்தெழுத்தை ஓதித் திருநீறு கொடுத்து உதவினார்.

திலகவதியார் பேசியதில், நாவுக்கரசர் மேற் கொண்டிருந்த சமயம் "கோளில் பரசமயக் குழி" என்றும் அதில் விழுந்தவர் கரையேறுவது அரிது என்று தெரிந்து, அதனினின்று உய்திபெறும் வழியாது என்று வினவுபவர் போல நாவுக்கரசர் நோக்கவும், கற்றை வேணியரான சிவனருளே உமக்கு சூலையாக வந்து பற்றியுள்ளது; சிவன்

கழலையடைந்து பணிசெய்தால், பற்றியிருக்கும் சூலைநோயை அவர் நீக்கிவிடுவார் என்ற கருத்தையே

> "கற்றைவேணியர் அருளே
> காணும்; இது; கழல் அடைந்தோர்
> பற்றறுப்பார்; தமைப் பணிந்து
> பணிசெய்வீர்"

என்று சொல்லுகிறார்.

திருநாவுக்கரசர் காலத்தேயே திருஞானசம்பந்தரும் வாழ்ந்தார். அந்நாளில் பாண்டி நாட்டு மதுரையில், பாண்டியன் தேவியான மங்கையர்க்கரசியார் வாழ்ந்தார். அந்நாளில் பாண்டி நாட்டில் சமண சமயம் நன்குபரவி ஓங்கியிருந்தது. மங்கையர்க்கரசியின் கணவனான பாண்டியன் நெடுமாறன் என்ற வேந்தனும் சமண சமயத்தை மேற்கொண்டான். அதனால் சிவநெறி ஒளி குன்றியது. மங்கையர்க்கரசியும் . அமைச்சர் குலச்சிறை என்பவரும் சிவநெறியில் நின்றனர்.

அரசியார், அமைச்சரைக்கொண்டு சோழ நாட்டில் இருந்த ஞானசம்பந்தரை மதுரைக்கு வருவித்தார். அவரைக்கண்டதும், மங்கையர்க்கரசி "கண்கள் நீர்மல்கப் பவளவாய் குழறி" சிலசொற்களே வழங்கும் தமது செம்மைப்பண்பு திரியாமல்,

> "யானும் என்பதியும் செய்த
> தவம் என்கொல்"

என்று சொன்னார். கணவன் வேற்றுச்சமயம் சார்ந்திருந்தானாயினும், அவனை வேறுபடுத்தாமல், "தாங்கள் இங்கு எழுந்தருளியது யானும் என்பதியும் செய்த தவத்தின் பயனாகும்" என்று அரசியார் தம் சுருங்கிய சொல்லில்

இனிது விளங்கப்பேசுவது பெண்மை அறத்தின் பெருமையையே புலப்படுத்துகிறது.

ஞானசம்பந்தரை ஒரு தனிமடத்தில் தங்க வைத்தபின் அமைச்சர் போந்து, 'ஞானசம்பந்தரை வருவித்துவிட்டோம்; இனிச் சமணர் செய்யும் வஞ்சனை அறியோம்" என்று சொல்லவும், அரசியார், "ஆம், அவர் ஈனமே புரியவல்லார்" என நினைத்து, அமைச்சர் முகம் நோக்கிப் பேசுகின்றார்:

"ஞானசம்பந்தர் தம்பால் நன்மையல்லாது செய்யும்
ஊனம் வந்தடையின் யாமும் உயிர்துறந்தொழிவது"

எந்று சொல்லுகிறார். இப்பேச்சில் மங்கையர்க்கரசியாரின் உறுதி மாண்பை நாம் காண்கிறோம்.

திலகவதியாரும் மங்கையர்க்கரசியாரும் வாழ்ந்த காலத்துக்குப்பின்னே தோன்றியது சீவகசிந்தாமணி. இதன் கண்ணும் மகளிர் பலர் பேசுகின்றனர். அவருள் விசயமாதேவி வேந்தன் சச்சந்தனுடைய மனைவி. சினேந்திரன் கூறிய ஆகமங்களையும் அரசியல் பொருளியல் முதலிய நூல்களையும் நன்குகற்றவள்; ஆயினும் தன்பெண்மைக்கேற்பச் சில சொற்களே பேசும் செம்மையுடையவள். எனினும், அவள் சுடுகாட்டில் சீவகனைப் பெற்றபோது புலம்பியரற்றுவது நெஞ்சை யுருக்கும் நீர்மை வாய்ந்தது. பிறந்த சீவகனாகிய குழவியையும், சூழவுள்ள சுடுகாட்டையும் நோக்கிப் புலம்புகிறவள்,

"வெவ்வாய் ஓரிமுழக்காக
விளிந்தார் ஈமம் விளக்காக
ஒவ்வாச் சுடுகாட்டு உயர்அரங்கில்
நிழல்போல் நுடங்கிப் பேய்ஆட

எவ்வாய் மருங்கும் இருந்திரங்கிக்
கூகை குழறிப்பாராட்ட
இவ்வாறாகிப் பிறப்பதோ
இதுவோ வேந்தர்க்கு இயல்வேந்தே"

"பற்றாமன்னன் நகர்ப்புறமால்
பாயல் பிணம் சூழ்சுடுகாடால்
உற்றார் இல்லாத் தமியேனால்
ஒதுங்கலாகாத் தூங்குஇருளால்;
மற்று இஞ்ஞாலம் உடையாய் நீ
வளருமாறும் அறியேனால்
எற்றே இதுகண்டு ஏகாது
இருத்தியால் என் இன்னுயிரே"

"பிறந்த நீயும் பூம்பிண்டிப்
பெருமான் அடிகள் பேரறமும்
புறந்தந்து என்பால் துயர்க்கடலை
நீந்தும் புணைமற்று ஆகாக்கால்
சிறந்தார் உளரேல் உரையாயால்;
சிந்தாமணியே கிடத்தியால்;
மறம்கூர் நுங்கோன் சொற்செய்தேன்
மம்மர் நோயின் வருந்துகோ".

என்று பேசுகின்றாள்.

பின்னர் அவள் தவப்பள்ளியில் இருக்கும்போது சீவகனும், அவனை வளர்த்த தந்தையின் மகனான நந்தட்டனும் வரக்கண்டு சீவகனைத் தன்மகன் என உணர்ந்து மகிழ்ந்து, அவர்கள் மேலே செய்யக் கடவனவற்றை எண்ணி உரைப்பது விசயமாதேவியின் அறிவின் பெருமையை அறிவிக்கின்றது. சீவகன் கடிமணம்

செய்து கோடற்குரிய காளைப்பருவம் எய்தியிருப்பது கண்டு, இன்னாரிடத்தே மகட்கோடல் வேண்டுமென்று கூறுவாளாய்,

நலிவில் குன்றொடு காடுறை நன்பொருள்
புலியனார்மகள் கோடலும் பூமிமேல்
வலியின் மிக்கவர் தம்மகள் கோடலும்
நிலைகொள் மன்னர் வழக்கென நேர்பவே

என்று மொழிகின்றாள். அரசர்க்குரிய நீதிகள் சிலவற்றை யுரைத்து, சீவகன் தன் பகையை வெல்வதற்கு அவன் மாமனை அடையவேண்டும் என்று அறிவுறுத்துகிறாள். அப்போது சீவகனுக்கு உண்மை நிலையை விளக்கி,

"நிலத்தின் நீங்கி நிதியினும் தேய்ந்துநம்
குலத்தில் குன்றிய கொள்கையம்; அல்லதூஉம்
கலைக்கணாளரும் ஈங்கில்லை"

என்று சொல்லி, "மாமனிடம் துணைவேண்டிச் செல்க; அவன் இனிது வரவேற்பன்" என்பதை மிக்க நயம்பட வுரைக்கின்றாள்.

கார் தோன்றவே மலரும் முல்லை
கமலம் வெய்யோன்
தேர் தோன்றவே மலரும்;
செம்மல் நின்மாமன் மற்று உன்
சீர்தோன்றவே மலரும்; சென்று
அவன் சொல்லினோடே
பார்தோன்ற நின்ற பகையைச்
செறற்பாலை என்றாள்.

இறுதியில் சீவகன் கட்டியங்காரனை வென்று முடிவேந்தனாகித் தன் மனைவியரோடு இனிதிருந்தபோது, விசயமாதேவி துறவு பூண்கின்றாள்; அக்காலை, அவள்

சீவகனையும் அவன் துணைவரையும் ஒருங்குநோக்கி நீண்ட உரைநிகழ்த்துகின்றாள். அதன்கண் தன் கணவனான சச்சந்தன் கெட்டொழிந்த காரணத்தைப் பலபடப் பாரித்துரைக்கின்றாள்.

"நாகத்தால் விழுங்கப்பட்ட
நகைமதிக் கடவுளே போல்
போகத்தால் விழுங்கப்பட்டுப்
புறப்படான் புன்சொல் நாணான்;
ஆகத்தான் அமைச்சர் நுண்ணூல்
தோட்டியால் அழுத்திவெல்லும்
பாகர்க்கும் தொடக்கநில்லாப்
பகடுபோல் பொங்கியிட்டான்"

"நுண்மதி போன்று தோன்றா
நுணுகிய நுசுப்பினார்தம்
கண்வ லைப்பட்டபோதே
கடுநவை அரவோடு ஒக்கும்
பெண்மையைப் பெண்மை என்னார்
பேருணர்வுடைய நீரார்
அண்ணலைத் தெருட்டல் தேற்றாது
அமைச்சரும் அகன்றுவிட்டார்"

"பிளிறுவார் முரசத்தானைப்
பெருமகன் பிழைப்பு நாடிக்
களிறுமென்று உமிழப்பட்ட
கவளம்போல் தகர்ந்துநில்லாது
ஒளிறுவேல் சுற்றமெல்லாம்
உடைந்தபின் ஒருவனானான்

வெளிறுமுன் வித்திப்பின்னை
வச்சிரம் விளைத்தலாமோ"

இப்பேச்சுக்களை எண்ணும்போது உயர்நிலை மகளிர்க்கு இளமையில் சில சொல்லுதலும், முதுமையில் பலவுரைத்தலும் இயல்பு என்பது தோன்றும். துன்பம் வந்து சுடுகின்றபோது இளமை முதுமை என்ற இருகாலத்தும் எல்லா மகளிரும் பல சொற்களைப் பாரித்துரைப்பர்.

கம்பரது இராமாயணத்தில் காடுசெல்லுமுன் சிலவும் மென்மையுமாகிய சொற்களை வழங்கிய சீதை இலங்கையில் அனுமனைக்கண்டபோது பேசுவன துன்பச் சூழ்நிலை காரணமாகப் பிறப்பனவாகும்.

அனுமன் தனது பேராற்றலை வெளிப்படுத்தி, "இசைந்தருளுவையாயின் என்தோள்மேல் கொண்டு நின்னை இராமன் திருமுன் வைப்பன்" என்று பணிந்த மொழியால் வணங்கிக் கூறவும், சீதை அவன்பால் தாயன்பு காட்டி மறுத்து நெடுமொழி பேசுகின்றாள். அதனையும் கம்பர்,

"ஆயதன்மை அரிய தன்றாம் எனத்
தூயமென்சொல் இனையன சொல்லினாள்"

என்று இயம்புகிறார். தன் மறுப்புரை அனுமனுக்கு வருத்த முண்டாக்காத வகையில்,

அரிய தன்று நின்ஆற்றலுக்கு ஏற்றதே
தெரிய எண்ணினை செய்வதும் செய்தியே
உரியதன்று என ஓர்கின்றதுண்டு அது என்
பெரிய பேதைமைச் சின்மதிப் பெண்மையால்.

என்று சொல்லி, அதற்குரிய காரணத்தை,

சீதை நெடிது பேசினும் சோர்வுபடாத சொல்வன்மை யுடையள் என்று அறிகின்றோம்.

இங்ஙனமே, கொங்குவேளிரின் பெருங்கதையில் வாசவதத்தையின் தந்தை பிரச்சோதனன் அவளை வேற்றவர்க்கு மணம் செய்துதர நினைந்தனன் என்று சாங்கியத்தாய் கூறியபோது, அவளை நோக்கி, நெடுமொழி பேசுபவள்,

"இது மெய்யாயின் இன்னுயிர் வேண்டி
வாழ்வோர் உளர் எனின் சூழ்க தன் வினையென
ஆவி நுண்துகில் யாப்புறுத் தாயினும்
சாவதுறுதி; யான் தப்பிய பின்றை
என்பின் தீர்க எந்தைதன் குறையென"

மொழிகின்றாள்.

வேந்தன் மனையில் பணிப்பெண்ணாகத் தொழில்புரிந்த மானனீகையை உதயணன் காதலித்த போது, சுருங்க மொழியும் இயல்பினளாகிய அவள் அச்சம் மிகுந்து,

"மடந்தையர்க்கு எவ்வாறு இயைந்ததை இயையும்?
பொருந்திய பல்லுரை உயர்ந்தோர்க்காகும்;
சிறியோர்க்கருளிய உயர்மொழி வாசகம்
இயைவதன்றால்; இவ்வயின் ஒருவரும்
காணார் என்று காவலுள் இருந்து
பேணா செய்தல் பெண்பிறந்தோருக்கு
இயல்பும் அன்றே; அயலோர் உரைக்கும்
புறஞ்சொலும் அன்றி அறம் தலைநீங்கும்
திறம்பல வாயினும் குறைந்த என்திறத்து
வைத்ததை இகழ்ந்து மறப்பது பொருள்"

என்று மொழிகின்றாள். கருத்தழிந்து மருண்ட மன்னனைத் தெருண்டு தெளியுமாறு பலசொல்வது மானனீகைக்கு இன்றியமையாதாவது இதனால் அறிகின்றோம்.

இவ்வாறு உயர்நிலை மகளிரைக் கண்ட நாம் இனி, "வேட்டது மொழியும் கோட்டி மகளிர்" உளர் என்பதை மறக்க முடியாது. அவர்கள் எக்காலத்தும் இருந்துள்ளனர். சங்ககாலத்து ஆடவன் ஒருவன் பரத்தையர் சேரியில் உலவுவது கண்ட மகளிர் – அவற்கு அது தகும் என்பார் போல அங்குள்ள மகளிர்,

"நெடுநீர்ப் பொய்கை நடுநாள் எய்தித்
தண்கமழ் புதுமலர் ஊதும்
வண்டு என மொழிப மகன் என்னாரே"

என்று கூறுகின்றனர்.

கணவனான கோவலன் கொலையுண்டது அறிந்து மதுரைநகர் வீதியில் கையிற் சிலம்பேந்தி அரற்றிச் சென்ற கண்ணகியின் அவலக்கோலத்தைக் கண்ட மகளிர் வருந்திக் கூறுவதைக் காண்மின்;

"களையாத துன்பம் இக்காரிகைக்குக் காட்டி
வளையாத செங்கோல் வளைந்தது இது என்கொல்;

செம்பொன் சிலம்பு ஒன்று கையேந்திநம் பொருட்டால்
வம்பப் பெருந்தெய்வம் வந்தது இது என்கொல்;

ஐயரி உண்கண் அழுது ஏங்கி அரற்றுவாள்
தெய்வமுற்றாள் போலும் தகையள் இது என்கொல்"

என்று வருந்திப் பேசுகின்றனர்.

மாதவி மகளான மணிமேகலை ஆடல் பாடல்களை நயவாமல் தவநெறி மேற்கொண்டு மலர் வனம் சென்றதை மகளிர் காண்கின்றனர். அவர்கள்,

"மணிமேகலைதனை வந்து புறம் சுற்றி
அணியமை தோற்றத்து அருந்தவப் படுத்திய
தாயோ கொடியள் தகவிலள்"

என வைதுரைக்கின்றனர். பின்பு அம்மணிமேகலை பாத்திரம் கொண்டு பிச்சையேற்பது கண்டவர்,

"உதயகுமரன் உளம் கொண்டு ஒளித்த
மதுமலர்க் குழலாள் வந்து தோன்றிப்
பிச்சைப் பாத்திரம் கையில் ஏந்தியது
திப்பியம்"

என்று வியக்கின்றனர்.

இனி, சீவகன் தன் தோழனுடன் கூடி நிரைகவர்ந்து சென்ற வேட்டுவரை வெருட்டிவிட்டு நிரைகளை மீட்டுக்கொண்டு வருவதை ஆயர்மகளிர் காண்கின்றனர். அவருள், முதுமகளிர் அன்புகூர்ந்து

"செம்மலைப் பயந்த நற்றாய்
செய்தவம் உடையள் என்பார்
எம்மலைத் தவம் செய்தாள் கொல்
எய்துவம் யாமும் என்பார்"

வேறு சிலர்,

"விண்ணகத்துளர் கொல்மற்று இவ்
வென்றி வேற்குரிசில் ஒப்பார்
மண்ணகத்து இவர்கள் ஒவ்வார்
மழகளி றனைய தோன்றல்;
பண்ணகத் துறையும் சொல்லார்
நன்னலம் பருகவேண்டி
அண்ணலைத் தவத்தில் தந்தார்
யார் கொலோ அளியர் என்பார்"

பின்பு, சீவகன் கட்டியங்காரனை வென்று வீதியுலா வரக்கண்ட மகளிர், அவன் வரலாற்றை நினைத்து,

"இந்நகரப் புறங்காட்டில்
இவன் பிறந்தவாறும்
தன்னிகரில் வாணிகனில்
தான் வளர்ந்தவாறும்
கைந்நிகரில் வேந்தர் தொழப்
போந்ததுவும் கண்டால்
என்னை தவம் செய்யாது
இகழ்ந்திருப்பது என்பார்."

தவத்தை வியந்துரைப்பவர்,

"நஞ்சு குடித்தாலும் நவையின்று
தவம் நின்றால்
அஞ்சி ஒளித்தாலும் அரண் இல்லை
தவம் உலந்தால்
குஞ்சரத்தின் கோட்டிடையும்
உய்வர் தவம்மிக்கார்
அஞ்சல் இலர் என்றும் அறனே
களைகண் என்பார்"

இனிச் சேக்கிழார் செய்த திருத்தொண்டர் புராணத்துள் புகுவோமாயின், வாய்வந்த பேசும் மகளிரைக் காண்கிறோம்.

நம்பியாரூரர் மணக்கோலம் பூண்டு மணம் வந்த புத்தூரில் குதிரையேறி உலாவருகின்றார். வீதியில் நின்ற மகளிர் அவரைக்கண்டதும்,

"கண்கள் எண்ணிலாத வேண்டும்
காளையைக் காண என்பார்

பெண்களில் உயர நோற்றாள்
சடங்கவி பேதை என்பார்
மண்களி கூரவந்த மணம்
காண வாழ்ந்தோம் என்பார்
பண்களில் நிறைந்த கீதம்
பாடுவார் ஆடுவார்கள்"

"ஆண்டகை அருளின் நோக்கின்,
வெள்ளத்துள் அலைந்தோம் என்பார்
தாண்டிய பரியும் நம்பால்
தகுதியின் நடந்தது என்பார்
பூண்தயங்கிவனே காணும்
புண்ணியமூர்த்தி என்பார்
ஈண்டய மடவார் கூட்டம்
இன்னன இசைப்பச் சென்றார்."

பின்பு நம்பி ஆரூரர், திருவாரூர் சென்று பரவையாரை மணந்து இருக்குங்கால், திருக்கோயிலுக்குச் செல்லும் அவரது சைவக்கோலம் கண்ட மகளிர் சிவநெறி நின்று பேசுவாராய்,

"நாவலூர் வந்த சைவ
நற்றவக் களிறே என்றும்,
மேவலர் புரங்கள் செற்ற
விடையவர்க்கு அன்ப என்றும்
தாவில் சீர்ப்பெருமை ஆரூர்
மறையவர் தலைவ என்றும்
மேவினர் இரண்டுபாலும்
வேறுவேறு ஆயம் போற்ற"

காண்கின்றோம். இங்கே மகளிர் கண்கள் ஆரூரரின் சைவமேனியும் சிவப்பற்றும் கண்டு பரவுவது இன்பம் தருகிறது.

இனி, மிதிலைநகர் போந்த இராமன்முன், வளைத்தற்பொருட்டு வில்லைக் கொணர்ந்து வைத்ததை நகர மகளிர் கண்டு, இராமனையும் சீதையையும் நினைந்து, நெஞ்சில் தோன்றிய கருத்துக்களை வாய்காவாமல் பேசுகின்றார்கள். அம்மகளிர்,

"காணும் நெடுஞ்சிலைகால் வலிது என்பார்
நாணுடை நங்கை நலங்கிளர் செங்கேழ்ப்
பாணி இவன்படர் செங்கை படாதேல்
வாணுதல் சீதையும் வாழ்விலள் என்பார்;

"கரங்கள் குவித்து இருகண்கள் பனிப்ப
இருங்களிறு இச்சிலை ஏற்றிலனாயின்
நரந்த நறைக்குழல் நங்கையும் நாமும்
முருங்கு எரியில் புக மூழ்குதும் என்பார்;

சிலமகளிர் சீதையின் தந்தையாகிய சனகனை முனிந்து

வள்ளல் மணத்தை மகிழ்ந்தனன் என்றால்
கொள் எனமுன்பு கொடுப்பதை அல்லால்
வெள்ளம் அணைத்தவன் வில்லை எடுத்து இப்
பிள்ளை முன் இட்டது பேதைமை என்பார்.

ஒருசில மகளிர் வேறுபட நினைந்து வெகுண்டு,

ஞான முனிக்கு ஒரு நாண் இலை என்பார்
கோன் இவனில் கொடியார் இலை என்பார்

மானவன் இச்சிலை கால் வலியானேல்
பீனதனத்தவள் பேறிலள் என்பார்; ஆயினர்.

இராமன் வில்லை இறுத்தபின் நகரமுழுதும் மகிழ்ச்சி ஆரவாரம் பொங்குகிறது. மனத்திற்பட்டதைப் பட்டாங்கு மொழியும் மகளிர் தெருவின் இருமருங்கும் நிரல்பட நின்று, இராமன் முதலியோர்ரைப் பாராட்டிப் பேசுகின்றனர்.

"தயரதன் புதல்வன் என்பார்
தாமரைக் கண்ணன் என்பார்
புயல் இவன் மேனி என்பார்
பூவையும் பொருவும் என்பார்;
மயலுடைத்து உலகம் என்பார்
மானுடன் அல்லன் என்பார்
கயல் பொருகடலுள் வைகும்
கடவுளே காணும் என்பார்."

"நம்பியைக் காண நங்கைக்கு
ஆயிரம் நயனம் வேண்டும்
கொம்பினைக் காணுந்தோறும்
குரிசிற்கும் அன்னதேயாம்
தம்பியைக் காண்மின் என்பார்
தவம் உடைத்து உலகம் என்பார்
இம்பர் இந்நகரில் தந்த
முனிவனை இறைஞ்சும் என்பார்."

இங்ஙனம் மகளிர் பேசுவன பலவும் நோக்குவோமாயின் காலந்தோறும் உடையும் உணர்வும் ஒழுக்கமும் மாற்றமடையினும் பேசும் பண்புகள் சிலமாறாமல் இருப்பது நன்கு விளக்கமாகிறது. காணப்படும் பொருள் நிகழ்ச்சிகளில் கருத்தைச் செலுத்தும் மகளிர் அவற்றைப்

பற்றித் தம் நெஞ்சில் தோன்றும் எண்ணங்களைப் பிறர் விரும்பினும் விரும்பாதொழியினும் வாய்விட்டுப் பேசுவதை இயல்பிலே உடையவர்களாய் இருப்பதை இன்றும் எங்கும் காண்கின்றோம்.

3. பூவையின் புதுமலர்ச்சி

முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாது உடீஇக்
குவளையுண்கண் குய்ப்புகை கமழத்
தான் துழந்து அட்ட தீம்புளிப்பாகர்
இனிது எனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே.

இப்பாட்டுக் குறுந்தொகையில் உள்ளது ஒன்று.

இளம்பெண்ணொருத்தி தன் கணவனுக்குத் தயிர்க் குழம்பு பண்ணி அளிக்கின்றாள்; இனிது என்று சொல்லிக் கொண்டு அதனை இன்பமுடன் உண்கின்றான்; அவள் மனம் மகிழ்கின்றாள். இதுதான் இந்தச் சிறிய அழகிய பாட்டின் கருத்து. இதைப் பாடிய புலவர் கூடலூர் கிழார். அவர் இதைப்பாடி இருக்கும் நலத்தைப் பார்ப்போம்.

அவள் தயிர்க் குழம்பு செய்தற்கு எண்ணியது ஏன்? கணவன் கேட்டுக் கொண்டானா? கேட்டதாகவோ, தயிர்க் குழம்பின் நலம் பற்றி அவளோடு உரையாடிய தாகவோ, ஒரு குறிப்பும் இல்லை. அவளே நினைத்து அதனைச் செய்கின்றாள். காரணம் இன்றிக் காரியம்

பிறவாது. சமையற்குக் கொண்ட தயிர் சிவக்கக் காய்ச்சிய பாலில் தோய்ந்தது. அது சிவந்து கண்டம் கண்டமாக இருந்தது: அதைக் கண்டதும் அவளுக்குத் தயிர்க் குழம்பு அமைக்க வேண்டும் என்ற ஆர்வம் தோன்றிற்று; இக்கருத்துத் தோன்ற கூடலூர் கிழார், முளிதயிர் என்று குறிக்கின்றார். முளிதல் என்றால் நன்கு காய்தல், தயிரைக் காய்ச்சுவதில்லை; பாலை, முளிய, சிவக்கக் காய்ச்சி அமைத்த தயிர் என்பதற்கு முளிதயிர் என்கின்றார். அதனைப் பிசைந்து கொள்ளவேண்டுமேயன்றி மத்திட்டுக் கடைவதில்லை: அக்கருத்தும் புலப்படப் பிசைந்த என்கிறார். பிசைகிறபோதும் கடைவது போல இன்றி விரல்களால் பக்குவமாகப் பிசைய வேண்டும்; முரட்டுத் தனமாகப் பிசைந்தால் தயிர் குழம்பாகாது மோர் போல் நீர்த்துவிடும்; அதனால் அவள் தன் மெல்லிய விரல்களால் பிசைந்தாள் என்பது தோன்ற மெல்விரல் என்கிறார். அம்மெல்லிய விரல் தயிரிடை நனைந்து மெல்லப் பிசையுங்கால் சிவந்து தோன்றின; அதனைக் காந்தட் பூவைச் சொல்லி நாம் அறியச் செய்கிறார் புலவர். தெரியாததைத் தெரிவிப்பதற்கு உவமை வேண்டும். மெல்விரல் என்பது நாம் அறிந்தது. ஆனால் இப்புலவர் காந்தள் மெல்விரல் என்றது, தயிர்பிசைந்த மெல்விரல் சிவந்து தோன்றின என்பதற்கு.

இவ்வாறு தயிரைப் பிசையும்போது, அவளுடைய மேலாடை நெகிழ்ந்து வீழ்கிறது. உடனே அவள், தயிர் தோய்ந்த கையினைக் கழுவாமலே அச்சீலையை மேலே தள்ளியுடுத்துக் கொள்கிறாள். அவள் அப்போது உடுத்திருந்தது கஞ்சியிட்டுச் சலவை செய்த சேலை. அதனால் அது போட்டவிடத்தே நில்லாமல் சரிந்தது

என்பது விளங்க, கழுவுறு கலிங்கம் என்றும் சரிந்ததை எடுத்துத் தயிர் பிசைந்த கையோடே, கையைக் கழுவாமலே உடுத்திக் கொண்டாள் என்பதை கழாது உடீஇ என்றும் குறிக்கின்றார். கழாது தள்ளி என்னாமல் உடீஇ, அதாவது உடுத்திக் கொண்டாள் என்கிறார். தள்ளினால் மறுபடியும் சரியும், அதனால் வேலை கெடும் என்பதற்காக இடையில் உடையுடன் செருகிக் கொண்டாள் என்பது விளக்குதற்காக உடீஇ என்று புலவர் கூடலூர் கிழார் புகன்றுரைக்கின்றார். மேலும், அவள் அடுத்தபடியாகத் தாளிதம் செய்ய வேண்டும்; இடையில் சிறிது சுணங்கினால் குழம்பின் சுவையும் மணமும் போய்விடும்; அதற்கு இச்சேலை இடையூறாகக் கூடாது; அதையெண்ணியே அவள் தன் கையைக் கழுவாமலே மிகவிரைவாகச் சீலையைச் சரி செய்து கொண்டு தாளிதம் செய்யலுற்றாள். தாளிதத்தின் பக்குவத்தை மிக்க கருத்தோடு நோக்கினமையின், அதன் புகை எழுந்து நறுமணம் பரப்பக் கண்டு குழம்பிற் கொட்டிக் கரண்டியாற் குழைத்தாள். அதனைக் கையிட்டுத் துழவுதல் கூடாதாகலின், வெறிதே துழந்து அட்ட என்று உரைக்கின்றார். குழம்பை அமைத்துத் தாளிதம் செய்வதைப் பிறர் செய்யவிடாமல் அதனையும் அவள்தானே செய்தமை தோன்றத் தான் துழந்துஅட்ட என்று இயம்புகிறார். தயிர்க்குழம்பு அமைக்கும்போது நல்ல சலவைச் சேலையுடுத்துக் கண்ணிற்கு மையணிந்து கொண்டிருந்தாள். அது விளங்க, குவளையுண்கண் என்று குறித்து, தாளிதப் புகை அவள் கண்ணிற் படிந்த வழியும், அவள் துடைத்துக் கொள்ளக் கூடிய அளவுக்கு மிகவில்லை என்றற்குக் குவளையுண்கண் குய்ப்புகை கமழ என்றார். நறுமணம் கமழத் தாளிதம் செய்தமைத்த குழம்பு.

தோற்றத்தாலும் மணத்தாலும் இனிமையமைந்திருந்தமை கண்டுணர்ந்தாள் என்றற்குத் தீம்புளிப்பாகர் என்றார். புளிப்புச் சிலர்க்குப் பிடிப்பதில்லை; புளிப்பென்றாலே முகம் சுளிப்பர்; இது யாவரும் விரும்பும் இன் சுவையுடையது என்றற்குத் தீம்புளிப்பாகர் என்று எடுத்து மொழிகின்றார்.

இத்துணை அருமையாகவும் அன்போடும் செய்த தயிர்க் குழம்பைப் பிறர் நன்றென மொழியினும் கணவன் நன்று, இனிது மொழிந்தால் மனைமகளிர்க்கு மனம் அமைதியுறும், அன்பும் பாராட்டும் தான் கணவன் மனைவியர் கருத்தைப் பிணித்து நிறுத்துவன. தன் கையாற் செய்ததைத் தன் கணவன் இனிது எனப் பாராட்டியுண்பது அவட்குப் பேரின்பத்தை நல்குகிறது. அதனை அவள் புறத்தே தெரியாதவாறு பெண்மைக்குரிய நாணத்தால் மறைக்கின்றாள்; ஆயினும் அவளது மனம் நிறைந்த மகிழ்ச்சி நுட்பமாக வெளிப்பட்டுவிடுகிறது. "முகந்தானே கொட்டிக்கொடுக்கும் குறிப்பு" என்றபடி, அவள் முகம் மலர்ந்து நெற்றி ஒளிதிகழ்ந்து உள்மகிழ்ச்சியைப் புலப்படுத்துகிறது என்றற்கு நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே" என்கிறார்.

இத்தயிர்க் குழம்பு கணவன் இனிதென உண்டற்கு அவளுடைய கைவிரலும் கண்ணும் பெரிதும் பயன்பட்டமையின் அவற்றைக் காந்தள் மெல்விரல் என்றும் குவளையுண்கண் என்றும், அவளது உண்மலியுவகையைப் புலப்படுத்திய சிறப்பால் ஒண்ணுதல் முகன் என்றும் குறிக்கின்றார். தானே துழந்தட்டது தன் காதற் கணவனுக்கு இன்பம் செய்ததைத் தானே காண்டலின் அவள் மகிழ்கின்றாள். தன் திறத்தைக்

கணவன் வியந்து மகிழ்வது காணும்கால் பெருமிதமோ செருக்கோ கொள்ளாது, தன் மகிழ்ச்சியை நன்கு வெளிப்படுத்தாது அடங்கியொழுகிய அவளுடைய அரும்பண்பு நாம் அறியுமாறு நுண்ணிதின் மகிழ்ந்தன்று என்று கூடலூர் கிழார் குறிக்கின்றார்.

இவ்வாறு சொல்லும் பொருளும் நனிசிறப்பச் சுருங்கச் சொல்லிக் கற்பாரை இன்பத்தில் ஆழ்த்துவதால் இலக்கியங்கள் ஏற்றம் பெறுகின்றன.

இப்பாட்டில் வரும் கழுவுறுகலிங்கம் என்பது வினைத்தொகை, கழுவுற்ற கலிங்கம், கழுவுறும் கலிங்கம் என விரியும். கழுவுறும் கலிங்கம் என எதிர்காலம் தொக்க தொகையாகக் கொண்டு துவைக்காத உடை என்று சிலர் பொருள் கூறுவர். துவைக்காத உடையும், அழுக்கேறிய உடம்பும் கொண்டு தயிர்க் குழம்பு செய்தாள் எனவுரைப்பது பொருத்தமாக இல்லை. இறந்த காலம் தொக்க வினைத்தொகையாகக் கொண்டு, கழுவுற்ற, அதாவது துவைத்துச் சலவை செய்யப்பட்ட உடையெனவே அவளும் உடல் தூயளாய் தூய உடையணிந்து அட்டிலுக்குள் சென்று அக்குழம்பு செய்தாள் என்பது விளங்கும். மேலும், துவைக்காத உடையைக் கழுவாத கையால் திருத்திக் கொண்டாள் என்பதில் சிறப்பில்லை.

இப்பாட்டில் இரண்டு கருத்துக்கள் சிறப்பாக உள்ளன; ஒன்று, மனைவி, தயிர்க்குழம்பு செய்தது; மற்றொன்று, கணவன் உண்ணக் கண்டு அவள் மனமகிழ்ந்தது.

தயிர்க் குழம்புக்கு அடிப்படையாக வேண்டுவது தயிர்; அது சிவக்கக் காய்ந்த பாலிலிருந்து அளவாகப்

பிரையிட்டுத் தோய்ந்ததாக வேண்டும். அவ்வாறு அமைந்த தயிர் என்பதற்காகத்தான் புலவர் முளிதயிர் என்கிறார். அதனைக் கையிட்டு விரல்களால் பையப் பிசைந்து செய்ய வேண்டுமாகலின் அவள் நீராடித் துவைத்துச் சலவை செய்த ஆடையணிந்து, கண்கட்குமையிட்டுத் தூயநிலையில் இருந்து செய்தாள் என்பதைக் காட்ட, காந்தள்மெல்விரல் என்றும், கழுவுறுகலிங்கம் என்றும், குவளையுண்கண் என்றும் குறித்துரைக்கின்றார். சரிந்த மேலாடையை தள்ளிக் கொள்தற்கும் நேரமின்றித் தயிர் பிசைந்த கையோடே அந்த ஆடையைச் செருகிக் கொண்டது, தயிர்க் குழம்பு செய்வதில் அவட்கிருந்த ஊக்கத்தையும் விரைவையும் காட்டுகிறது.

தன் மைதீட்டிய. கண்ணிற் புகைபடியும் என அஞ்சிப் பிறரை விடாது தானே, புகை கமழத் தாளிதம் செய்தாள் என்பது அக்குழம்பின் சுவை தாளிதத்தைச் சார்ந்திருப்பதையும், சுவைகெடாவாறு அத்தாளிதத்தைச் செய்வதில் தனக்கிருக்கும் ஆர்வம் பிறர்பால் இராது என்பதையும் எண்ணிச் செய்த அவளது வினைத்திறத்தை உணர்த்துகிறது.

தான் தன் மனக்கினிய கணவன் பொருட்டுத் தானே முன்னின்று செய்தது, அவனுக்கு மிக்க இன்பம் தந்து இனிது இனிது எனப்பாராட்டி உண்ணச் செய்தமையின், அவள் மனமகிழ்ந்தாள். அம்மகிழ்ச்சி புறத்தே வெளிப்படத் தெரியுமாயின் மகிழ்ச்சி இன்பப் பயன் செய்யாது; பெண்மைக்கும் ஆகாது. அதனால் முற்றவும் வெளிப்படாது அடக்கினாள் எனினும், "முகத்தினும் முதுக்குறைந்த துண்டோ, உவப்பினும்

காயினும் தான்முந்துறும்'' என்றபடி, முகம் உள்ளத் துவகையை ஓரளவு வெளிப்படுத்திவிட்டது என்றற்கு நுண்ணிதின் மகிழ்ந்தன்று என்றார். நுண்ணிதின் என்றது உள்ளத்து மகிழ்ச்சியை வெளிப்படாது அவள் மறைத்தமையும் முகம் அதனை ஒருவாறு கண்டு புலப்படுத்தினமையும் காட்டுகிறது.

4. காரைக்காற் புனிதவதியார்

புனிதவதியார் காரைக்காலில் வணிகர்குலச் செல்வரான தனதத்தன் என்பவர்க்கு மகளாவர். அவரது குடும்பம் சிவநெறியில் சிறந்து நின்றது; அதனால், புனிதவதியார்க்கு இளமையிலேயே சிவத்தின்பால் பேரன்பு தோன்றி, அவர் வளர வளர, அப்பேரன்பும் உடன் வளர்ந்தது. இதனைச் சேக்கிழார்,

"பல்பெரு நற்கிளை உவப்ப
பயில்பருவச் சிறப்பெல்லாம்
செல்வமிகு தந்தையார்
திருப்பெருகும் செயல்புரிய
மல்குபெரும் பாராட்டின்
வளர்கின்றார்; விடையவர்பால்
அல்கிய அன்புடன் அழகின்
கொழுந்து எழுவதென வளர்வார்"

என்று குறிக்கின்றார். பிறக்கும் போதே பேரழகுடன் பிறங்கினாராதலால், அவரது வளர்ச்சியை "அழகின் கொழுந்து எழுவதென வளர்வார்" என்று கூறுகிறார். அவரது பிறப்பைக் கூறும்போது,

"வங்கமலி கடற்காரைக்
காலின்கண் வாழ்வணிகர்
தங்கள் குலத்தலைவனார்
தனதத்தனார் தவத்தால்
அங்கு அவர்பால் திருமடந்தை
அவதரித்தாள் என வந்து
பொங்கிய பேரழகுமிகப்
புனிதவதியார் பிறந்தார்"

என்று சேக்கிழார் உரைக்கின்றார். பிறந்த குழந்தையைக் கண்டவர், இது திருமகளின் அவதாரம் என்று பாராட்டினர் என்பது தோன்றத் "திருமடந்தை அவதரித்தாள் என" (என்று பலரும் பாராட்ட) என்று செப்புகின்றார். புனிதவதியாரின் மேனியழகைச் சேக்கிழார் சிறப்பிப்பதில் ஒரு கருத்துண்டு, ஒருவர்க்கு அழகிய உடம்பு அமைவது எளிதன்று; முன்னைத் தவமுடையார்க்கே அஃது அமையும் என்பர் சான்றோர். திருத்தக்க தேவரும்,

"கருவிமாமழை கனைபெயல் பொழிந்தென வழிநாள்,
அருவிபோல் தொடர்ந்து அறாதன அரும்பிணி அழலுள்
கருவில் காய்த்திய கட்டளைப் படிமையில், பிழையாது
உருவின் மிக்கதோர் உடம்பது பெறுதலும் அரிதே"

என்று கூறுவர்.

இனி, திருமடந்தை அவதரித்தாள் என்பதாயின், அதற்கும் முன்னைத் தவம் வேண்டும் என்பர். "மையறு மலரின் நீங்கி யான் செய்மாதவத் தால்வந்து, செய்யவள் (திருமகள்) இருந்தாள் என்ன" என்று கம்பர் உரைக்கின்றார். அதற்கொப்பவே, சேக்கிழாரும், "தனதத்தனார் தவத்தால் அங்கு அவர்பால் திருமடந்தை

அவதரித்தாள் என வந்து பொங்கிய பேரழகுமிகப் புனிதவதியார் பிறந்தார்" என்று மொழிகின்றார்.

இவ்வாறு தவப் பெருமையும் செல்வச் சிறப்பும் சிவப்பற்றும் ஒருங்கு நிலவிய குடும்பச் சூழலில் புனிதவதியாகிய குழந்தை வளர்ந்தமையின் இளமையிலேயே அவளுடைய பேச்சிலும், விளையாட்டிலும் சிவன்பால் அன்பு தோன்றி விளங்கிற்று. குடிப்பிறப்பும் கல்வியும் ஒருபால் இருப்பினும், சூழ்நிலை, ஒருவரது மனவளர்ச்சிக்கும், பண்பாட்டுக்கும் காரணமாகும்; அதனால், திருந்திய கல்வியும் பொருந்திய இளமையும் நிறைந்த புனிதவதியாரின் திருவுள்ளம் திருவருள் நெறியில் அமைந்திருந்தது. ஏனைய சிறுமிகளோடு விளையாடுங்கால் அவருடைய எண்ணமும் பேச்சும் இனநலச் செய்கையும் எல்லாம் சிவபெருமான் திருநெறியிலேயே ஒன்றியிருந்தன. புனிதவதியின் வெள்ளையுள்ளத்துப் பிள்ளை விளையாட்டைக் கூறவந்த சேக்கிழார் –

"வண்டல்பயில்வன எல்லாம்
வளர்மதியம் புனைந்த சடை
அண்டர் பிரான் திருவார்த்தை
அணையவருவன பயின்று
தொண்டர் வரின் தொழுது
தோழியர் போற்றத் துணை முலைகள்
கொண்டு நுசுப்பு ஒதுங்குபதம்
கொள்கையினில் குறுகினார்"

என்று ஆசிரியர் உரைக்கின்றார். வண்டல், மகளிர் விளையாட்டு. ஏனைமகளிரொடு கூடி விளையாடு மிடத்தும் சிவபரம்பொருளின் திருவார்த்தையே அவர்

வாயில் வந்தன எனின், அதற்கு அவர் குடும்பச் சூழ்நிலையல்லது வேறு காரணம் இல்லை. அவ்விளை யாட்டிடத்தும் சிவத் தொண்டர் எவரேனும் வரின், உடனே புனிதவதியார் அவர்களை மனமுவந்து தொழுதார். நமக்கு ஒருவரிடத்து அன்புண்டாயின் அவருடைய உறவினரிடத்தும் அன்புண்டாகும்; அதுபோலவே, சிவன்பால் உண்மையன்பு இருக்குமாயின், அவனுடைய தொண்டரிடத்தும் அன்பும் நன்மதிப்பும் தோன்றும். இதுபற்றிச் சிவஞான போதம் "மாலற நேயம் மலிந்தவர் வேடமும், ஆலயம் தானும் அரன் எனத்தொழுமே" என்று மொழியும்.

சிவஞானசித்தியார்,

> "ஈசனுக்கு அன்பில்லார் அடியவர்க்கு அன்பில்லார்
> எவ்வுயிர்க்கும் அன்பில்லார் தமக்கும் அன்பில்லார்
> பேசுவதென் அறிவில்லாப் பிணங்களை; நாம் இணங்கின்
> பிறப்பினிலும் இறப்பினிலும் பிணங்கிடுவர்; விடு ர்
> ஆசையொடும் அரனடியார் அடியாரை அடைந்திட்டு
> அவர் கருமம் உன்கருமமாகச் செய்து
> கூசி மொழிந்து அருள்ஞானக் குறியில் நின்று
> கும்பிட்டுத் தட்டமிட்டுக் கூத்தாடித்திரியே"

என்று கூறுகிறது. இத்தகைய சிவவொழுக்கம் புனிதவதிக்கு இளமையிலே விளங்கியிருந்தது என்பது வெளிப்படுத்தவே. "அண்டர்பிரான் திருவார்த்தை அணைய வருவன பயின்று, தொண்டர்வரின் தொழுது" வளர்ந்தார் என்று சேக்கிழார் தெரிவிக்கின்றார். புனிதவதியாரும் பிற்காலத்தில் தாம் பாடிய திருவந்தாதியில், இளமைக் காலத்திலேயே தமக்குச் சிவன்பால் அன்புமிக்கிருந்த திறத்தை –

"பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம் காதல்
சிறந்து நின் சேவடியே சேர்ந்தேன். அறம் திகழும்
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
எஞ்ஞான்று தீர்ப்பது இடர்"

என்று பாடுகிறார்.

திருமணம்

இவ்வண்ணம் உடலழகும் சிவப்பற்றும் உடன் வளர வளர்ந்து வந்த புனிதவதியாரை உரிய காலத்தில் பரமதத்தன் என்பவர்க்குத் திருமணம் செய்து காரைக் காலிலேயே மனையறம் படுத்தினார்கள்.

புனிதவதியார் மணம் புரிந்து கொண்டு மனையறம் பூண்ட காலத்தும், பிள்ளைப்பருவம் முதலே மேற்கொண்டொழுகிய சிவப்பற்றும் சிவத்தொண்டும் சிறிதும் வழுவாது ஒழுகினார். அதே நேரத்தில் மனையறத்தின் பண்பு வழுவாது பரமதத்தனுடைய நல்வாழ்வுக்கு ஏற்ற துணைவியாய் இருந்து வந்தார். இதனைச் சேக்கிழார்,

"ஆங்கு அவன்தன் இல்வாழ்க்கை
அருந்துணையாய் அமர்கின்ற
பூங்குழலார் அவர்தாமும்
பொருவிடையார் திருவடிக் கீழ்
ஓங்கிய அன்புறுகாதல்
ஒழிவின்றி மிகப்பெருகப்
பாங்கில் வரும் மனையறத்தின்
பண்புவழாமையில் பயில்வார்"

என்று பகர்கின்றார். ஏன் என்றால், திருவருள் வாழ்க்கையில் ஈடுபடுவார்க்கு உலகியற் பொருள் வாழ்க்கையில் விருப்பம் குறையும் என்று அறிஞர்

கருதுவர். அருள் வாழ்வில் உள்ளம் சென்றமையின், சுந்தரமூர்த்திகள், உலகியல் மனைவாழ்க்கையில் விருப்பின்றி, "இன்பமுண்டேல் துன்பம் உண்டு ஏழை மனை வாழ்க்கை" என்று கூறுவதைப் பார்க்கின்றோம். ஆனால் புனிதவதியின் நிலை அத்தகையதன்று அவர் உள்ளத்தில் இறைவன்பால் அன்பு மிகுந்து ஓங்கி பெருகிற்று; அதனை, "பொருவிடையார் திருவடிக்கீழ் ஓங்கிய அன்புறுகாதல் ஒழிவின்றி மிகப்பெருக" என்று சேக்கிழார் குறிக்கின்றார். வயது வளர வளரச் சிவன்பால் உற்ற அன்பும் வளர்ந்தோங்கிற்று என்பதற்காக, ஓங்கிய அன்பு பெருகிய வழியே, அன்பு செய்யப்பட்ட பொருளின் கண் காதல் உண்டாகுமாதலால், "ஓங்கிய அன்பு உறு காதல்'' என்று சேக்கிழார் ஒவ்வொன்றாகச் சிறப்பிக்கின்றார். இவ்வாறு சிவத்தின்பால் உண்டான பேரன்பு பெருகியபோதும், மனை வாழ்வுக்குரிய பண்பில் புனிதவதியார் ஒருசிறிதும் வழுவாது ஒழுகினார். அதனை எடுத்துக்காட்டவே, "பாங்கில்வரும் மனையறத்தின் பண்பு வழாமையில் பயில்வார்'' என்று உரைக்கின்றார்.

மேலும், மனைக்குரிய அறங்களைச் செய்வதில் பண்பு குன்றாமையே அன்றித் தற்கொண்டாற் பேணுதல் என்ற தனியறத்திலும் புனிதவதியார் உயர்ந்து விளங்கினார். தன்னைக் கொண்ட தலைமகனுக்கு அறிவுத் துணையாய் அவன் செய்தொழிற்கு உறுதுணையாதலும் அவட்கு அறமாதலால் அத்துறையிலும் அவர் மேன்மையுற்றார்; அதனை இப்பாட்டின் தொடக்கத்தி லேயே சேக்கிழார், "ஆங்கு அவன்தன் இல்வாழ்க்கை அருந்துணையாய் அமர்கின்ற பூங்குழலார்" என்பதனால் குறிக்கின்றார்.

இவ்வாறு, கணவனது இல்வாழ்க்கைக்கு அருந்துணையாய், மனையறத்தில் பண்பு வழுவாதவராய்ச் சிவன்பால் உற்ற பேரன்பு குன்றாதவராய் ஒழுகி வருகையில், ஒருநாள் பரமதத்தன் தன் வணிக நிலையத்தில் அமர்ந்திருக்கும்போது, தன்னிடம் வந்தவர் தந்த மாங்கனிகள் இரண்டினை ஏவலர் கையிற்கொடுத்து, ''ஈங்கு இவற்றை இல்லத்துக் கொடுக்க'' என விடுக்கின்றான்.

புனிதவதியார் அவற்றை ஓரிடத்தே வைத்துத் திரும்பிய சிறிதுபோதில் மூத்துமுதிர்ந்த சிவத்தொண்டர் ஒருவர் பசிவேட்கை மிகுந்து அயர்ந்த நடையுடன் அவர்மனைக்கு வந்தார். அடியார்வரின் அவர்களின் தகுதியறிந்து உணவோ உடையோ பொருளோ வேண்டுவன நல்குவது புனிதவதியார்க்கு வழக்கம். அதனை,

"நம்பர் அடியார் அணைந்தால்
நல்லதிருவமுது அளித்தும்
செம்பொன்னும் நவமணியும்
செழுந்துகிலும் முதலான
தம்பரிவினால் அவர்க்குத்
தகுதியின் வேண்டுவ கொடுத்தும்
உம்பர்பிரான் திருவடிக்கீழ்
உணர்வுமிக ஒழுகும் நாள்"

என்று சேக்கிழார் கூறுகின்றார்.

இங்ஙனம் உம்பர்பிரான் திருவடிக்கண் உணர்வு மிகும் புனிதவதியார் பசித்து வந்து நிற்கும் சிவத்தொண்டரை நோக்குகின்றார். மெய்த்தொண்டர் எனத் தெளிந்து, "நாதன்தன் அடியாரைப் பசிதீர்ப்பேன்"

என்று துணிகின்றார்; அடுக்களையில் நுழைகின்றார். ஆனால், அங்கே வெறுஞ்சோறுமட்டில் சமைத்திருக்கிறது; காய்கறிகள் பக்குவமாகவில்லை. மனத்தில் சிறிது கலக்கமுண்டாகிறது. எனினும், அடியவரின் பசியை எப்படியேனும் தீர்த்தல் வேண்டுமெனத் துணிகின்றார். இதனை,

> "கறியமுது அங்கு உதவாதே
> திருவமுது கைகூட
> வெறிமலர்மேல் திருவனையார்
> விடையவன்தன் அடியாரே
> பெறல் அரிய விருந்தானால்
> பேறு இதன்மேல் இல்லையெனும்
> அறிவினராய் அவர் அமுது
> செய்வதனுக்கு ஆதரிப்பார்."

என்று அவரது வரலாறு கூறுகிறது. காய்கறிகள் சமைக்கப் படாமையால், "கறியமுது அங்கு உதவாதே" என்றும், சோறுமாத்திரம் சமைத்திருந்தமை தோன்றத் "திருவமுது கை கூட" என்றும் குறிக்கின்றார். வெறிதே சோறு என்பது சிறப்பாகாமையால், உண்பதற்குரிய அதன் உயர்வு தோன்றத் திருவமுது என்று காட்டப்படுகிறது. முகம் அமர்ந்து விருந்தோம்பும் மனையின்கண் அகம் அமர்ந்து வீற்றிருப்பது திருமகட்கு இயல்பு என்பர் திருவள்ளுவர். வந்த அடியவர்க்கு முகம் அமர்ந்து விருந்து செய்வது பற்றிப் புனிதவதியாரைச் சேக்கிழார், "வெறிமலர் மேல் திரு அனையார்" என்கின்றார். திருமகள் போல் காட்சிதரும் புனிதவதியின் மனத்தின் கண் பல நினைவுகள் எழுந்து பூசலிடுகின்றன.

குடிசையிலாயினும் கிடைத்ததை உண்டு மனம் மகிழ்ந்து செல்லும் இயல்பினர்; கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்; ஓடும் செம்பொன்னும் ஒப்ப நோக்கும் துறவி. அவர் அடுத்த மனைக்குச் சென்று கிடைத்ததை அருந்திச் சென்றுவிடுவார். நான் அவர்க்கு விருந்து செய்யும் பேற்றை இழந்து விடுவேன் என்று அஞ்சினார். அன்பும் அறிவும் ஒன்றுகூடி நல்லுணர்வை மேம்படச் செய்து உணவு அளிக்க வேண்டும் என்ற ஆர்வத்தைத் தோற்றுவித்தது. நல்ல செயல்வகைக்கு ஆர்வத்தை தூண்டிவிட்டது.

கறியமுது கைகூடும் வரை தாழ்ப்பேமாயின் விருந்தாய் வந்துள்ள அடியார் பசி கடுகுதலால் வேறிடம் நாடிச் சென்று விடுவார்; விடையேறும் பெருமானுடைய மெய்த் தொண்டர்க்கு விருந்து செய்யும் வாய்ப்புக் கிடைப்பது அரிது; அது பெறற்கு அரும்பேறு, என்று அவரது நல்லறிவு எழுந்து வற்புறுத்துகிறது அதனால், அவர்க்குத் திருவமுது இட்டேனும் உண்பிக்க வேண்டுமென்ற உணர்வு மேம்பட்டு ஆர்வம் தோன்றுகிறது. இது, "விடையவன்தன் அடியாரே பெறல் அரிய விருந்தானால் பேறு இதன்மேல் வேறில்லை என்னும் அறிவினராய், அவர் அமுது செய்வதனுக்கு ஆதரித்தார்" என்பதனால் தெரிகிறது. இங்ஙனம் அறிவும் ஆதரவும் (அன்பும்) ஒன்று கூடிய வழி. செயல்வகைக்குரிய நேரிய உணர்வு மேம்படுகிறது. ஆர்வம் கிளர்கிறது. தன் கணவன் விடுத்த மாங்கனிகள் உணர்வில் தோன்றவே, ஒன்றைக் கொணர்ந்து இட்டு அடியவரை உண்பித்து விடுகின்றார். அவர் உண்பித்த திறத்தை,

"இல்லாளன் வைக்க எனத்
தம்பக்கல் முன்னிருந்த

நல்ல நறு மாங்கனிகள்
இரண்டினில் ஒன்றைக் கொண்டு
வல்விரைந்து வந்தணைந்து
படைத்து மனமகிழ்ச்சியினால்
அல்லல் தீர்ப்பவர் அடியார்
தமை அமுது செய்வித்தார்"

என்று சேக்கிழார் எடுத்துரைக்கின்றார்.

விரைவு

அடியவரை உண்பித்தல் வேண்டும் என்ற ஆர்வ மிகுதியும் விருந்தோம்புதல் என்ற அச்செயலின் கண் பொருந்தி நிற்கும் உள்ளக்கிளர்ச்சியும் அன்பு அமைந்த நல்லுணர்வும் புலப்படுத்தும் குறிப்புடையது அவ்விரைவு. விருந்தோம்புவதன் பண்பு விருந்தினரின் பசிமிகுதி கண்டு விரைந்து போக்குவது. உள்ளத்தில் மகிழ்ச்சியும் ஆர்வமும் இல்வழி, செயலில் விரைவு குன்றும்.

இல்லாளனாகிய பரமதத்தன் அனுப்பிய மாங்கனிகள் நல்லனவாய், நறிய சுவையுடையனவாய் இருந்தமையால், அவன் வைக்கச் சொன்னதற்கேற்ப அவற்றைப் புனிதவதியார் தக்க இடத்தில் வைத்திருந்தார். விருந்தோம்பற்கெழுந்த உணர்வில் அக்கனிகள் தோன்றவும், அவை அடியவரை உண்பிப்பதற்கு ஏற்ற கறியமுதாம் என எண்ணினரேயன்றி, நல்ல நறிய மாங்கனிகள் என்று அவற்றின் நன்மையும் நறுமையும் மதிக்கவில்லை, எண்ணவுமில்லை என்பதற்கு "நல்லநறு மாங்கனிகள்'' என்று ஆசிரியர் சிறப்பிக்கின்றார். அடியவரது பசிமிகுதியை நோக்கி, மிக விரைந்து கொணர்ந்தாராகலின் வல்விரைந்து வந்தணைந்து'' என்றும், அடியவர் உண்டு மலரும் முகம் நோக்கிப்

புனிதவதியார் மனமகிழ்ச்சியினால் அமுது செய்வித்தார் என்றும் கூறுகின்றார். இச்செயலால் புனிதவதியார்க்கு அல்லல் விளையப் போகிறது; அது பின் இறைவன் அருளால் நீங்கும் என்பது தோன்ற சிவனடியார் என்னாமல் "அல்லல் தீர்ப்பவர் அடியார்" எனச் சேக்கிழார் குறிப்பாய் முன்னுறக் கூறுகின்றார்.

அடியவர் அமுதுண்டு சென்ற பின், பரமதத்தன் வந்து நண்பகற் கடன்களை முடித்துக் கொண்டு உணவு கொள்ளலானான். அக்காலை, அவனுக்கு இன்னடிசில் கறிகளுடன் எய்து முறை இட்டதன்பின் எஞ்சியிருந்த ஒரு மாங்கனியைப் புனிதவதியார் படைத்தார். அதனை உண்டவன், அதன் சுவைமிகுதியில் கருத்திழந்து ஆசைமிகுந்து மற்றக் கனியையும் கொண்டுவந்து இடுக என்றான். அவன் மனத்தைக் கவர்ந்த மாங்கனி அவளை அசைக்கவே இல்லை. அதனைச் சேக்கிழார் –

"மனைவியார் தாம் படைத்த
மதுரம் மிக வாய்த்த கனி
தனைநுகர்ந்த இனிய சுவை
ஆராமைத் தார்வணிகன்
இனையதொரு பழம் இன்னும் உளது
அதனை இடுக என
அனையது தாம் கொண்டுவர
அணைவார் போல் அங்கு அகன்றார்"

என்று இயம்புகின்றார். அவர்கள் படைத்த மாங்கனி இயல்பிலேயே இனிமை மிகுந்தது என்றற்கு "மதுரம் மிக வாய்ந்த கனி" என்றும், அதனை உண்டவுடன் அதன் இனிமை அவன் உள்ளத்தில் அமைதி தோற்றுவிக்காமல் மேலும் உண்ண வேண்டும் என்ற வேட்கையை

மிகுவித்தது என்பார்", மதுரம் மிக வாய்த்த கனிதனை நுகர்ந்த இனிய சுவை ஆராமை" என்றும் குறிக்கின்றார். இந்த ஆராமையால், புனிதவதியாரிடத்து அவனுக்கிருந்த அன்பையெழுப்பி "இனையதொரு பழம் இன்னும் உளது; அதனை நீ உண்க" என்று சொல்லவிடாது, "அதனை எனக்கு இடுக" என்று சொல்வித்தது. மதுரம் மிக வாய்த்த கனியின் மதுரத்திற்கு அடிமையாக்கி, தானேயுண்ண வேண்டும் என்ற தன்னலப்பண்பு தோன்றியது. மன அமைதியில்லை. அவன் எத்துணையோ மாதவம் செய்து தான் அம்மையாரை மனைவியாகப் பெற்றான். இறைவன் பேரருளில் தோய்ந்து நிற்கும் அம்மையின் கைகளால் அமுதுண்ணும் பேறு பெற்ற பரமதத்தனைத் தாழ்ந்தவனாகக் கருதுவது கூடாது. ஆனால் மதுரம் மிக வாய்த்த கனியின் சுவை செய்த வம்பு அது. அக்கனி அவன் கருத்தைத் தன்வயமாக்கி, அன்பை மறக்கச் செய்தது. தன்னல மிகுந்தவனாயின் கடையிலே கனியை நுகர்ந்திருப்பான்.

"இடுக" என்றது கேட்டதும், அதனைத்தாம் அடியவர்க்கு அளித்துவிட்டதை எண்ணி, மனத்தில் அயர்ச்சி தோன்ற, என் செய்வது என்றறியாமல் திகைத்து மயங்குகிறாள் மாது. "அனையது தாம் கொண்டுவர அணைவார் போல் அங்கு அகன்றார்" என்று சேக்கிழார் தெரிவிக்கின்றார்.

பரமதத்தன் முன்னே நில்லாது அடுக்களையுட் புகுந்த புனிதவதியார் மெய்மறந்து நிற்கிறார். "விடையவன் தன் அடியாரே பெறலரிய விருந்தானால் பேறு இதன் மேல் இல்லை" என்று கருதியதும் உணர்வில் எழுகிறது. விடையேறும் பெருமானுடைய திருவடியைச்

சிந்திக்கின்றார். உடனே அவர் கையில் ஒரு மாங்கனி வந்து அமர்கிறது. இந் நிகழ்ச்சியை,

"அம்மருங்கு நின்று அயர்வார்
அருங்கனிக்கு அங்கு என் செய்வார்;
மெய்ம்மறந்து நினைந்து உற்ற
இடத்து உதவும் விடையவர்தாள்
தம்மனம் கொண்டு உணர்தலுமே
அவர் அருளால் தாழ் குழலார்
கைம்மருங்கு வந்திருந்தது
அதிமதுரக்கனி யொன்று"

என்று வரலாறு கூறுகிறது. வந்ததுகூடத் தெரியாமல், உணராமல், அவ்வளவு மயங்கி, அயர்ந்து உணர்வற்று நிற்கின்றார்.

திடுமென எதிர்பாராத நிகழ்ச்சியொன்று நிகழும்போது, ஒருமருட்சி – ஒரு மருட்கை – வியப்பு –ஒரு புதுமை – ஏற்படுவது இயல்பு. ஆனால் கணவனுக்கு நேரம் தாழ்க்காமல், ஐயத்திற்கு இடம்விடாமல், தமது கையில் ஒரு மாங்கனி எய்தவும், புனிதவதியார் அதனை நன்கு காண்பதோ, அதுபற்றி வியப்பதோ ஒன்றும் செய்யாமல் உடனே கொண்டுவந்து கணவனிடம் அளித்தார். அடியார்க்கு வல்விரைந்து சென்ற மாண்புடையாள், கணவனை உண்பித்தலில் எத்துணை விரைவாள்! அதனை உண்டதும் பரம தத்தனுக்குச் சுவையிற் புதுமையும், உணர்வில் அயர்வும் உண்டாயின. இது நான் முன்னே தந்த மாங்கனி அன்று; மூவுலகினும் பெறுதற்கரியது; இதனை நீ எங்கே பெற்றாய்" என்று மருண்டு கேட்கின்றான்.

"மற்றதனைக்கொடுவந்து
மகிழ்ந்து இடலும் அயின்று அதனில்
உற்ற சுவை அமுதினும்
மேற்பட உளதாயிட, இதுதான்
முன்தரும் மாங்கனியன்று;
மூவுலகில் பெறற் கரிதால்;
பெற்றது வேறு எங்கு என்று
பெய்வளையார் தமைக் கேட்டான்"

மனம்மகிழ்ந்து முகம் மலர்ந்து இடுகின்ற புனிதவதியாரை நோக்காமல், நாவின் சுவைப்புலனுக்கே அடிமைப்பட்டு, கனியை நோக்கிப்பரமதத்தன் விரைந்து வேறொன்றும் எண்ணாது உண்கின்றான். அதன் சுவையுணர்வு அவன் உள்ளத்தைக் கவர்ந்து கொள்கிறது; முன்னே உண்ட கனியின் சுவையினும், இறைவன் அருள்வடிவில் வந்த கனியின் சுவை மிகச் சிறந்திருப்பது புலனாகிறது. இரண்டின் சுவையையும் ஒப்புநோக்கிய அவன், இது முன்னே தந்த கனியன்று; மூவுலகினும் பெறற்கரியது என்று எண்ணுகிறான்; "இதுதான் முன்தரும் மாங்கனியன்று; மூவுலகினும் பெறற்கரியது" என்று மொழிந்தான். "இன்னும் ஒரு பழம் உளது; அதனை இடுக" என்றது கேட்டு, மனைக்குட்புகுந்து மெய்சோர்ந்து, அருட்கனியால் ஓரளவு தெளிவு பெற்றிருந்த புனிதவதியார்க்கு, "முன்தரும் மாங்கனியன்று" என்றும், மூவுலகில் பெறற்கரிது" என்றும் சொன்னது, மனத்தை மிகவும் கலக்கி விட்டது; அக்கலக்கம் அவர் உடலைத் தாக்க, உடம்பிலும் மெலிவும் சோர்வும் தோன்றின;

"எய்தவரும் கனியளித்தார் யார்"

அந்நிலையில், அவன், "பெற்றது வேறு எங்கு" என்று ஒரு கேள்வியும் கேட்டான். மனமும் மெய்யும் தளர்ச்சிமிகுந்து சோர்வு படவே, கைவளைகள் தாமாகக்கழன்று விழுவது போன்ற உணர்ச்சி பிறக்கவே, அவற்றை மாறிமாறி இறுகப் பெய்து கொண்டார். இதனை, மனைவியார் தமைக் கேட்டான் என்னாமல், "பெய்வளையார் தமைக் கேட்டான்" என்று கூறி இம்மெய்ப்பாடுகள் நம்மனக்கண்ணில் தோன்றுமாறு சேக்கிழார் உரைக்கின்றார்.

"இது சிவபெருமான் திருவருளால் வந்தது" எனத் தம்பால் பேரருள் உடையனாகிய ஐயனுடைய் அருளிப்பாடு என்று சொன்னால், ஏலாது இகழப்படும் என்றோர் அச்சம் ஒருபால் வருத்த, கணவனுரைக்கு நேரிய விடை கூறாமை கற்புநெறியன்று என்னும் கொள்கை ஒருபால் நெருக்க, தட்டுளுப்புப் பட்டுத் தடுமாறுகிறார். உள்ளம் பதறி உடலில் நடுக்கம் எய்தினார். உரைகுழறி உடல்தளர்ந்து ஓய்ந்து அயர்ந்து அவசமுறுகிறார்.

> "அவ்வுரை கேட்டலும் மடவார்
> அருளுடையார் அளித்தருளும்
> செவ்விய பேரருள் விளம்பும்
> திறமன்று என்று உரைசெய்யார்;
> கைவரு கற்புடைநெறியால்
> கணவன் உரைகாவாமை
> மெய்வழி அன்று என விளம்பல்
> விடமாட்டார் விதிர்ப்புறுவார்"

இங்ஙனம் இடர்ப்பட்ட புனிதவதியார்,ஒருவாறு தேறி, "செய்தபடி சொல்லுவதே கடன்" என்று துணிந்து

நடந்ததைத் தம் கணவனுக்குத் தெளிவாக உரைத்தார். ஆயினும், பரமதத்தனுக்கு மனத்தில் தெளிவு உண்டாகவில்லை. அவன் அருளே கண்ணாகக் காணினல்லால் அவ் அருள்திறத்தின் பெருமை புலனாகாது. இங்கே உண்ட மாங்கனியின் சுவையிலே தோய்ந்த, அதை ஆராய்ச்சிபண்ணி மயங்கிக் கிடக்கும் அவன் உள்ளத்தில் அருள் உணர்வில்லை. மாங்கனியின் சுவைமேல் உண்டான ஆசை பற்றி அமைதியிழந்து அலமரும் அவன் அறிவுக்கு, பிறந்து மொழிபயின்றபோதே – உம்பர் பிரான் திருவடிக்கீழ் உணர்வுமிக ஒழுகி – அவன்பால் ஓங்கிய அன்புறுகாதல் ஒழிவின்றி மிகப்பெருகி வளர்ந்து, ஈசன் திருவருள் வழிநின்ற புனிதவதியின் மெய்யுரை அமைதி நல்காமையோடு "இப்படியும் நடக்குமோ" என்றோர் ஐயத்தையும் எழுப்பிற்று. அவன், இஃது ஈசன் அருளாயின், அத்திருவருளைக் கொண்டு இன்னும் ஒரு கனி வருவிப்பாய் என்று வாய்திறந்து கேட்கின்றான்.

"ஈசன் அருள் எனக் கேட்ட
இல்லிறைவன் அது தெளியான்
வாசமலர்த் திருவனையார்
தமைநோக்கி மற்றுஇதுதான்
தேசுடைய சடைப் பெருமான்
திருவருளேல் இன்னமும் ஓர்
ஆசில்கனி அவன் அருளால்
அழைத்தளிப்பாய் என மொழிந்தான்"

ஈசன் திருவருள் என்று சொல்லக் கேட்பினும், "தேசுடைய சடைப்பெருமான் திருவருளேல்" என்று பரமதத்தன் உரைத்தது, அவனுக்குத் திருவருட் செயலில் இருந்த ஐயத்தை வலியுறுத்திற்று. மேலும், இன்னமும் ஓர்

கனி என்று சொல்லாமல், இன்னமும் ஓர் "ஆசில்கனி" என்று அவன் சொன்னது புனிதவதியாரின் தூயவுள்ளத்தைப்புண்படுத்தியது. அவர் முன்போல் தனியிடத்தே நின்று, சிவபெருமானை நினைந்து, கணவன் விரும்புமாறு, இன்னும் ஓர் கனி அளித்தருள்க; இல்லையாயின் என் உரை பொய்யாகும் என்று வேண்ட, அவர் கையில் திருவருளால் ஒரு கனி வந்தது;அதனை அவன் கையிற் கொடுப்பவும், அவன் மிக்கவியப்புடன் அதனை வாங்கினான். இதனை,

பாங்கு அகன்று மனைவியார்
பணியணிவார் தமைப் பரவி
ஈங்கு இது அளித்தருளீரேல்
என் உரைபொய்யாம் என்ன
மாங்கனி ஒன்று அருளால் வந்து
எய்துதலும் மற்றதனை
ஆங்கு அவன் கைக் கொடுத்தலுமே
அதிசயித்து வாங்கினான்.

என்று சேக்கிழார் உரைக்கின்றார். இறைவன் திருவருளில் உறைத்த அன்புடையராதலால் மாங்கனி தன்கையில் வந்தபோது சிறிதும் தாழ்க்காமல், கணவன் கையிற் கொடுத்தாராக, பரமதத்தன் இன்னுமொரு மாங்கனி எய்தாது என எண்ணியிருந்தமையால், அதனைக் கையில் வாங்கியதும் வியப்பு மேலிட்டு மருள்வானாயினன்; "அதனை ஆங்கு அவன் கைக்கொடுத்தலுமே அதிசயித்து வாங்கினான்" என்று சேக்கிழார் உரைக்கின்றார். இதனால் புனிதவதியார் மனத்தில் திருவருள் தெளிவும், பரம தத்தன் உள்ளத்தில் மருட்சியும் நிலவுவது காணலாம்.

அவன் அக்கனியை வாங்கியவுடன் உள்ளம் மருண்டு ஒருவகை அச்சமும் எய்தலானான். அந்நிலையில் அக்கனி மறைந்து போயிற்று. தடுமாற்றம் உற்ற பரமதத்தன் புனிதவதியாரை நோக்கினான். அவருடைய திருவுருவைத் திருவருள் நிறைந்த தெய்வத் திருவுருவாக எண்ணலானான். மனமாறியவணிகன் ஒன்றும் உரையாடாது ஒதுங்கி விட்டான். புனிதவதியாரோ உற்றவிடத்து உதவிபுரிந்து இடர்களைந்த திருவருளை நினைந்து இன்புற்றனர்.

தன்கையில் வந்த மாங்கனி மறைந்ததனால் பரம தத்தன்பால் உண்டாகிய மனமாற்றத்தை

"வணிகனும் தன்கைப்புக்க
மாங்கனி பின்னைக் காணான்
தணிவரும் பயம் மேற்கொள்ள
உள்ளமும் தடுமாறு எய்தி
அணிகுழலவரை வேறோர்
அணங்கு எனக் கருதி, நீங்கும்
துணிவு கொண்டு எவர்க்கும் சொல்லான்
தொடர்பின்றி ஒழுகும் நாளில்"

என்று கூறுகின்றார்.

புனிதவதியாரின் திருவருட் பெருமை கண்ட பின் அவரோடு தொடர்பில்லாமல், அவரைவிட்டு நீங்கிவிடுவதே தக்கதெனத் துணிந்தான் பரமதத்தன்; அதனை அவன் எவரிடத்தும் சொல்லாமல், கடல் வாணிகத்தின் பொருட்டுச் செல்வதாகச் சொல்லிவிட்டுப் புனிதவதியாரைப் பிரிந்து சென்றான்.

பின்பு அவன் கடல்வாணிகத்தை முடித்துக் கொண்டு தென் பாண்டிநாட்டில் ஒரு நகரத்தை அடைந்து

அங்கொரு மனைவாழ்க்கை நடத்திவரலானான். அது பின்னர்ப் புனிதவதியாரின் பெற்றோர்க்கும் உறவினர்க்கும் தெரிந்தது. அதன் உண்மை துணிந்த அவர்கள், புனிதவதியாரை அவனிடமே சேர்ப்பிக்க எண்ணி, அவரையும் உடன்கொண்டு பரமதத்தன் வாழும் நகர்க்குச் சென்று அவனுக்கும் தமது வரவைத் தெரிவித்தனர்.

அவனுக்கு அங்கொரு பெண்மகவு பிறந்திருந்தது; அதற்கு அவன் புனிதவதியாரின் பெயரையே இட்டிருந்தான்.

அவன் புனிதவதியாரின் வரவு கேட்டதும், அச்சமுற்று, ஒருவாறு தெளிந்து தன் இரண்டாவது மனைவியையும் பெண் மகவையும் அழைத்துக் கொண்டு வந்து, புனிதவதியாரைக் கண்டு அவர் திருவடியில் வீழ்ந்து வணங்கி, ''உமது நல்லருளால் யான் இங்கே வாழ்கின்றேன்; இவ்விளங் குழவிக்கும் உமது பெயரே இட்டிருக்கின்றேன்'' என்று மிக்க பணிவுடன் தெரிவித்தான்.

இதனை,

"தானும் அம்மனைவியோடும்
　　தளர்நடை மகவினோடும்
மான் இளம் பிணைபோல் நின்ற
　　மனைவியார் அடியில் தாழ்ந்தே
யான் உமது அருளால் வாழ்வேன்
　　இவ்விளங் குழவிதானும்
பான்மையால் உமது நாமம்
　　என்று முன்பணிந்து வீழ்ந்தான்"

என்று சேக்கிழார் கூறுகின்றார். பரமதத்தன் தன் மனைவியும் குழந்தையும் உடன்வர வந்தது கண்டதும்,

அவர்களை மருண்டு நோக்கினார் என்றதற்கு "மான் இளம் பிணை போல் நின்ற மனைவியார்'' என்று சேக்கிழார் குறிக்கின்றார். அவ்ன் தன்னைப் பிரிந்த காரணமும் வேறொருத்தியை மணந்து கொண்டு காரைக்காலுக்கு மீண்டுவாராத காரணமும் அறியாராதலால் புனிதவதியார்க்கு மருட்சியுண்டாயிற்று. அம்மருட்சி மேன்மேலும் மிகுமாறு அவன் அவரடியில் வீழ்ந்து வணங்கினான். கணவன் வரவு நோக்கிச் சுற்றத்தாரை நீங்கித் தனிநின்ற புனிதவதியார், தன்னை மனைவியென்று கருதாது வேறு வைத்துப் பேசுவது கேட்டதும் மனத்தே அச்சம் மீதூர்ந்து சுற்றத்தார் பக்கமே சென்று சேர்ந்தார். அவர்களும் "நீ உன் மனைவியை வணங்குவது என்ன? என்று வினவினர்.

பரமதத்தன் அவர்களை நோக்கி, இவரை மக்களினத்து ஒரு பெண்ணாக நினைக்கிறீர்கள்; இவர் ஒரு நற்பெருந் தெய்வம்; அதனை நான் அறிந்ததனால் பிரிந்து இங்கே போந்து, என் மகட்கும் இவர் பெயரை இட்டுள்ளேன்; ஆகவே, நீங்களும் இவரை வணங்கிப் போற்ற வேண்டும்" என்றான். இதனைச் சேக்கிழார்,

"மற்றவர் தம்மை நோக்கி
மானுடம் இவர்தாம் அல்லர்
நற்பெருந் தெய்வமாதல்
நான் அறிந்து அகன்ற பின்பு
பெற்ற இம்மகவு தன்னைப்
பேரிட்டேன்; ஆதலாலே
பொற்பதம் பணிந்தேன்; நீரும்
போற்றுதல் செய்மின் என்றான்''

என்று கூறுகின்றான். மக்களினத்தின் நீக்கி இவரைத் தெய்வமாகக் கருதுமிடத்தும், தெய்வங்களில் இவர் நற்பெருந்தெய்வமாவர் என்பதற்கு "நற்பெரும் தெய்வமாதல் நான் அறிந்து" என்று உரைக்கின்றான்.

"தொழப்படுந்தேவர் தொழப்படும்" தெய்வம் சிவபெருமான்; அப்பெருமானும் இப்புனிதவதியின் விருப்புணர்ந்து வேண்டுவன செய்கின்றான் எனின், இவரைப் பெருந்தெய்வம் என்பது பொருந்தும்; பெருந்தெய்வமாகிய இவர் தமது பெருமையைப் புலப்படுத்தாது மானுடமாக இருந்து மனை மடந்தையாய் நல்லறமே புரிந்து, என் வாழ்வைச் சிறப்பித்த பெருமையை எண்ணும்பொழுது நற்பெரும் தெய்வம் என்பதை நன்கு அறிந்தேன்; தெய்வத் தன்மையை உணர்ந்தபின் அவரோடு சேர்ந்து வாழ்தல் கூடாது என்று கருதியே நீங்கினேன் என்ற பொருள்பட, "மானுடம் இவர்தாம் அல்லர் நற் பெருந்தெய்வமாதல் நான் அறிந்து அகன்றேன்" என்று உரைக்கின்றான். நற்பெருந்தெய்வம் என்ற உணர்வு என் நெஞ்சில் நீங்காது நிற்றலால், இவரை விட்டு அகன்று வேறு மனை வாழ்க்கை மேற்கொண்ட பின்பும் நான் பெற்றமகவுக்கும் என் குலப்பெருந் தெய்வம் என்று கொண்ட கொள்கையால் இவரது பெயரையே இட்டுள்ளேன் என்பான், "அகன்ற பின்பு பெற்ற இம்மகவு தன்னைப் பேரிட்டேன்" என்று சொல்லி, இவர் எனக்கும் என் குடும்பத்துக்குமன்றி நம் சுற்றத்தார் அனைவர்க்கும் தெய்வமாவார்; ஆதலால் நீங்களும் போற்றுமின்; நானும் பணிகின்றேன் என்று தெரிவிக்கலுற்று, "ஆதலாலே பொற்பதம் பணிந்தேன் நீரும் போற்றுதல் செய்மின்" என்று கூறுகின்றான்.

இவ்வாறு பரமதத்தன் சொல்லக் கேட்ட சுற்றத்தார் புனிதவதியாரை நோக்கி, "இது என் கொல்" என வியந்து நின்றனர். அந்நிலையில், கொண்ட கணவனும் சுற்றிய சுற்றமும் தன்னை வேறுபட நோக்கவும், அவரது உள்ளம் சுற்றத் தொடர்பு நீங்கிச் சிவபரம் பொருளின் திருவடியைப் பற்றுகிறது. சிந்தை திருவருளில் ஒன்றவும், மெய்யுணர்வு மேம்படுகிறது. உலகியல் உணர்வு நீங்குவதற்குமுன் அவருடைய மெய்யுணர்வு சுற்றத்தாரிடம் தொடர்பு நீங்குதலும் பேதுறவு எய்துகிறது. உலகப்பற்று விட்டுப் பிறகு தெளிவாகிறது. ஒருபால் அந்தப்பற்றுக்கோடு விட்ட உள்ளம் சிவபெருமான் திருவருளைப் பற்றுகின்றது.

அவர்,

"ஈங்கு இவன்குறித்த கொள்கை
இது; இனி அவனுக்காகத்
தாங்கிய வனப்பு நின்ற
தசைப் பொதிகழித்து இங்கு உன்பால்
ஆங்குநின் தாள்கள் போற்றும்
பேய்வடிவு அடியேனுக்குப்
பாங்குற வேண்டும் என்று
பரமர்தாள் பரவி நின்றார்"

தெய்வமென கணவன் பேசுவதைக் கேட்டு உலகியல் தொடர்பு நீங்குகிறது. உள்ளத்தில் தோய்ந்து கிடக்கும் அருள்ஞானம் எழுந்து அவனுடை தாள்போற்றுதல் வேண்டும் என தூண்டுகிறது. அதற்கு இத்தசைப்பொதி தேவையில்லை. அதற்கு ஏற்றவுடம்பு எற்புடம்பு கேட்கிறார்.

தன் கணவன் பொருட்டுத் தாங்கியிருந்த உடம்பு வளவிய தசையும் மிக்க வனப்பும் உடையதாக இருப்பதைப் புனிதவதியாரே உணர்கின்றார். அவரது மெய்வனப்பு பிறவியிலே மேம்பட அமைந்திருந்ததை, "பொங்கிய பேரழகு மிகப் புனிதவதியார் பிறந்தார்" என்றும், "விடையவர்பால் அல்கிய அன்புடன் அழகின் கொழுந்து எழுவதென வளர்வார்" என்றும் சேக்கிழார் குறித்துள்ளார். குழவிப் பருவத்திற் "பொங்கிய பேரழகு", பிள்ளைப் பருவத்தில் "அழகின் கொழுந்து எழுவது என" வளர்ந்து, கணவனான பரமதத்தன் கருத்துமகிழ விளங்கியிருந்ததைத் தெளிய உணர்ந்தவராதலின், அவன் தெய்வமென மருண்டு மனம் மாறியதென அறிந்ததும், அழகு திகழும் அவ்வுடம்பின்பால் வெறுப்புறுகின்றார். அதனைப் போக்கக்கருதி, "ஈங்கு இவன் குறித்த கொள்கை இது; (அதாவது அவன் தெய்வம் எனக் குறித்தது); இவனுக்காக இதுகாறும் இவ்வனப்புப் பொருந்திய உடம்பைத் தாங்கியிருந்தேன்; அவன் விலகிவிட்டமையின் இது வெறும் தசைப் பொதியாயிற்று; பிறக்குங்கால் இதனைத் தந்தவன் நீயாதலால் நீயே கழித்து அருள வேண்டும் என்பார் "இனி இவனுக்காகத் தாங்கிய வனப்பு நின்ற தசைப் பொதிகழித்து" என்றார். வனப்புடைய தசைப் பொதியாக உடம்பு வேண்டா எனின், வேண்டிய வுடம்பு யாது என்று எழும் வினாவிற்கு விடை இறுப்பார் போல், "பேய்வடிவு அடியேனுக்குப் பாங்குற வேண்டும்" என்றும், அது நின் திருவடி போற்றுதற்கு ஏற்றது என்பார், "உன்பால் ஆங்கு நின்தாள்கள் போற்றும் பேய்வடிவு" என்றும் உரைக்கின்றார். வேண்டியது வேண்டி யாங்குப் பெறும் விழுமிய தவமுடையராதலால், உடனே, உடம்பு

சுருங்கி எலும்பும் தோலுமாய், ஊன் கரைந்து என்பெழுந்து இயங்கும் யாக்கை யராயினார்.

> "ஆன அப்பொழுது மன்றுள்
> ஆடுவார் அருளினாலே
> மேல்நெறி உணர்வு கூர
> வேண்டிற்றே பெறுவார் மெய்யில்
> ஊனுடைவனப்பை யெல்லாம்
> உதறி ஏற்புடம்பேயாக
> வானமும் மண்ணும் எல்லாம்
> வணங்கும் பேய் வடிவமானார்"

என்று சேக்கிழார் பாடுகின்றார்.

இங்ஙனம் ஊனுடையுடம்பு சுருங்கிற்றாக, அதன் உள்ளிருந்தொளிரும் திருவருள் உணர்வு பெருகி உலப்பிலா வளம் நிறைந்தமையின், "மேல்நெறி உணர்வு கூர" என்றும், அதனால் அவர் கொண்ட பேய் வடிவம் கண்டு வானுலகும் மண்ணுலகும் வணங்கின; "வானமும் மண்ணுமெல்லாம் வணங்கும் பேய்வடிவமானார்" என்றும் சேக்கிழார் கூறுகின்றார்.

தோல்மூடிய எலும்புக்கூடு போல் தோன்றும் வடிவத்தையே பேய் என்பது பழந்தமிழ் வழக்கு. மகப்பயந்ததனால் கண் குழிந்து உடல் மெலிந்து எலும்புக் கூடாய்த் தோன்றிய சங்ககாலப் பெண்ணொருத்தி, தன்னைப் பற்றிக் கூறும்போது, "பேய் அனையம் சேய் பயந்தனமே" என்று உரைப்பதை ஐங்குறுநூற்றில் காணலாம்.

இத்தகைய எலும்பு வடிவம் – பேய் வடிவம் – புனித வதியார்க்கு எய்தவும், கண்ட சுற்றத்தார் அஞ்சி அவரைக் கைகூப்பித் தொழுது நீங்கினர். அவருடைய

உள்ளத்தில் சிவஞானம் தோன்றி ஒளி செய்தது; அவர் தமது வடிவை நோக்கி,

"பெறினும் பிறிதுயாதும் வேண்டேம் நமக்கு ஈது
உறினும் உறாதொழியுமேனும் சிறிதுணர்த்தி
மற்றொருகண் நெற்றிமேல் வைத்தான்தன் பேயாய
நற்கணத்தில் ஒன்றாய நான்"

என்று பாடி மகிழ்ந்தார்.

பின்பு அவர்க்குப் போமிடம் யாது என்ற நினைவு தோன்றிற்று; சிறிது போதில், நேரே கயிலைமலையை அடைய வேண்டும் என்று ஒருணர்வு தோன்றிற்று; உடனே அக்கயிலை நோக்கிச் செல்வாராயினர். அச்செய்தியை,

"ஏய்ந்த பேருணர்வு பொங்க
எயில் ஒரு மூன்றும் முன்னாள்
காய்ந்தவர் இருந்த வெள்ளிக்
கயிலைமால் வரையை நண்ண
வாய்ந்த பேரருள் முன்கூர
வழிபடும் வழியால் வந்தார்"

என்று அவரது வரலாறு கூறுகிறது.

அவர் கயிலைமலை செல்லக் கருதியதற்குக் காரணம் "ஏய்ந்த பேருணர்வு பொங்க" என்றும், அவர்க்கு வழித்துணையாய் இறைவன் திருவருளே முன்னின்று உய்த்தது என்றற்கு, "வாய்ந்த பேரருள் முன்கூர" என்றும் சேக்கிழார் தெரிவிக்கின்றார்.

வழியில் அவரைக் கண்டவர்கள் வியப்பும் அச்சமும் கொண்டு வெருவி ஓடினார்கள்; அவர்கள் தமக்குள்ளும் பல பேசிக் கொண்டார்கள். அவர்கள் கூறியன காரைக்காற் பேயாரின் காதில் விழுந்தன. அவர்,

"திரைமருவு செஞ்சடையான் சேவடிக்கே ஆளாய்
உரைமருவி யாம்உணர்ந்தோம் கண்டீர் – தெரிமினோ
இம்மைக்கும் அம்மைக்கும் எல்லாம் அமைந்தோமே
எம்மைப் புறமுரைப்பது என்"

என்று உரைத்துச் சென்றார். சிவபரம் பொருளின் திருவடிக்கு யான் ஆளாய் அவனோடு உரையாடி அவன் செய்த அருள்களால் (மாங்கனி நல்கியும், எற்புடம்பு அளித்தும் அருளியதனால்) அவன் எமது ஆளாந் தன்மையை ஏற்றுக் கொண்டான் என்பதை உணர்ந்து கொண்டேன்; இதனை யாவரும் அறிந்து கொள்ளுங்கள் என்பாராய், "திரைமருவு செஞ்சடையான் சேவடிக்கே ஆளாய், உரைமருவியாம் உணர்ந்தோம் கண்டீர் - தெரிமினோ" என்று எடுத்துரைக்கின்றார். அன்றியும், இம்மையிலும் இனிவர இருக்கும் அம்மைப் பிறப்பிலும் இந்த அருள் நிலைக்கே நான் அமைந்து விட்டேன்; ஆதலால் நீவிர் என்னைப் புறங்கூறுவதில் பயனில்லை என்றற்காக, "இம்மைக்கும் அம்மைக்கும் எல்லாம் அமைந்தோமே, எம்மைப் புறன் உரைப்பது என்" என்று பாடி மொழிந்தார். அம்மைபாடிய இத்திருப்பாட்டின் கருத்தையே சேக்கிழார்,

"கண்டவர் வியப்புற்று அஞ்சிக்
கையகன்று ஓடுவார்கள்,
கொண்டதோர் வேடத்தன்மை
உள்ளவா கூறக் கேட்டு,
அண்டநாயகனார் என்னை அறிவரேல்
அறியா வாய்மை
எண்திசை மாக்களுக்கு யான்
எவ்வுருவாய் என் என்பார்"

என்று உரைக்கின்றார்.

இவ்வாறு சிவத்தின் திருவருள் வேண்டி மேனி வேறுபட்டும் பேய்க்கோலம் கொண்டும் திரிவது நம்மில் சிலர்க்கு மகிழ்ச்சி நல்காது; ஆனால் மணிவாசகர் முதலிய பெரியோர்கள் அதனை மிகவும் விரும்புகின்றார்கள். இறைவன் திருவடியே நினைந்து மனமுருகிப் பித்தேறித் திரிய வேண்டும்; கண்டோர் தம் தகுதிக்கு ஒத்த சொற்களைச்சொல்ல வேண்டும்; இவ்வாறு ஊர் ஊராய்ச் செல்லுங்கால் பார்ப்பவர் தம் மனத்தில் தோன்றுவன வற்றை உரைக்க வேண்டும்; அவற்றால் எல்லாம் என் மனம் உலகியல் உணர்வுகட்கு இரையாகாதவாறு உறைத்துவிட வேண்டும் என்று இறைவன்பால் முறையிட்டு,

"உத்தமன் அத்தன் உடையான்
அடியே நினைந்துருகி
மத்த மனத்தொடுமால் இவன்
என்ன மன நினைவில்
ஒத்தன ஒத்தன சொல்லிட
ஊரூர் திரிந்து எவரும்
தத்தம் மனத்தன பேச
எஞ்ஞான்று கொல் சாவதுவே"

என்று பாடுகின்றனர்.

இவ்வாறே சிவனருளில் ஒன்றிய கருத்தும் உறைத்த மனப்பண்புமுடையராய்ப் புனிதவதியார் சென்று கயிலைமலையை அடைகின்றார். அம்மலைமேல் கால்வைத்து ஏறற்கு அஞ்சித் தலையினால் தாவிச் செல்லலுற்றார்.

எலும்புருவாய் மலைமேல் ஏறிவருங்கால், அவரை அங்கே சிவனோடு இருக்கும் உமையம்மை கண்டு

அவரது மெய்யன்பை வியந்து இறைவனுக்கு உரைக்கலானாள்.

"அம்பிகை திருவுள்ளத்தின்
அதிசயித்து அருளித்தாழ்ந்து
தம்பெருமானை நோக்கித்
தலையினால் நடந்து இங்கு ஏறும்
எம்பெருமான் ஓர் எற்பின்
யாக்கை அன்பு என்னே என்ன
நம்பெருமாட்டிக்கு அங்கு
நாயகன் அருளிச் செய்வான்"

காரைக்காற் பேயார், கயிலைமலைப் பாறைகளின் மேல் தாவித்தாவி ஏறிவருவது அம்பிகைக்கு மிக்க பெரும் வியப்பைத் தந்தமையின் "அம்பிகை திருவுள்ளத்தின் அதிசயித் தருளி" என்றும், அதனால், உடனிருக்கும் சிவபெருமானுக்கு உரைக்க முற்பட்டு, பேய்வடிவென்று கூறாமல், அன்புருவாய் என்பு வடிவில் வருவது உரைப்பாராய், "தலையினால் நடந்து இங்கு ஏறும் எற்பின்யாக்கை" என்றும் அவரது அன்பைப் பாராட்டி "அன்பு என்னே" என்றும் இசைக்கின்றார்.

உடனே சிவபெருமான், அம்பிகை ஆண் என்றும் பெண்ணென்றும் காணாமல் அன்பையே நோக்கி எற்பின் யாக்கை அன்பு என்னே எனப் பொதுப்பட வுரைத்தமையின், தலையினால் நடந்து

"வரும் இவள் நம்மைப் பேணும்
அம்மை காண், உமையே, மற்று இப்
பெருமை சேர் வடிவம் வேண்டிப்
பெற்றனள்"

என்று சொல்லி, புனிதவதியாரின் பேய் வடிவத்தைச் சிறப்பித்துப் பெருமை சேர்வடிவம் என்று புகழ்ந்து அதனைத்தம் அருளால் எய்திற்று என அதன் வரலாற்றையும் சுருங்க வுரைக்கின்றார்.

அந்நிலையில் புனிதவதியார் சிவனது திருவோலக்கத்தை நெருங்குகிறார். உடனே, சிவபெருமான் "அம்மையே" என்று அன்புடன் அழைக்கின்றார். அவர் "அம்மையே" என்றதனால், புனிதவதியார் "அப்பா" என்று வாய்விட்டலறி அவருடைய திருவடியில் வீழ்ந்து பரவுகின்றார்.

பின்பு, சிவனார் அவரை நோக்கி, "அம்மையே, நீ நம்பால் இங்குவந்து பெற வேண்டுவது யாது? இருந்த விடத்தேயே வேண்டுவ யாவும் பெறலாமே" என்ற கருத்துப்படக் கேட்கின்றார்.

அங்கணன் அம்மையே என்று
அருள் செய "அப்பா" என்று
பங்கயச்செம் பொற் பாதம்
பணிந்து வீழ்ந்து எழுந்தார் தம்மைச்
சங்க வெண் குழையினாரும்,
தாம் எதிர்நோக்கி நம்பால்
இங்கு வேண்டுவது என் ? என்ன,
இறைஞ்சி நின்று இயம்புகின்றார்

இதன்கண், அங்கிருந்தே யாவும் பெறலாம்; இத்துணை வருத்தமுற்று இங்குவந்து பெறவேண்டுவது யாது என்ற பொருள்படச் சிவபெருமான் உரைத்தது கேட்கவும் அம்மையார் மறுபடியும் அப்பெருமானை வணங்கி, இறவாத இன்ப அன்பு வேண்டும் என வேண்டுகின்றார்.

"இறவாத இன்ப அன்பு
வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல், உன்னை என்றும்
மறவாமை வேண்டும், இன்னும்
வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா, நீ ஆடும் போது
உன் அடியின் கீழ் இருக்க"

என்றார்.

இருந்த அவ்விடத்தே நின்று கேட்பன இன்பமாய் சிறிது போதில் மறைந்து நீங்கினும் நீங்கும்; நீ மறுமுறை அளித்த அருட்கனி மறைந்த தன்றோ? அதனால் இங்கு வந்து உன்பால் இறவாத இன்ப அன்பு வேண்டுகின்றேன் என்பாராய்., "இறவாத இன்ப அன்பு" வேண்டினார். இறவாத இன்ப அன்பு செய்தற்கு ஏற்றது பிறவாப் பெருவாழ்வு என்பது பற்றிப் பிறவாமை வேண்டும் என்று பின்பு வேண்டினார். பிறப்பு இல்லாது நீங்க வேண்டின், அதற்கு ஏதுவாய் வினைத்தொடர்பு அற வேண்டும்; அத் தொடர்பு இன்னும் சிறிது உண்மையால் பிறப்புண்டு என்பாயாயின், அது தானும் பற்றறக்கெடுதற்கு உன்னை என்றும் மறவாத மனம் வேண்டுமாகையால், அதனை நல்குக என்பார், "மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும் மறவாமை வேண்டும்" என்றார். மனம் மறவாதிருத்தற்கு ஏற்ற இடம் திருவடிச் சூழலின்றி வேறில்லை; ஆதலால் நீ திருக்கூத்தாடுமிடத்தே உன் திருவடிக்கீழே இருந்து மகிழ்ச்சியுடன் பாடிக் கொண்டே இருக்க வேண்டும் என்பார். "நான் மகிழ்ந்து பாடி அறவா நீ ஆடும்போது உன் அடியின் கீழ் இருக்க" என்றார். இறைவன் புகழை அன்புடன் விரும்பிப்பாடி

மகிழ்வோர்க்கு வினைத் தொடர்பு கெடும் என்பது சான்றோர் கொள்கை; "இருள்சேர் இருவினையும் சேரா இறைவன், பொருள் சேர் புகழ் புரிந்தார் மாட்டு" என்று திருவள்ளுவரும் கூறுகின்றார். இதுபற்றியே அம்மையார், இவ்வாறு உன் அடியின் கீழ் மகிழ்ந்து பாடியிருக்க வேண்டும் என்று வேண்டுகின்றார். இதனையே அவர்,

"கண்டு எந்தை என்று இறைஞ்சிக்கைப் பணியான்
செய்யேனேல்
அண்டம் பெறினும் அது வேண்டேன் – துண்டஞ்சேர்,
விண்ணாளும் திங்களாய் மேலுலகம் ஏழினுக்கும்
கண்ணாளா ஈது என் கருத்து"

என்று கூறுகின்றார். இங்கே அவர் கைப்பணி என்றது இறைவன் திருப்புகழைப்பாடி அவன் திருவடியைப் பரவுவதேயாகும்.

இவ்வாறு திருவடிக் கீழிருந்து பாடும் பணியே வேண்டுவது என்று விண்ணப்பித்த அம்மைக்குச் சிவபெருமான், "திருவாலங்காட்டில் நமது ஆடல்கண்டு இன்புற்றுப்பாடுக" என்று அருளிச் செய்தார்.

கூடுமாறு அருள் கொடுத்துக்
குலவு தென்திசையில் என்றும்
நீடுவாழ் பழன மூதூர்
நிலவிய ஆலங் காட்டில்
ஆடும் மாநடம் நீ கண்டு
ஆனந்தம் சேர்ந்து எப்போதும்
பாடுவாய் நம்மை என்றான்
பரவுவார் பற்றாய் நின்றான்

அம்மையாரும் அவ்வண்ணமே திருஆலங்காட்டைத் தலையால் நடந்து சென்று சேர்ந்தார். அங்கே அவர்

பாடிய திருப்பதிகங்கள் சைவத் திருமுறைகளில் பதினோராம் திருமுறையில் மூத்ததிருப்பதிகம் என்ற பெயரால் தொகுக்கப்பட்டுள்ளன.

பேய்வடிவு கொண்டமையின் அவரைப் பேயார் என்பது ஒருபுறம் இருக்க, இறைவன் அம்மையே என அழைத்தமையின், காரைக்கால் அம்மையார் என்றே சேக்கிழார் முதலிய பெரியவர்கள் பெயர் குறித்துப் போற்றுகின்றனர். பல்லுயிரும் பல்லுலகும் படைத்தளிக்கும் பான்மையினனாகிய பரமன் தாய்மைநலம் சிறக்க அம்மையே என்று தூமறை பாடும் தமது வாயால் அழைத்த சிறப்புப் பற்றிக் காரைக்கால் அம்மையார் என்றே சேக்கிழார் முதலிய பெரியவர்கள் பெயர் குறித்துப் போற்றுகின்றனர்.

இவ்வண்ணம் ஒரு வணிகர் குடியில் பிறந்து பொருந்திய கல்வியும் செல்வமும் பெற்ற காரைக்காற் புனிதவதியார், இளமையிலே இறைவன்பால் அன்பு பெருகி நிலவிய சூழ்நிலையில் வளர்ந்து சிவப்பற்று மிகுந்திருந்தாராயினும், மனையறத்தில் வழுவாது ஒழுகியது நாம் குறிக்கொண்டு நோக்கத் தகுவது, மனைவாழ்வுக்குரிய அறிவும் அதனைப் புகழ் உண்டாகச் செய்த மாண்பும் காரைக்கால் அம்மையைத் தெய்வநிலைக்கு உயர்த்தியிருக்கும் திறத்தை உற்று நோக்க வேண்டும். அதுபற்றியே சேக்கிழார், "பாங்கில்வரும் மனையறத்தின் பண்புவழாமையில் பயில்வார்" என்று குறிக்கின்றார்.

விருந்தோம்பலும் வேண்டுவார்க்கு அவர் தகுதியறிந்து வேண்டுவன உதவுவதும் மனையறத்தின் மாண்புடைய கூறுகள். அவற்றை மனைக்குரிய மடந்தை

பரிவோடு செய்தல் வேண்டும் என்பது புலப்படவே, ''தம்பரிவினால் அவர்க்குத் தகுதியின் வேண்டுவ கொடுத்து'' என்று உரைக்கின்றார். இங்கே தகுதி என்றது, கொடுப்பவர், பெறுபவர் என்ற இருவர் தகுதியையும் அடக்கிக் கொண்டு நிற்கிறது.

புனிதவதியாரின் மனைவாழ்வில் விருந்தாக வந்த சிவத்தொண்டர்க்கு, கணவன் "வைக்க" என விடுத்த மாங்கனிகளில் ஒன்றைப் புனிதவதியார் படைக்கின்றார். சிவத்தொண்டரின் முதுமையும் தளர்வும் பசிமிகுதியும் விரைந்து உண்பிப்பதற் கேற்ற தகுதியை உண்டாக்கு கின்றன; சமைக்கப்பட்டிருக்கும் உணவு உடனே உண்பிப்பதற்கேற்ற நிலையில் இல்லை. ஆனால் மாங்கனி உணவு நிலையில் அமைந்த குறைபாட்டை நிறைவு செய்கிறது.

மூப்புறும் அத் தளர்வாலும்
முதிர்ந்து முருகிய வேட்கைத்
தீப்பசியின் நிலையாலும்
அயர்ந்து அணைந்த திருத்தொண்டர்
வாய்ப்புறும் மென் சுவை அடிசில்
மாங்கனியோடு இனிதருந்திப்
பூப்பயில்மென் குழல் மடவார்
செயல் உவந்து போயினார்

என்பதால் அது நன்கு விளங்குகிறது. இதனால் மனையறத்திற்கு மாண்பு தரும் விருந்தோம்பல் என்ற நல்லறம், சிறந்த முறையில் நடைபெற்றது காணலாம்.

உண்ணும்போது, ஒரு கனியின் சுவைமிகுதி கண்டதால், பரமதத்தன் மற்றக் கனியையும் "கொணர்ந்து இடுக'' என்று கேட்கின்றான்; அவரது மனையறம்

நல்லறமாய்த் திகழ்ந்தமையின், புனிதவதியார்க்கு உண்டான இடுக்கணை, அறக்கடவுள், சிவத் தொண்டர்க்கு அளித்த கனியாக அளித்து நீக்குகிறது. இத்தகைய இடர்ப்பாடுகள் மனைவாழ்வில் தோன்றுவது இயல்பு; மனைமாட்சி இல்லாள்கண் உண்டாயின், அவையாவும் திருவருளால் உடனடியாக நீங்கும்.

மனையறத்தில் வழுவாமையும், திருவருளில் ஊன்றிய பற்றுடைமையும் மனையியல் மகளிர்க்குச் சிறப்புத் தருவன என்பதைப் புனிதவதியார் வரலாறு தெளிவாகக் காட்டுவதாகும்.

திருவருளின் மெய்ம்மைகாட்டற்கு வந்த மூன்றாவது மாங்கனியால் பரமதத்தன் மனமருண்டு புனிதவதியாரைக் கையகன்று நீங்கினான். மனையறம் தொடர்ந்து தன் பண்பு வழாமல் பயிலுதல் வேண்டியே புனிதவதியார் சுற்றத்தாருடன் கணவன் இருக்குமிடம் சென்றார். அங்கே அவன் கருத்து வேறாதல் கண்டதும், மனைமாண்பு நோக்கி நின்ற புனிதவதியாரின் உள்ளம் சிவபரம்பொருளின் திருவருள்வழிச் சென்றது; திருவாலங்காட்டில் சிவன் ஆடும் திருவடிக்கீழ் என்றும் இருக்கும் ஏற்றம் பெற்றது. எனவே மனையறத்தில் மாண்பும் பண்பும் வழுவாது ஒழுகும் மகளிர் வாழ்வாங்கு வாழும் மகளிர் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் பெருமை பெறுவர் என்ற திருவள்ளுவரின் செம்மைமொழி மெய்ம்மொழியாவது இவ்வரலாற்றால் தெளிவாகிறது.

5. திலகவதியார்

திலகவதியார் திருநாவுக்கரசர்க்கு முன் பிறந்த தமக்கை மாத்திரமன்று; ஒரு பெருந்தவச் செல்வி.

"செங்கமல நிரை இதழின்அகவயினில் திகழவரும் திருவனைய திலகவதியார்" என்றும், "செம்மலர்மேல் திருவனைய திலகவதியார்'' என்றும் சேக்கிழார் பாராட்டும் திருமிக்கவராயினும், "தம்பியார் உளராக வேண்டுமென வைத்த தயா'' வினால், தவம் மேற்கொண்டவர். அதனால் அவரை ''மன்னுத போதனியார்" என்றும் சிறப்பிப்பார்.

"தவம் செய்வார் தம் கருமம் செய்வார்" என்பது போல அவரது தவம், தொடக்கத்தில் "தம் கருமமே" நோக்கியிருந்தது.

"தொன்னெறியும் சுற்றத்தொடர்பும்
ஒழியத் தூயசிவ
நன்னெறியே சேர்வதற்கு
நாதன் அருள்"

நாடியிருந்தது.

தம்பியான திருநாவுக்கரசர் வேற்றுச் சமயம் புகுந்து வேற்றூர் சென்று சேர்ந்ததும், அவரது தவம், தம்பியார் மீட்டும் சைவராய்ச் சிவத்தொண்டு புரியவேண்டும் என்ற குறிக்கோளை மேற்கொண்டது.

சிவம் ஒன்றும் நெறி நின்ற திலகவதியார் தமது தம்பியும் அச்செந்நெறியில் நிற்கவேண்டுமென்பது அவரது திருவுள்ளக் குறிப்பாயிற்று.

அவர் செய்த தவம் யாது?

திருவதிகையில், அதிகைப்பெருமான் திருக் கோயிலில், திருவலகு பணிமாறல், திருமெழுக்கிடுதல், மலர் கொய்து மாலை தொடுத்தமைத்தல் முதலியன வாகும்.

இத்தகைய தவப்பணியால் சிவம் பழுத்த திலகவதியார், நாடோறும் இறைவன் திருமுன்பு பணிந்து தொழுது பரவுங்கால், தமது உள்ளக்கருத்தை எடுத்துரைப்பார். அதனைச் சேக்கிழார்,

"தூண்டுதவ விளக்கனையார்
சுடரொளியைத் தொழுது, "என்னை
ஆண்டருளும் நீராகில்
அடியேன் பின் வந்தவனை
ஈண்டுவினைப் பரசமயக்
குழிநின்றும் எடுத்தாள
வேண்டும் எனப் பலமுறையும்
விண்ணப்பம் செய்தனரால்"

என்று உரைக்கின்றார்.

இப்பாட்டில், திலகவதியாரைத் "தூண்டுதவ விளக்கு அனையார்" என்பது நாம் நோக்கத்தக்கது. மகளிரைப் பொதுவாக விளக்கு என்று கூறுவது மரபு.

"மனைக்கு விளக்கம் மடவார்". "மனைக்கு விளக்காகிய வாணுதல்" என்றெல்லாம் சான்றோர் கூறுவர். இங்கே திலகவதியார் மனைவாழ்வின் நீங்கித் தவவாழ்வு மேற்கொண்டமையால், அவரைத் தவ விளக்கு என்று குறிப்பது பொருத்தம்.

இனி, விளக்குகளைச் சிறப்பிக்குங்கால், தூண்டா விளக்கு, நந்தா விளக்கு என்பது தான் வழக்கம். ஒளி குன்றுவதும் தூண்டிய வழி ஒளிவிட்டுச் சுடர்வதும் விளக்குக்குச் சிறப்பன்று. ஒளி குறைவதும் மிகுவதுமின்றி ஒருதன்மைத்தாய் ஒளிர்வது விளக்குக்கு அழகு என்பது பற்றியே பெரியோர், தூண்டாவிளக்கு, திரு நந்தா விளக்கு என்றனர். ஆனால், தவ விளக்காகிய திலகவதியாரைச் சேக்கிழார் "தூண்டுதவ விளக்கு" என்கிறார். ஏன்?

இத்தவ விளக்குத் தன்னைத் தூண்டிச் சுடர்விட்டுத் திகழச் செய்யவேண்டிய குறைபாடு உடையதன்று; பிறர்பால் திகழவேண்டிய அறிவொளி குன்றியவிடத்து, அதனைத் தூண்டும் பெருமையுடையது என்றற்குத் தூண்டுதவ விளக்கு என்று கூறுகின்றார்.

இனி, எரியும் விளக்குத்தானே தூண்டப்படும்; இங்கே தூண்டப்பட வேண்டிய விளக்கு எது? எனின், அவரது தம்பியார். அவர் இயல்பிலேயே நல்ல அறிவொளி பெற்றவர்; அவருடைய பிறப்புக் கூறவந்தபோதே, "உலகில் வரும் இருள் நீக்கி ஒளிவிளங்கு கதிரேபோல், மலரும் மருள் நீக்கியார் வந்து அவதாரம் செய்தார்" என்று சேக்கிழார் கூறுகின்றார். (மருள் நீக்கி என்பது நாவரசர்க்குப் பெற்றோர் இட்ட பிள்ளைப்பெயர்) அவரது அறிவுவிளக்கு வினை நிறைந்த பர சமயச் சூழலால் ஒளி குன்றிவிட்டது; அதனை நன்கு தூண்டிச் சிவவொளி

மிகுவிக்க வேண்டும் எனத் திருவருளை வேண்டுதலால் அவரைத் தூண்டுதவ விளக்கு என்கிறார்.

மேலும், நாவுக்கரசர் உடனிருப்பாராயின் திலகவதியாரே தமது தவஞானத்தால் சிவநெறியின் செம்மைகாட்டி அவர் அறிவைத் தூண்டியிருப்பர்; அவர் செல்லத்தகாத பர சமயச் சூழலில் இருப்பதால், ஆங்குச்சென்று தூண்டுதற்குரியது சிவமாதல் பற்றி அதிகைப் பெருமானை, வேண்டுகிறார். அதிகைப் பெருமான் என்றோ, சிவனென்றோ கூறாமல் "சுடர் ஒளியைத் தொழுதார்" என்று சேக்கிழார் கூறுகிறார். இப்பொழுதைக்கு வேண்டுவது, நாவுக்கரசரைச் சூழ்ந்திருக்கும் ''ஈண்டு வினை'' யாகிய இருளைப் போக்குதற்கு ஏற்ற தூயவொளியாதலால், "சுடர் ஒளி" என்று குறிக்கின்றார்.

அதிகை இறைவன்பால் அவர் செய்துகொள்ளும் வேண்டுகோளைப் பாருங்கள்.

முன்வந்த என்னை ஆண்டருளுகின்றீர்; அதுபோல் என்பின் வந்த தம்பியையும் ஆண்டருளல் வேண்டும் என வேண்டலுற்று, "என்னை ஆண்டருளும் நீராகில் அடியேன் பின்வந்தவனை ஆளவேண்டும்" என்று எடுத்துரைக்கின்றார். இதனால், முன்வந்த அடியேனை ஆண்டருளிய நீர் என் பின்வந்தவனையும் ஆண்டருளுதல் முறை என்று குறிக்கின்றார். ''சிவமொன்றும் செந்நெறிக்கண் நீ நிற்பதுபோல் அவன் இல்லையே" என எழும் தடைக்கு விடை கூறுகிறார். பின்வந்தவன், முன் வருவார் நெறி நோக்காது வேற்றுநெறி நோக்கிச் சென்று உண்மையறியாமல் குழி வீழ்ந்துவிட்டான்; அவனை எடுத்தாள வேண்டும் என்று உரைப்பாராய், "அடியேன்

பின் வந்தவனைப் பர சமயக் குழி நின்றும் எடுத்தாள வேண்டும்'' என்று வேண்டுகிறார்.

புறச்சமயமும் சிவநெறிக்குப் படிமுறையே, சோபானமே, என்பர்; ''விரிவிலா அறிவினார்கள் வேறொரு சமயம் செய்தே, எரிவினால் சொன்னாரேனும் எம்பிராற்கு ஏற்றதாகும்'' என்பது பழங்கொள்கையே என்பர்; எனினும், வினைநீக்கம் வீடு பேறாதலால், வினைநீக்கத்துக்குத் துணைபுரியாது அதனை மிகுவிக்கும் பர சமயம் படி முறையாகாது கீழ்ப்படுத்தும் குழியாக இருக்கிறது என்பதற்கு "ஈண்டுவினைப் பர சமயக்குழி'' என்று சொல்லுகின்றார்.

குழிவீழ்ந்தாரை எடுத்தாற் போதாது. ஆளவேண்டும் என்பது ஏன் எனின். எடுத்துவிடின், மேலும் நன்னெறி கடைப்பிடிக்கும் தெளிவும் திறமுமின்றி மறுபடியும் வீழ்ந்து கெடுவன்; ஆதலால், எடுத்துக் கரையில் விடுவதோடு அருள் ஒளியும் நெறியும் காட்டிச் சைவனாய் உய்தல் வேண்டும் என்ற கருத்துப்பட "பர சமயக்குழி நின்றும் எடுத்து ஆள வேண்டும்'' என்று பொருள் பொதிந்த சொற்களால் இறைவனை வேண்டுகிறார்.

"ஈண்டுவினைப் பரசமயம்'' என்று பரசமயத்தைக் குறித்து, "ஈண்டுவினை'' அதாவது மேன்மேலும் பெருகுகிற வினையென்று தொகுத்துச் சொன்னவர், அடுத்தபடியாக அவ்வினைகளை,

"தவம் என்றுபாய் இடுக்கித்
தலைபறித்து நின்று உண்ணும்
அவம் ஒன்றும் நெறிவீழ்வான்
வீழாமே அருளும்''

என்று வகுத்துரைத்து, முன்னே வேண்டியவாறே வீழாமே அருளும் என்று வேண்டுகிறார்.

இவ்வாறு தம்பிக்காக மிகவும் பரிந்து வேண்டும் தவச் செல்வியான திலகவதியார், நாவுக்கரசர் சூலை நோயால் துயர்மிக்குத் தம்மை அடைந்தபோது, அதிகைப்பெருமானது தண்ணிய திருவருளை நினைந்து வியந்து மனத்தே தொழுகின்றார். அவர் உளம் கண்ட சேக்கிழார், "தம்பியார் தமை நோக்கி, ஆளுடைய தம் பெருமான் அருளை நினைந்து கைதொழு" தார் என்று இயம்புகிறார்.

தம்பியைக் கண்டவர், அன்பை அகத்தே மறைத்து, புறத்தே அயலவரோடு பேசுவதுபோன்ற வாய் பாட்டில்,

"கோளில் பரசமயநெறிக் குழியில்
விழுந்து அறியாது
மூளும் அருந்துயர் உழந்தீர்
எழுந்திரீர்" எனமொழிந்தார்."

இங்கே, "அருந்துயர் உழந்தாய், எழுந்திராய்" என்னாமல், "உழந்தீர், எழுந்திரீர்" என உயர்சொற் கிளவியால் உரைத்தது நாவரசரை மிகவும் வருத்தி விட்டது; நோயால் நலிவுற்ற உடல் மேலும் நலிந்து நடுங்குகிறது.

நாவரசரின் கண்ணெதிரே திலகவதியென்ற தமக்கை தோன்றவில்லை; தவத்தால் மிகவுயர்ந்த தக்கார் உருவம் காட்சிதருகிறது. அதனை மிக நுணுக்கமாகச் சேக்கிழார் பெருமான் நமக்குக் காட்டுகிறார்.

"மற்றவுரை கேட்டலுமே
மருணீக்கியார் தாமும்
உற்றபிணி உடல்நடுங்கி
எழுந்துதொழ உயர்தவத்தோர்"

என்று குறிக்கின்றார். மற்றஉரை எழுந்திரீர் என்ற உரை, மருணீக்கியார் எழுந்துநின்று கைதொழுது நோக்கவும், எதிரே அருளொழுகும் கண்களோடு நிற்கும் திலகவதியாரை, "உயர் தவத்தோர்" என்று குறிப்பது, நாவுக்கரசரின்கண் முன்னே தரும் தவக்காட்சியைக் காட்டுகிறதல்லவா?

பின்பு, நோயாளனுக்கு மருந்து ஆய்ந்து கொடுக்கும் அறவோர்போல, "உமது நோய் அறிந்தேன்; நோய் முதல் அறிந்தேன்; அது தீர்க்கும் வாயில் அறிந்தேன்; நோயும் நோய் முதலும் இறைவன் திருவருள்; அது தீர்க்கும் வாயில் அவரைப் பணிந்து பணிசெய்தல்" என்று சொல்லுகிறார்.

"கற்றை வேணியர் அருளே
காணும்இது; கழல் அடைந்தோர்
பற்றறுப்பார் தமைப்பணிந்து
பணி செய்வீர் எனப் பணித்தார்"

என்று சேக்கிழார் கூறுகின்றார். "கற்றை வேணியர் அருளே காணும் இது" இது நோயும் நோய் முதலும் கூறுவது; பணிந்து பணிசெய்வீர் என்பது, நோய் தீர்க்கும் வாயில்.

மேலும், திருக்கோயில் புகுதற்கும் பணிமேற் கொள்ளுதற்கும் உரிமையுண்டாதல் வேண்டி, திருவைந்தெழுத்தை ஓதி *(உபதேசித்து)* திருநீறு அளிக்கின்றார்.

"திருவாளன் திருநீற்றைத்
திலகவதியார் அளிப்பப்
பெருவாழ்வு வந்தது எனப்
பெருந்தகையார் பணிந்து ஏற்றுத்"

திருக்கோயிலுக்குள் அவர் முன்பு செல்ல, நாவுக்கரசர் பின்னே சென்று அதிகைப்பெருமானது அருள் பெற்றார். "அடியேன் பின்வந்தவனை எடுத்தாள வேண்டும்" என்றது போல, அதிகைப் பரமன் திருக்கோயிலுள், திலகவதியார் முன் சென்றார். நாவரசர் "தம் முன்புவந்தார்பின் தாம் வந்தார்" என்று சேக்கிழார் தெரிவிக்கின்றார்.

இவ்வாறு சைவ மங்கையர் தனிப்பெருமகளான திலகவதியார் தமது உடன்பிறந்தார்க்குத் தாமே அருளாசிரியராய் அறிவுரையருளிச் சைவராக்கியது காண்கின்றோம்.

6. மகளிர் அறிவுத்திறன்

கண்ணகியும் கோவலனும் ஆய்மகள் மாதரியின் வீட்டில் தங்குகிறார்கள். அங்கே கண்ணகி சமைத்தளித்த உணவு உண்டு மகிழ்ந்த கோவலன் கண்ணகி நெடுந்தூரம் நடந்து வந்ததனால் உண்டான மேனி வாட்டம் கண்டு கல்லதர் அத்தம்கடக்க யாவதும் வல்லுந கொல்லோ மடந்தை நின் மெல்லடி" என வருந்துபவன், "இரு முது குரவர் ஏவலும் பிழைத்தேன் சிறு முதுக் குறைவிக்குச் சிறுமையும் செய்தேன் வழுவெனும் பாரேன் மாநகர் மருங்கீண்டு எழுகென எழுந்தாய் என் செய்தனை" என்று சொன்னான். மாநகர் மதுரை நகர்க்கு எழுக என்று நான் சொன்னதும் எழுந்தாய்; வழி நடை வருத்தத்தைச் சிறிதும் எண்ணாது நான் எழுக என்றதே கொண்டு எழுந்தாய் என்றான். அவன் கூற்றை ஆராய்ந்த அடியார்க்கு நல்லார், "அது முறைமையன்றென மறாது என்னோடு ஒருப்பட்டெழுந்தாயே; நீ என்ன கருமம் செய்தாய் எனக் கோவலன் இரங்கிக் கூறினான்" என்றும், "இவ்வரவிற்கு நீயும் உடன்பட்டாய் எனத் தனது அறிவின்மையை அவளொடு படுத்துக் கூறினான்" என்றும் கூறுகின்றார். எழுக என எழுந்தாய் என்றதோடு நில்லாமல்" "என்

செய்தனை” எனக் கோவலன் சொன்னதால் கண்ணகி மறுமாற்றம் கூற வேண்டியவளானாள். மனையற மகளிர்க்கு அறவோர்க்களித்தல் அந்தணரோம்பல் துறவோர்க் கெதிர்தல், விருந்து புறந்தருதல் என்ற நான்கையும் செய்வது சிறப்பு; மனைக்குரிய கணவன் இல்லாத போது அவற்றைச் செய்தலாகாது. நான் அச்சிறப்பை இழந்தேன் என்பாளாய் “அறவோர்க் களித்தலும் அந்தணரோம்பலும், துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை, என்றாள். அதற்கு நீர் என் கண்முன் நில்லாது பிரிந்து போனது காரணம்; அதை மாமியும் மாமனுமாகிய நும் தாய் தந்தையர் அறிந்து அதனால் நான் தளராதபடி உள்ளத்தே அன்பு மிகுந்து அருள் நிறைந்த மொழிகளால் பாராட்டி என்னை மகிழ்வித்தனர் என்பாள், “பெருமகள் தன்னொடு பெரும் பெயர்த்தலைத்தாள், மன்பெருஞ் சிறப்பின் மாநிதிக் கிழவன், முந்தை நில்லா முனிவு இகந்தனனா, அற்பு உளம் சிறக்க அருள்மொழி அளைஇ எற்பாராட்ட” என்றாள். இதன்கண் தன் கணவன் தாயான மாமியைக் கண்ணகி, ‘பெருமகள்’ என்கிறாள். கொண்ட கணவனைத் சொல்லாலும் செயலாலும் ஈர்த்துப் பிணிக்கும் திறம் இல்லையெனக் குறை காண்பதும், எத்துணைத் தவறு செய்யினும் மகன்பால் குறைகாணாத ஒருதலையன்பும் தன் மாமியிடம் இல்லை என்றும், ஒருபாற் கோடாமையே பெரும் பண்பாகக் கொண்டவள் என்றும் கூறற்குப் பெருமகள் என்றாள். மாமனாரைப் பெரும் பொருளும் தலையான தாளாண்மையும் கொண்டு மன்னர் செய்யும் பெருஞ்சிறப்பு எய்திய மாநிதிக் கிழவன் என்றாள். மகன் செய்த குற்றத்தைக் கண்டறிந்து கடியும் உரிமை

மிகவுடையனாதலால், முந்தை நில்லாமைக்கு வருந்தி வெறுத்துப் பேசினன் என்பாள், "முந்தை நில்லா முனிவு இகந்தனனா" என்றாள். மாமனை முன் கூறி மாமியைப் பின் கூற வேண்டிய கண்ணகி மாறிக் கூறியதேன் எனின், கண்ணகியை நெருங்கிப் பழகி அவளுடைய மேனி வாட்டமும் மனத்தளர்ச்சியும் அறிந்து அதற்குரிய காரணத்தையும் தெளிந்து கொள்வதில் அவள் முற்படுவதால் 'பெருமகள் தன்னொடும்' என முன் கூறினாள். மாநிதிக் கிழவனாதலின், அவன் கண்ணகியின் நிலைமையைத் தன் மனைவி சொல்ல அறிந்தனனாகலின், அவனைப் பின் கூறினாள். முந்தை நில்லா முனிவு என்பதற்கு அரும்பத வுரைகாரர், கோவலன் கரந்தொழுகினவாறு என்பர்; அடியார்க்கு நல்லார், "கோவலன் கண்ணகி முன்பு நில்லாமையால் வந்த வெறுப்பு" என்பர். கண்ணகி முன்பும் பெற்றோராகிய தம் முன்பும் நில்லாது கோவலன் கரந்தொழுகியதால் வந்த வெறுப்பு என்பது பொருத்தம் ஆகலாம். 'அவ்வெறுப்பை நானும் பிறர் தெரியாதவாறு மறைத்தேன்; மாமனும் அதனை நான் அறியாதவாறு மறைத்தான்' என்று பொருள் படுமாறு இகந்தனனா என்று கூறுகிறாள். நான் மறைப்பது எனக்குக் கடமையும் பொறையுமாகும். அவர்கள் நான் அறியாதவாறு மறைத்தது, எனக்கு வருத்தமுண்டாகுமென்ற அச்சம். அதனால் உள்ளத்தே என்பால் அன்பு மிகுந்து என்னொடு பேசுங்கால் அருள் நிறைந்தொழுக என்னைப் பாராட்டி மகிழ்வித்தார்கள் என்பாள், "அன்புளம் சிறந்து அருள்மொழி அளைஇ எற்பாராட்ட" என்றாள்.

அவர்களது பாராட்டுரையைக் கேட்டதும், என் மனநோயும் துன்பமும் அவர்கள் அறிய வெளிப்படுகின்றன போலும் என்று அஞ்சி அவர்கள் மனமகிழ நகைமுகம் கொண்டு ஒழுகினேன்; என் பொய்ம் முறுவலை நுணுகி நோக்கி அவர்கள் மனவேதனை மிகுந்தனர்; அவர்கட்கு மனநோய் வாராமல் போற்றும் ஒழுக்கமே மக்கள் கடன்; ஆனால் அவர் "உள்ளகம் வருந்தப் போற்றா ஒழுக்கம் புரிந்தீர்" என்றாள். போற்றல், பேணிக் காத்தல், "போற்றின் அரியவை போற்றல்" (குறள் 693) என்பது போல. அறவோர்க் களித்தல் முதலியன இழந்தாலும் கொண்டானைப் பேணல் என்ற கற்பறத்தைப் போற்றிப் பேணும் உள்ளமுடையேன் ஆதலால் "யாவதும் மாற்றாவுள்ள வாழ்க்கையேன்" என்றும், அதனால் ஒன்றும் சிந்தியாமல் உங்கள் உரையை விரைந்து ஏற்று உடன் வரத்துணிந்து எழுந்தேன் என்பாள், "யாவதும் மாற்றாவுள்ள வாழ்க்கையேனாதலின், ஏற்றெழுந்தனன் யான்" என்றும் கூறினாள்.

மகளிரின் மாற்றாத உள்ள வாழ்க்கையை மேற்கொண்டமை தான் கண்ணகிக்குக் கற்புக் கடம் பூண்ட தெய்வம் என்ற சிறப்பை நல்கிற்று.

மணிமேகலை மேல் காதல் கொண்டு திரிந்த உதயகுமரன் கொலையுண்டு இறந்தான். அதற்காக அவள்மேல் வெறுப்படைந்த உதயகுமரன் தாய் அவளிடத்தே போலியன்பு காட்டி அவளைக் கெடுக்க நினைத்துத் தோல்வியுற்றாள். அதனை மனம் கொள்ளாமல் மணிமேகலை அவளுக்கு உரைப்பதைப் பாருங்கள்.

'மயக்க மருந்து தந்து என்னைப் பைத்தியமாக்க
முயன்றாய்;
கல்லாக் கயவன் ஒருவனை என்பால் வரவிட்டாய்;
பொய் நோய் உரைத்து என்னைப் புழுக்கறையில்
இட்டாய்'

என்று உதயகுமரன் தாயாகிய அரசமாதேவி செய்ததை நிரல்பட உரைத்து, இவற்றை எல்லாம்,

"சிந்தையில் கொண்டிலேன் சென்ற பிறவியில்
காதலற் பயந்தோய்; கடுந்துயர் களைந்து
தீதறு வெவ்வினை தீர்ப்பது பொருட்டால்"

என்று மணிமேகலை உரைக்கின்றாள்.

மணிமேகலை முன் பிறப்பில் இலக்குமி என்ற பெயருடன் இராகுலன் என்பவனை மணந்து வாழ்ந்தாள். அந்த இராகுலன் தாய் நீலபதி. இப்போது அந்த நீலபதி அரசமாதேவியாகவும், இராகுலன் உதயகுமரனாகவும் பிறந்துள்ளார்கள். அதை நினைந்து, சென்ற பிறவியில் என் கணவன் இராகுலனுக்குத் தாயாய் இருந்தவளாதலால் நீ செய்த வஞ்சனையை மனம் கொண்டிலேன் என்பாளாய், "சிந்தையில் கொண்டிலேன் சென்ற பிறவியில் காதலற் பயந்தோய்" என்று சொல்லுகிறாள். அவ்வாறு சிந்தையில் கொள்ளாமைக்கும் காரணம் உண்டு. உன்னை இப்படியே விட்டால் பல பிறவிகள் எடுத்து வருந்துவாய், அதற்குக் காரணமான உன்வினையை ஒழிக்க வேண்டி மனத்தில் அவைகளை வைக்கவில்லை என்று சொல்லுவாள், "காதலற் பயந்தோய் கடுந்துயர்களைந்து தீதறு வெவ்வினை தீர்ப்பது பொருட்டால்" சிந்தையிற் கொண்டிலேன் என்றாள். அது கேட்டுஅவள் தான் செய்ததற்கு மனம் வருந்தினாள். உடனே மணிமேகலை,

"மல்லல் மாஞாலத்து வாழ்வோர் என்போர்
அல்லல் மாக்கட்கு இல்லது நிரப்புநர்
வருந்தி வந்தோர் அரும்பசி களைந்தோர்
துன்பம் அறுக்கும் துணிபொருள் உணர்ந்தோர்
மன்பதைக் கெல்லாம் அன்பொழியார்"

அதனைச் செய்க என்றாள். அரசமாதேவி அறிவு தெளிந்து மணிமேகலையின் அடியில் வீழ்ந்து வணங்கினாள். மணிமேகலைக்கு அவள் முன் பிறப்பிலேயே மாமியார் என்ற நினைவு மாறாதிருந்தன்மையால் அதனை ஏலாமல், "தகுதி செய்திலை, காதலற் பயந்தோய் அன்றியும் காவலன் மாபெருந்தேவி" என்று சொல்லி, அவள் காலில் தான் வீழ்ந்து வணங்கி விடைபெற்று நீங்கினாள். முன்பிறப்பில் மாமியார் என்பதற்கு அன்பும், இப் பிறப்பில் அரசமாதேவி என்ற சிறப்புக்கு மதிப்பும் நல்கிய மணிமேகலையின் மாண்பு நாமெல்லாம் போற்றற் குரியதாகும்.

இனி, இடைக்காலச் சோழர்கால இலக்கியங் களில் கம்பரது இராமாயணம் தலை சிறந்து நிற்கிறது.

இராமாயணத்தில் இராமனை அழைத்து, "ஆழிசூழ் உலகமெல்லாம் பரதனே ஆள நீ போய்த் தாழிருஞ் சடைகள் தாங்கிப் பூழி வெங்கானம் நண்ணிப் புண்ணியத்துறைகளாடி ஏழிரண்டாண்டின் வா என்று ஏவினான் அரசன்" என்றாள் அது கேட்ட இராமன், அன்னையே, இது மன்னவன் கட்டளையன்றாயினும் உமது கட்டளையைச் செய்ய மாட்டேன் என்பேனா என்ற கருத்துப்பட,

"மன்னவன் பணியன்றாயின்
நும்பணி மறுப்பனோ என்

பின்னவன் பெற்ற செல்வம்
அடியனேன் பெற்றதன்றோ"

என்று சொல்லி, இராமன் கைகேயியிடம் விடை பெறுகின்றான்.

பின்பு அவன் தன்னைப் பெற்ற தாயாகிய கோசலையிடம் வந்து நடந்தது சொல்லுகிறான். அப்போது அவன் கைகேயி சொன்னதும் தான் "மன்னவன் பணியன்றாயின் நும்பணி மறுப்பனோ" என்றதும் அவளுக்கு உரைக்கின்றான். அதனைக் கேட்டதும் கோசலை மனம் வருந்துகிறது. "மன்னவன் பணியன்றாயின் நும்பணி மறுப்பனோ" என்றது, "இது மன்னவன் பணியன்று; நீங்களே இடுகின்ற பணி; அப்படி உங்கள் கட்டளையே என்றாலும் நான் மறுப்பனோ என்று பொருள்படும்படியாக இருக்கிறது; அது உன் சிற்றன்னையின் சொல்லில் உனக்கு நம்பிக்கையில்லை யென்றும், அவளைப் பொய்யள் என்றும் நினைக்கச் செய்கிறது. இனி வேறு யாரிடமும் இவ்வாறு சொல்லாதே என்று அறிவுறுத்துவாளாய், "என்று பின்னரும் மன்னவன் ஏவியது அன்று எனாமை மகனே உனக்கு அறம்" என்று சொல்லி, "பரதன் முடிசூடுவது நல்லது தான்; நீயும் அவனோடு ஒன்றி வாழ்க என்பவள், "நன்று, நும்பிக்கு நானிலம் நீ கொடுத்து ஒன்றி வாழுதி ஊழிபல" என்றாள். தந்தையாகிய தசரதன் வேறாகவும், தாயாகிய கைகேயி வேறாகவும் பிரித்து, "மன்னவன் பணியன்றாயின் நும்பணி மறுப்பனோ" என இராமன் கூறியமையால், இனி தான் வேறு தம்பி வேறாகப் பிரியக் கூடாது என்று அஞ்சியே கோசலை, "ஒன்றிவாழுதி ஊழிபல" என்று கூறுகிறாள். பின்பு குகனைக் கண்டபோதும், இராமன் முதலிய

நால்வரோடு குகனையும் கூட்டி, "ஐவீரும் ஒருவீராய் (ஒன்றுபட்டு) அகலிடத்தை நெடுங்காலம் அளித்திர்" என்று கோசலை கூறுகிறாள். இதனால் தன் மக்கள் அனைவரும் ஒற்றுமையாய் நெடுங்காலம் வாழ வேண்டும் எனக் கோசலையுள்ளம் குறிக்கொண்டு நிற்பது காண்கிறோம்.

இராமனோடு உடன் செல்லும் இலக்குவன் தன்தாய் சுமித்திரையிடம் விடை பெறுகிறான். அவள் அவனை நோக்கி, நீ செல்லுமிடம் வனம் என்றும் தாய் தந்தையரையும் பிறந்த நாடு நகரத்தையும் பிரிந்து போகிறோமே என்றும் நினைத்தல் கூடாது; நில்லாது உடனே போ என்று சொல்லுகிறாள்.

"ஆகாததன்றால் உனக்கு அவ்வனம் இவ்வயோத்தி
மாகாதல் இராமன் நம்மன்னன் வையமீந்தும்
போகாவுயிர்த்தாயர் அப்பூங்குழல் சீதைஎன்றே
ஏகாய் இனி இவ்வயின் நிற்றலும் ஏதம்" என்றாள்

இராமனுக்குத் தான் வனம் போக வேண்டியது கட்டளை; அது எனக்கு ஆகுமா என்று எண்ணாதே; இராமனுக்கு அடுத்தது உனக்கு; ஆகவே நீயும் காடு செல்வது "ஆகாததன்று" என்று போவது முறையென்று முதலில் வற்புறுத்தி, இங்கேயிருந்து அயோத்திக்கும் மன்னனுக்கும் தாயார்க்கும் பணி செய்யலாம் என்று நினைப்பாயேல், அதற்கு வனமும் இராமனும் சீதையும் உள்ளனர், போ, என்பவள், "உனக்கு அவ்வனம் இவ்வயோத்தி; மாகாதல் இராமன் நம் மன்னன்; போகாவுயிர்த் தாயர் பூங்குழல் சீதை என்றே ஏகாய்" என்று சொல்லி, அவன் சிறிது தயங்கி நிற்பானாயின் குற்றமாம் என்று எண்ணி, "இவ்வயின் நிற்றலும் ஏதம்"

என்றாள். நின்றால், பணிபுரியச் சுணங்குகிறான் என்ற குற்றம் வரும். அதனால் நிற்றலும் ஏதம் என்கிறாள்.

தாய் சொல் கேட்டவுடனே இலக்குவன் புறப்பட்டுப் போகிறான்; அவனை நிறுத்திக் கடமையொன்றைப் பணிக்கின்றாள். நீ இதுவரை இராமன் தம்பியென்ற முறையில் அவனை விடாது பின் தொடர்ந்து திரிந்தாய்; இனி வனத்தில் உன்னைப் பார்ப்பவர், இவன் இராமனுக்குத் தம்பியென்று எண்ணலாகாது; இராமனுக்கு தொண்டு செய்யும் அடியவன் என்று நினைக்கும்படி நீ நடந்து கொள்ள வேண்டும். அடியார் இயல்பு கூறுகிறேன்; தலைவனுக்கு முந்தித் தன்னுயிர் கொடுப்பவன் தலையாய அடியவன் என்று அறிவுறுத்த முற்பட்டுப்

"பின்னும் பகர்வாள் மகனே
இவன் பின் செல் தம்பி
என்னும் படியன்று அடியாரினில்
ஏவல் செய்தி
மன்னும் நகர்க்கே இவன் வந்திடின்
வா அதன்றேல்
முன்னம் முடி என்றனள்
வார்விழி சோர நின்றாள்

முன்னம் ஏகாய் இனி இவ்வயின் நிற்றலும் ஏதம் என்றவள் மறுபடியும் நிறுத்தி உரையாடுவதால், "பின்னும் பகர்வாள்" என்றும், தன் சொல்லுக்கு மாறு கூறாது பணிவுடன் இலக்குவன் கேட்பது தோன்ற "மகனே" என்றும் பாட்டுக் கூறுகிறது. உன்னைக் காண்பவர், நின் ஒழுகலாறு கண்டு இவன் என்றும் இராமன் பின்னே செல்லும் தம்பி என்னும்படி நடத்தலன்று உனது செயல்;

விருந்தோம்புவது இல்வாழ்வின் நல்லறங்களுள் தலையாயது; “இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு” என்பர் திருவள்ளுவர். தொல்காப்பியர் மகளிர்மாண்பு கூறுமிடத்து, “வல்லிதின் விருந்து புறந்தருதல்” ஒன்றாக வற்புறுத்துகின்றார். இளங்கோ, விருந்தோம்பலை, “தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர் கோடல்” என்று சிறப்பிக்கின்றார். இந்த நன்மாண்பு, மனைவாழ்வு வறுமையால் வாடிய போதும் இயன்ற அளவு விருந்தோம்பல் நடக்க வேண்டும் என்பதற்காகவே. தொல்காப்பியர், “வல்லிதின் விருந்து புறந்தருதல்” என்கிறார். சிவகங்கைக்குக் கிழக்கில் உள்ள இளையான்குடியில் வாழ்ந்தவர் மாறன் என்ற உழவர். அவரது நன்மனை விருந்தோம்புவதில் பேரூக்கம் கொண்டிருந்தது. அதனால், பொருள் வளம் குறைய நல்குரவு தோன்றி அவருடைய வாழ்வை அல்லற்படுத்தியது. மாரிக்காலத்தே நிலத்தைப் பண்படுத்தி நெல்விதை தெளித்திருந்தார். அன்று மாலை சிவனடியார் ஒருவர் மிகவும் பசித்து ஒரு விருந்தினராக அவர் வீடு நோக்கி வந்தார். அவரை வரவேற்ற மாறனார், தன் மனைவியை நோக்கி, இவர் தீரவே பசித்தார் செய்வது என்” என்று கேட்கிறார். அதே நிலையில், மனைவியும் தானும் உணவின்றி இருப்பதையும் உணர்கிறார்; அதனால் அவர் நமக்கு முன்பு இங்கு உணவிலை; ஆயினும் இமக்குலக் கொடிபாகர்க்கு இனியவர் தமக்கு நாம் இன்று அடிசில் தகவுற அமைக்குமாறு எப்படி” என்று கேட்கிறார். இமக்குலக் கொடி என்றது உமையம்மையை அவள் இறைவன் அளித்த இரண்டு படி நெல்லைக் கொண்டு முப்பத்திரண்டு அறம் வளர்த்தவள் என்ற

குறிப்புடையதாவதை மாறனார் மனைவி நினைத்து, தாமும் இயன்றது செய்து விருந்து செய்ய வேண்டுமென நினைக்கிறாள். உமைக்கு இருநாழி நெல் கிடைத்தது; இங்கு ஒன்றும் இல்லையே என்பாளாய், “மாது கூறுவள் மற்றொன்றும் காண்கிலேன், ஏதிலாரும் இனித் தருவார் இல்லை; போதும் வைகிற்றுப் போமிடம் வேறில்லை” என்று சொல்லித் தம்மையே நினைந்து வருந்தி, “தீதுசெய் வினையேற்கு என் செயல்” என்று எண்ணுகிறாள். வளம் சுருங்கினும் மனஞ் சுருங்காத மாண்பினராதலால் மாறனாருடைய மனைவியார், மாறு கூற மனமில்லாமல், “மற்று ஒன்றும் காண்கிலேன்” என்றும், அயலவரும் இனித் தருவார் என்பதற்கில்லை. ஏனெனில் அவர் அனைவரும் வேண்டுவன கொடுத்து ஒய்ந்து விட்டார்; இனி அவருள் நமக்குக் கடன் கொடாதவர் யாரும் இல்லை என்றற்கு, ஏதிலாரும் இனித் தருவார் இல்லை என்றும், வேறு எங்கேனும் சென்று கேட்கலாமெனில் பொழுதும் மறைந்து விட்டது போமிடமும் வேறு இல்லை என்பார், போதும் வைகிற்றுப் போமிடம் வேறிலை என்றும் வருந்துகிறார்.

மனைக் கிழத்திக்கு இவ்விருந்தோம்பும் அறம் சிறப்புடைய கடனாகும்; அதனை ஆற்றமாட்டாமைக்குக் காரணம் என் வினை என்பவள், என் வினையுள்ளும் தீது விளைக்கும் வினையையே நான் உடையளா யிருக்கின்றேன்; அதனால் யான் செய்யலாவது என்னோ என ஏங்குபவள், ‘தீது செய்வினையேற்கு என் செயல்’ எனச் சொல்லி எண்ணமிடுகின்றார்.

அவள் நினைவில் அன்று பகலில் செய்த செயல் ஒன்று எழுகிறது. பகலில் வயலில் செந்நெல் விதைத்த

செயல் நினைவில் வரவே, "இத்துன்பம் நீங்க ஒரு வழியுண்டு; வயலில் விதைத்த நெல்லை வாரிக் கொண்டு வந்தால், வல்லவாறு அமுதாக்கி அளிக்கலாம் என்பாளாய், "செல்லல் நீங்கப் பகல் வித்திய செந்நெல் மல்லல் நீர் முளைவாரிக் கொடுவந்தால் வல்லவாறு அமுதாக்கலும் ஆகும் மற்று அல்லதொன்றறியேன்" என்று சொல்லி அயர்ந்தாள். வித்திய செந்நெல் நீரூறிச் சேற்றிற் படிந்து முளைகட்டியிருப்பினும் குற்றமில்லை; அதனைப் பதப்படுத்திச் சமைத்தால் உணவு வளமாக இருக்கும் எனக் கணவனுக்கு ஊக்கமுண்டாகுமாறு "செந்நெல் மல்லல் நீர் முளை" என்று குறிக்கின்றார். மல்லல், வளம் என்பர் தொல்காப்பியர், "வல்லிதின் விருந்து புறந்தருதல்" எனத் தொல்காப்பியர் மனையவள் மாண்பு கூறினமையின், மாறனார் மனைவியும், வல்லவாறு அமுதாக்கலும் ஆகும் என்று உரைக்கின்றாள். பின்பு விறகுக்கும் கறிக்கும் உரியன முயன்று தேடிச் சமைத்தபின் அவள் கணவனை நோக்கி, "இணையிலாதாரை ஈண்ட அமுது செய்விப்போம்" என்றாள்.

வளஞ் சுருங்கினும் மனம் சுருங்காத மாறனார் கருத்து முற்றும் வகையில், நெல்முளை கிடைத்ததும் அமுதாகும் வகையில் அம்முளை பக்குவமுற்றதோடு கறி கிடைத்ததும் பிறவும் நினைத்த அவர்க்குத் தமது நல்லறம் நன்கு கைகூடும் பேறு எய்தியதால் "நயனுடையான் நல் கூர்ந்தானாதல் செயும்நீர செய்யாதமைகலாவாறு" என்றபடி செய்யத்தக்க விருந்து செய்யப்படாமையால் கெடாதவாறு இருந்து சிறப்பிக்கும் அடியவர்பால் எழுந்த அன்பையும் வியக்கின்றாராதலால் அடியவரை 'இணையிலாதார்" என்று ஏத்துகின்றார்.

நல் அறம் புரிந்தொழுகும் இல்வாழ்வில் கணவன் வேறு நாடு சென்று உயர்கல்வி கற்க விரும்பித் தன் மனைவிபால் விடை கேட்கிறான். பிரிவுத்துயர் அவள் மனத்தை வருத்துகின்றது; கல்வி குறித்துப் பிரிவதால் அதைத்தடுப்பதும் முறையாக இல்லை. இந்நிலையில் அறிவு மிக்க அந்த நங்கை தரும் விடையைப் பாருங்கள்.

“ஆரும் விரும்பிய கல்வி மேல்
ஆசையுமக்குளதாய் விடின்
பாருற என் பொரு பாவையாய்
பாடிய பாவலர் போலவே
நீரும் அருந்தமிழ் செப்பிடும்
நீர்மையறிந்திவண் ஏகுவீர்
மேரு நெடுஞ்சிலையத்தனார்
மேவருணாபுரி வெற்பரே"

என்று சொல்லுகிறாள். அதாவது அன்பரே உமக்குக் கல்வி மேல் ஆசைமிகுந்து விட்டது; அது பற்றி என்னைப் பிரிந்துபோக நினைக்கிறீர்கள். நல்லது. நினைந்து போகிறவரைத் தடுப்பது கூடாது; சென்று என்பைப் பெண்ணாக்கிய ஞானசம்பந்தரைப்போல் அரிய பாட்டுக்களைப் பாடும் நீர்மை பெற்று வருக என்று உரைக்கின்றாள். கணவன் கற்றவனாதலால் அவள் சொன்னதை ஒன்றொன்றாய் நினைக்கிறான்; கல்வி மேல் உமக்கு ஆசையுண்டாய் விட்டது என்பவள், “ஆரும் விரும்பிய கல்வி" என்றது ஏன்? சென்று வருக என்பவள், எலும்பைப் பெண்ணாகப் பாடிய பாவலர் போலத் தமிழ் கற்று வருக என்றது ஏன் என நினைக்கிறான். பெரியவர் சிறியவர் ஆடவர் பெண்டிர் என்ற வேறுபாடின்றி யாரும் விரும்பப்படுவது கல்வி; அதனை நீங்களும் விரும்புவதில் எனக்கு வியப்புத் தோன்றவில்லை என்பதற்கு ஆரும்

விரும்பிய கல்வி என்று சொல்லுகிறாள். எக்காலத்தும் எவராலும் பெறப்படுவது ஆதலால் அதன்மேல் ஆசை கொண்டு இப்போது போகிறேன் என்பது அருமையான காரணமாக இல்லையென்று நினைக்கிறாள் என்று அறிந்தான்.

அடுத்தபடியாக எலும்பைப் பெண்ணாகுமாறு பாடிய பாவலர் போலக் கற்க வேண்டும் என்றும் அது தான் பெரியராயினார் செய்யும் அருஞ்செயல்; அத்தமிழ்தான் அருந்தமிழ் என்றும் சொல்லுகிறாள் என நினைக்கிறான். தன் மனைவியின் உயர்ந்த மனப்பான்மையை எண்ணி மகிழ்கிறான். சிறிது போதில் வேறொரு நினைவு எழுகிறது. எலும்பைப் பெண்ணாகுமாறு பாடியவர் ஞானசம்பந்தர். அவர் மயிலாப்பூரில் தனக்கெனக் குறிக்கப்பட்டிருந்த பெண் இறந்துவிட அவள் எலும்பைக்கண்டு அவள் மீளப் பெண்ணாகுமாறு தமிழ் பாடினார். அதை ஏன் இவள் இங்கே குறிக்கிறாள்? மயிலாப்பூர்ப் பெண் போல, நான் பிரியவும், இவள் இறந்து விடுவாள் போலும்; எஞ்சிநிற்கும் இவளது எலும்பை நான் மீண்டும் பெண்ணாகுமாறு பாடவேண்டும் என்று சொல்லுகிறாள் என்று நினைந்து அவளது மதி நுட்பத்தை வியந்து பாராட்டி மகிழ்கிறான்.

இதுகாறும் கூறியவற்றைத் திரட்டி நோக்கின், இலக்கியங்கள் யாவும் பெண்ணின் அறிவைப் பெரிதும் பாராட்டிப் புகழ்வதிலேயே அரும்பணி செய்திருப்பதை அறிகின்றோம்.

7. தமிழ்க் காரிகையரின் தனிமாண்பு

ஒரு நாட்டிற்குப் பெருமை தருவனவற்றுள் பெண்மையின் வண்மையும் நன்மையும் சிறப்பாக இருத்தல் கண்டே தொல்காப்பியர் “அறிவும் அருமையும் பெண்பாலான” என்றார். திருவள்ளுவர், “பெண்ணில் பெருந்தக்கயாவுள” என்று வியந்தார். “பண்நிலாவும் மறைபாடலினான்” என்று சிவனைப் பாராட்டிய திருஞானசம்பந்தர், “இறைசேரும் வளை அங்கைப் பெண்நிலாவ உடையான்” எனப் பெண்மையைப் பேணும் பெருந்தகைமையைப் புகழ்ந்து பேசுகின்றார்.

நம் நாட்டுப் பெண்ணியற் பெருமகளிரை நினைக்கும் போது, புலவர் போற்றும் அவர்களின் புகழும், அரசர் பரவும் அறிவும், சான்றோர் தலைதாழ்த்தி வணங்கும் சான்றாண்மையும், வீறுகொண்டு விளங்குகின்றன.

சங்க காலத்தில் கொங்கு நாட்டின் வடபகுதியில் தருமபுரியைத் தலைநகராகக் கொண்டு விளங்கியது தகடூர்

நாடு. அதனை அந்நாளில் ஆட்சிபுரிந்தவன் அதியமான் என்ற அறிவுடை அரசன். ஒருகால், அவன் உண்டவரை நெடிது வாழப்பண்ணும் நெல்லிக்கனியொன்று கிடைக்கப் பெற்று, அக்காலத்தே அஃகியகன்ற அறிவாலும் ஆன்றவிந்தடங்கிய கொள்கையாலும் மாண்புமிக்கு விளங்கிய ஔவையார் வரக்கண்டான். தான் பெற்ற அமிழ்தனைய நெல்லிக்கனியைத் தானே உண்டு நெடிது வாழ்தலினும், பெண்குலப் பாட்டியான ஔவையுண்டு பல்லாண்டு வாழ்வது செவ்விது; நாட்டுக்கு நல்லது என்று எண்ணி, கனியின் தனிச்சிறப்பை முன்னுற மொழியாமல் அவட்குத் தந்து உண்பித்தான். உண்ட பின்பே, அது தன்னையுண்டவரை நெடிது வாழப்பண்ணும் நீர்மையது என எடுத்துரைத்தான். வியப்பும் உவகையும் மீதூர்ந்த ஔவையார் அப்பொழுதே ஒரு பாட்டைப் பாடினார்.

"பெருமலை விடரகத்து அருமிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது
ஆதல் நின்னகத்து அடக்கிச்
சாதல் நீங்க எமக்கு ஈத்தனையே"

என்பது அப்பாட்டு. கனிதந்த நெல்லிமரம் பெருமலையொன்றின் ஏறுதற்கரிய உச்சியில் இருப்பது; அதன் கனி உண்பவரை நீடுவாழ வைக்கும் சிறப்புடையது என்று அதியமான் சொல்லக் கேட்டு அறிந்தமையால், "பெருமலை விடரகத்து அருமிசை (உச்சி)க் கொண்ட சிறியிலை நெல்லித் தீங்கனி" என்று ஔவையார் புகழ்கின்றார். இவ்வியல்புடைய கனி கிடைத்தால், அதனைத் தாமே யுண்ணுவதற்கு எவரும் விரும்புவர்; அதற்கு மாறாக நீ எனக்கு நல்கினாய் என்பாராய், "சாதல் நீங்க எமக்கு ஈத்தனையே" என்று பரிகின்றார். முன்னாக

எனக்கு உரைத்தால் நான் மறுப்பேன் என எண்ணி, நான் உண்டபின்பே அக்கனியின் இயல்பைக் கட்டுரைத்தாய் என்று பொருள்பட,

"ஆதல் நின்னகத்து அடக்கிச்
சாதல் நீங்க எமக்கு ஈத்தனையே"

என்று சொல்லி வியக்கின்றார்.

அதியமானுடைய இந்த அரிய செயலை, தனக்கென வாழாத் தனிப்பெருமையை நினைந்தார் ஔவையார்; அவன் தன்னினும் பன்னாள் மன்னி வாழ வேண்டும் என்று விரும்பி வாழ்த்துகின்றார்.

"பால்புரை பிறை நுதல் பொலிந்த சென்னி
நீலமணி மிடற்று ஒருவன் போல
மன்னுக பெரும நீயே"

அதாவது, மற்றைய தேவரும் மக்களும் வாழ வேண்டிச் சிவன் விடத்தைத் தான் உண்டு நீலமணி போலக் கரிய கழுத்தையுடையவனானான்; பிறர் வாழ்தலை விரும்பித் தான் நஞ்சுண்ட பெருமானைப்போல யான் நீடுவாழ வேண்டி நெல்லிக்கனியை எனக்கு அளித்து நீ வாளா இருந்தாய்; ஆதலால், நீ அப்பரமனைப் போல நிலைபெற்று வாழ வேண்டும் என்பார் "நீலமணிமிடற்று ஒருவன் போல மன்னுக பெரும நீயே" என்று கூறினார்.

ஔவையார் அதியமானை வாழ்த்திய இந்த அருமையுரையில் பொதிந்த உயர்ந்த கருத்தைப் பின்வந்த இளங்கோவடிகள், மனத்தில் கொண்டு,

"விண்ணோர் அமுது உண்டும் சாவ
ஒருவரும்

உண்ணாத நஞ்சுண்டு இருந்து
அருள் செய்குவாய்"

என்று வாயாரப் பாடி மகிழலானார்.

இளங்கோவுக்குப் பின்பு தோன்றிய ஞானசம்பந்தப் பெருமான்,

"உண்ணற்கரிய நஞ்சையுண்டு
ஒருதோழம் தேவர்
விண்ணிற் பொலிய அமுதம் அளித்த
விடைசேர் கொடி அண்ணல்"

என்று பாடினார்.

இங்ஙனம் பிறர்பொருட்டுத் தான் நஞ்சையுண்டு சிவன் நீலமணிமிடற்று ஒருவனாகிய குறிப்பை ஔவையார் சுட்டிக்காட்டியது பின் வந்த சான்றோர் பலரும் தலைவணங்கிப் பொன்போல் போற்றும் பொற்புடையதாயிற்று. மணிவாசகப் பெருந்தகையும், இதுபற்றியே

"ஆர்ந்த நஞ்சு அயின்று வானோர்க்கு
அமுதம் ஈ வள்ளல் போற்றி"

என்று சிவனது வள்ளன்மையை எடுத்துரைத்துப் போற்றுகின்றார்.

இனி, தமிழகம் பயந்த தையல் நல்லாருள் காரைக்காற் புனிதவதியாரும் ஒருவர். இவரைக் காரைக்கால் அம்மையார் என்பதுதான் பெருவழக்கம். காரைக்கால் அம்மையார் "மானமிகு தருமத்தின் வழி நின்று வாய்மையினில்'' மேன்மையுற்ற வணிகர் பெருமகள். பிறந்து மொழிபயின்ற நாள் தொட்டே இறைவன் பால் அன்பு சிறந்தவர். கைப்பிடித்த

கணவனையே "அன்னையும் அத்தனும் அல்லரோ அவர் நமக்கு" என்று சங்ககால மகளிர் கருதியதுபோல நினைந்து மனையறம் புரிந்த அம்மையார், கணவன் தன்னைக் கைவிட்டு நீங்கியதும், ஊசல்கயிறு அற்றால் தரையை அடைவது போல, அம்மையப்பனாகிய சிவனையே தமக்கு அம்மையும் அப்பனுமாகக் கொண்டார். அதனால், அவர் பாட்டெல்லாம், பெற்றோரிடத்தில் செல்வப்பெண் ஒருத்தி எவ்வளவு அன்பு கனிந்து பேசுவாளோ அவ்வளவு அன்பு நிறைந்து மென்மை மிகுந்து விளங்கும்.

"அரிசினத்தால் ஈன்ற தாய் அகற்றிடினும், மற்று அவள் தன் அருள் நினைந்தே" குழவி அழும் என்பர் சான்றோர். அவ்வாறே இறைவன் தமக்கு நேரும் இடர்களை நீக்காவிடினும், தமது நெஞ்சு அவனிடத்தில் அன்பு குன்றாது என்று கூறுவாராய்,

"இடர்களையாரேனும் எமக்கு இரங்காரேனும்
படரும் நெறி பணியாரேனும் — சுடர் உருவில்
என்பு அறாக்கோலத்து எரியாடும் எம்மானார்க்கு
அன்பு அறாது என் நெஞ்சு அவர்க்கு"

என்று பாடுகின்றார்.

நமக்கு இடர் நேர்ந்த போது இறைவனை வேண்டுவோம்; அது நினைத்தபடி நீங்காவிடில், நமது உள்ளத்து வெறுப்புத் தோன்றி ஆண்டவன்பால் வேண்டாவெறுப்புக் கொள்வோம். ஆனால், அம்மையாரோ, அவ்வாறு இன்றி,

"பிறையும் புனலும் அனல் அரவும் சூடும்
இறைவர் எமக்கு இரங்காரேனும் கறைமிடற்ற
எந்தையார்க்கு ஆட்பட்டேம் என்றென்று இருக்குமே
எம்தையா உள்ளம் இது"

என்று உரைக்கின்றார். இதன்கண் இறைவர் இரங்காராயினும், நாம் அவனுக்கு ஆட்பட்டோம். அவன் எவ்வகையினும் இரங்கி அருளியே தீர்வான் என்று எம் உள்ளம் இருக்கும், என்பாராய் "இறைவர் எமக்கு இரங்காரேனும் எந்தையார்க்கு ஆட்பட்டோம் என்றென்று இருக்குமே'' என்று கூறுகிறார். தமது உள்ளத்தை இப்பாட்டில் "தையா உள்ளம்'' என்று குறிக்கின்றார். இஃது ஒரு அருமையான சொல்வழக்கு. தையா – ஒப்பனை அல்லது ஒழுங்கு செய்யப்படாத என்று பொருள். திலகமிட்டு ஒழுங்கு செய்யப்பட்ட நெற்றியை நக்கீரர் திருமுருகாற்றுப் படையில் "திலகம்தைஇய தேங்கமழ் திருநுதல்'' என்பர். தைய என்பதன் எதிர்மறை தையா என்பது. பலபட எண்ணி ஒரு நெறிப்படாத உள்ளத்தை "எம்தையா உள்ளம் இது" என்று குறிக்கின்றார்.

எத்தனைத் துன்பம் வரினும் அத்தனையும் போக்கி இறைவன் அருள்புரிவான் என்று எண்ணுவதில் அம்மையார் திண்ணியவராவர்.

> "இறைவனே எவ்வுயிரும் தோற்றுவிப்பான், தோற்றி
> இறைவனே ஈண்டு இறக்கம் செய்வான் – இறைவனே
> எந்தாய் என இரங்கும் எங்கள் மேல் வெந்துயரம்
> வந்தால் அதுமாற்றுவான்"

என்று கூறுவர்.

காரைக்கால் அம்மையார் போலவே ஸ்ரீவில்லி புத்தூரில் தோன்றிய பூங்கோதை பட்டர்மரபில் வந்த பண்பு மிக்க பெண்மகளாவர். இவரை ஆண்டாள் என்றும் சூடிக்கொடுத்த நாச்சியார் என்றும் வழங்குவர். அவர் கன்னிப்பருவத்தே கண்ணபிரான்பால் பக்தி கொண்டு

பின்பு அவனையே மணந்து கொள்ள வேண்டும் என்ற கடுங்காதல் கொண்டு அழகிய இனிய பாட்டுக்களைப் பாடியுள்ளார். அக்கன்னிப் பருவத்தில் கண்ணனைப் பாடிய திருப்பாவை ஓதும் உள்ளத்துக்கு உவட்டாத பேரின்பம் நல்கும் பெருமை வாய்ந்தது.

அக்காலத்தே மார்கழித் திங்களில் இளம்பெண்கள் பாவை நோன்பு நோற்பது வழக்கம். அந்நோன்பு பொருளாகப் பாடிய திருப்பாவையில் ஆண்டாளின் இளமையுள்ளம், பாவை நோன்பினால் நாடு மழைவளம் நிறைந்து செல்வம் பெருகும்; மண்ணக வாழ்வும் மாட்சியுறும் என்று நினைக்கிறது. அதனைத்தான் பாடிய திருப்பாவையில்,

"ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம்பாவைக்குச் சாற்றி நீராடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து
ஓங்கு பெருஞ்செந்நெல் ஊடுகயல் உகள
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்ப
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்து ஏலோர் எம்பாவாய்"

என்று பாடுகின்றார்.

இதன்கண், நாங்கள் பாவைக்குச் சாற்றி நீராடினால், நாடுமுற்றும் தீங்கின்றி நலம் பெறும்; மாதம் மும்மாரி பெய்யும் என்ற கருத்தை, "தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்யும்" என்று எடுத்துரைக்கின்றாள். செந்நெல் வயல்களில் கயல்மீன்கள் விளையாட, மலர்ந்து மணம்விரியும் குவளைப் பூவில் வண்டுகள் தேனுண்டு கண்ணுறங்கும்; புல் மேய்ந்து

கொட்டில் புகுந்த பெரும்பசுக்கள் பால்வளம் பெருகி குடக்கணக்கில் கறக்கும்; இவ்வாற்றால் நாடு "நீங்காத செல்வம் நிறைந்து" மேன்மையுறும் என்று எண்ணி,

"தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்து"

என்று கூறுவது ஆண்டாளின் விரிந்த மனமாண்பையே நாம் காணச் செய்கிறது.

கள்ளம் கபடில்லாத பிள்ளையுள்ளத்தில் கண்ணன் புகழ்பாடி, நாடு செந்நெல் வளமும் நீங்காத செல்வ வளமும் தீம்பாற் பயனும் சிறக்க வேண்டும் எனச் சிந்திப்பதும் செஞ்சொற்களாற் பாடுவதும் ஆண்டாளின் பெண்மை நலத்திற்குப் பெருமை தருகின்றன.

வேறொரு பாட்டில் கார் மேகத்தை நோக்கி மழை பொழிய வேண்டும் எனக் கூறுகிறாள். மேகத்தின் நிறம் கண்ணபிரானையும், மழைத்தாரை அவன் ஏந்திய வில் சொரியும் அம்புகளையும் நினைப்பிக்கவே "மழையே,

"ஊழி முதல்வன் உருவம் போல் மெய் கறுத்து
ஆழிபோல் மின்னி வலம்புரி போல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழை போல்
வாழ வுலகினில் பெய்திடாய் நாங்களும்
மார்கழி நீராடமகிழ்ந்து ஏலோர் எம்பாவாய்"

என்று பாடுகிறாள். கண்ணன்போல் நிறம் கறுத்து, அவனுடைய ஆழிபோல் மின்னி, சங்குபோல் அதிர்ந்து அவனுடைய வில்லின் அம்பு போல் மழை பொழிய வேண்டுவது எதற்கு? அவள் எண்ணத்தின் மாண்பு யாது?

மழையின்றி மாநிலத்தார்க்கு வாழ்வில்லை. உலகம் வாழ வேண்டும்; வாழ்ந்தால்தான் தாங்களும் மகிழ்ந்து மார்கழி நீர் ஆட முடியும் என்ற கருத்துப்பட

> "வாழவுலகினில் பெய்திடாய் நாங்களும்
> மார்கழி நீராட மகிழ்ந்து ஏலோர் எம்பாவாய்"

என்று பாடுகிறாள். "தான்வாழ ஏனோர் தனக்கு அடிமையாக என்னும் ஊன அறிவு" அவள் மனத்தில் தலைகாட்டவில்லை. "நீ வாழியர் இவ்வுலகத்தோர்க்கே" என்று வாழ்த்திய சான்றோர்போல, உலகம் வாழ வேண்டும் என்ற உயர்ந்த கொள்கை ஆண்டாளின் நெஞ்சின் அறமாக இருப்பதைக் காண்கின்றோம்.

இதனோடு நிற்கின்றாளில்லை அவ்வேந்திழை. இவ்வாறு பாவை நோன்பு நோற்றுக் கண்ணனைப் பாடிப் பரவுவது விளையாட்டன்று. முன்னும் பின்னும் நின்ற வினைகளால் வரக்கடவ துன்பங்களைப் போக்குவதற்காக என்று கூறுகிறாள்.

> "தாயைக் குடல் விளக்கம் செய்த தாமோதரனைத்
> தூயோமாய் வந்து நாம் தூமலர் தூவித் தொழுது
> வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்கப்
> போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
> தீயினில் தூசாகும் செப்பு ஏலோர் எம்பாவாய்"

என்று உரைக்கின்றாள்.

இவ்வாறு உலகவர் நலம்பெற வேண்டி, உலகவாழ்வு வளம்பெற வேண்டி, தன்னை மறந்து தன்னலம் துறந்து இறைவன்பால் ஈடுபட்ட ஆண்டாளின் மாண்பை என்னென்பது.

ஆண்டாள் மணப்பருவம் எய்தியபோது, அவளது அன்புள்ளம் திருவேங்கடத்தானை விரும்புகிறது. மன்மதனை நோக்கி, என்னை,

"வெய்யதோர் தழல் உமிழ் சக்கரக்கை
வேங்கடவற்கு என்னை விதிக்கிற்றியே"

என்று வேண்டுகிறாள். அந்த உயர்ந்த மனப்பண்பை வியந்து நோக்குகிறார் உய்யவந்தார் என்ற சான்றோர். அத்தகைய நெஞ்சுரம் தமக்கு இல்லாமை கண்டு ஆண்டாளையே தொழுது வணங்கி, எனக்கும் என்னொத்த அடியார்கட்கும் இந்த அரிய பான்மையை நீ அருள வேண்டும் என்பாராய்,

"சூடிக்கொடுத்த சுடர்க்கொடியே, தொல்பாவை
பாடி அருளவல்ல பல்வளையாய் நாடிநீ
வேங்கடவற்கு என்னை விதி என்ற இம்மாற்றம்
நாம்கடவா வண்ணமே நல்கு"

என்று இரந்து கேட்கின்றார். எனின், மகளிரின் மனமாண்பினை என்னென்பது.

காலமெல்லாம் விருந்தோம்பியதனால் வறுமை எய்தினார் இளையான் குடிமாறர். மழைக்காலம் வரவும், மனையில் இருந்த விதை நெல்லை விதைத்துவிட்டு வெறுங்கையராய் வாடியிருக்கையில், அன்றிரவு பெய்த மழையில் நனைந்து மிக்க பசியுடன் அடியவர் ஒருவர் வரக்காண்கின்றார். அவரைக் கண்டதும் மாறனார்க்கு அவரது பசியைப் போக்குதற்குப் பெரு விருப்ப முண்டாயிற்று. செய்வது அறியாது தயங்கித் தம் மனைவியாரிடம் உரைக்கின்றார். கலங்கித் தயங்கிய கணவன் உள்ளம் உள்ளநிலையை ஓர்ந்துணரும்

தன்மையிழந்து இருப்பதை உணர்கின்றார். அல்லற் காலத்துத் தொல்லைகள் தொடர்ந்து அலைத்த போதும்,

"அல்லல் என்செயும் அருவினை என்செயும்
தொல்லை வல்வினைத் தொந்தந்தான் என் செயும்"

என்னும் துணிவும் தெளிவும் படைத்தது மனைமடந்தையரின் மாண்பு அமைந்த உள்ளம்.

"மாது கூறுவள் மற்று ஒன்றும் காண்கிலேன்
ஏதிலாரும் இனித் தருவார் இல்லை
போதும் வைகிற்று போமிடம் வேறிலை
தீது செய் வினையேற்கு என் செயல்"

என்று கூறுகிறாள். வந்த விருந்தினர் "தீரவே பசித்தார் என் செய்வது" என்று மாறனார் உரைத்தபோது, மனையவள் மாறு கூறுவளோ என்று அஞ்சினார். அதனை அவர் முகமும் மொழியும் காட்டின. அதனால், அவருடைய மனம் தனது மறுமாற்றத்தால் வாடி வருந்தாவண்ணம், விருந்தினரின் பசியாற்ற முடியாமைக்கு உரிய காரணங்களை நினைந்து கூறுகிறாள். உணவு சமைத்தற்கு வேறு பொருள் ஒன்றும் நம் இல்லத்தில் இல்லை; "மற்று ஒன்றும் காண்கிலேன்". அயல்மனைகளில் கேட்கலாமெனின், கொடுப்பார் ஒருவரும் இல்லை; ஏனெனில் அவர்கள் ஏதும் இல்லாதவர். அவர்கள், "ஏதிலார்"; "ஏதிலாரும் இனித்தருவார் இல்லை. வேறு தெருக்களில் சென்று முயலலாம் எனின், காலமும் நள்ளிரவு; போதும் வைகிற்று; போம் இடம் வேறில்லை".

இப்படி ஒரு துன்ப நிலை ஏன் வந்தது? என்னால், "நான் செய்த தீவினை" என்பாராய், "தீது செய்வினையேம்" எனக் கணவனையும் உளப்படுத்திப் பன்மையால் கூறாமல், வினையேன் எனத் தன்னைப்

பிரித்துரைக்கின்றார். மனைவாழ்க்கைக்குத் துணையாகிய நான், நீங்கள் மேற்கொண்ட நல்லறத்துக்கு வல்லாங்கு உதவ வேண்டிய யான், அது முடியாமைக்குக் காரணம் எனது தீவினையே என்பாளாய், "தீது செய்வினையேன்" என்று வருந்துகிறாள்.

இங்ஙனம், காரணகாரிய ஆராய்ச்சியில் தோய்ந்த அம்மங்கையின் நல்லறிவு, இனிச் செய்ய வேண்டியது யாது எனச் சிந்திக்கின்றது. மாட்டாமை கூறி மறுப்பது மாண்பன்று; இயன்றது செய்து ஈடேற்றுவது ஏற்றது என்று எண்ணவும், பகற்போதில் வயலில் விதைத்த நெல் நினைவில் எழுகிறது. உடனே மனமுவந்து முகம் மலர்ந்து மாறனாரை நோக்கி,

"செல்லல் நீங்கப் பகல் வித்திய செந்நெல்
மல்லல் நீர் முளைவாரிக் கொடுவந்தால்
வல்லவாறு அமுது ஆக்கலுமாம் மற்று
அல்லதொன்று அறியேன் என்று"

சொல்லுகிறாள். "செல்லல் நீங்க" என்று எடுத்த எடுப்பிலே கூறுகின்ற தொடர் மூன்று பொருளையுடையது. செல்லல் நீங்க என்றதற்கு இந்த இடர்ப்பாடு நீங்குதற்குப் பகலில் வித்திய செந்நெல்லைக் கொடுவந்தால் அமுதாக்கலாம் என்பது ஒரு பொருள். நீங்க என்ற எச்சவினையை நீங்க, நீங்குக என வியங்கோளாக்கி, (செல்க, வாழ்க என்றாற் போல) செல்லல் நீங்க என்றதற்கு மனக்கவலை ஒழிக; பகல்வித்திய செந்நெல்லை அமுதாக்கலாம் என்பது மற்றொரு பொருள். செல்லல் வேறு யாரையும் தேடிச் செல்லவேண்டா; நீங்க இந்தச் சங்கடம் நீங்குதற்கு வழியொன்று உள்ளது; செந்நெல்லைக் கொடுவந்தால் அமுதாக்கலாம் என்பது மூன்றாவது பொருள்.

இவ்வாறு நினைக்க நினைக்கப் புதுப்பொருள் தோன்றி மாறனார் உள்ளத்தின் தளர்ச்சி போக்கி ஊக்குவிக்கும் வகையில் மனைவியின் சொற்கள் அமைந்திருப்பதை உணர்கிறார். அந்நிலையில் விதைத்த நெல் சேற்றிற் புதைந்திருக்குமே, எங்ஙனம் எடுப்பது என்ற எண்ணம் தோன்றி மாறனார் மனத்தை மயக்குகிறது. இன்று பெய்த பெருமழையால் வயலில் நீர் நிறைந்து நிற்கும்; அதன்மேல் விதை நெல் மிதக்கும்; அதனை வாரிக் கொண்டு வரலாம் என்பாராய், "மல்லல் நீர்" என்று சிறப்பித்து, அதனைக் கொண்டு வருவது தவிர வேறு வழியில்லை என்பது புலப்பட "வாரிக்கொடு வந்தால் அமுதாக்கலாம்" என்று சொல்லுகிறாள். முளைத்த விதை நெல்லை எவ்வாறு இப்பொழுது அமுதாக்குவது என்றொரு தடையை மாறனார் எழுப்புகிறார். அதுபற்றி கவலை வேண்டா; அமுதாக்கும் வல்லமை எனக்கு உண்டு; "வல்லவாறு அமுது ஆக்கலாம்" என்று சொல்லி அவரை விடுக்கின்றார்.

பின்னர் அவர் நெல் விதையைக் கொணருகிறார், அவளும் அமுது ஆக்குகிறாள். விருந்தோம்பும் நல்லறம் திருந்திய முறையில் நிறைவுறுகிறது.

இங்கே நாம் காணநிற்பது, கணவனான இளையான் குடிமாறனார் மனமருண்டு செய்வதறியாது திகைப்பதும், அவர் மனைவியாகிய மடந்தை செயல்வகை தெருண்டு செவ்விய இனிய தீஞ்சொற்களால் தெளிவித்துச் செயல்வீரராக்கிய பெருமாட்சியுமாகும்.

இனி, கம்பராமாயணத்துச் செம்மனப் பெண்டிரைக் காண்போம்.

மக்களில் ஆடவராயினும், மகளிராயினும், துன்பம் சுடச் சுடத் தாக்குகின்ற போதுதான் அவர்களுடைய குணமாண்புகள் சுடர்விட்டுத் திகழ்கின்றன.

"சுடச் சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச் சுட நோற்கிற்பவர்க்கு"

என்பர் திருவள்ளுவர். துன்பம் இருபாலார்க்கும் பொது என்பது பற்றியே திருவள்ளுவர் நோற்கிற்பவர் எனப் பொதுப்படக் கூறுகின்றார். மேலும் துன்பம் தனித்து வாராது தொடர்ந்து போந்து தாக்கும்போது சிந்தை கலங்கித் தெளிவு இழந்து மழுங்குதலால் நெறிபிறழ்வதற்கு இடமுண்டு. அப்பொழுதும், அறிவு அறைபோகாமல் அதனை அடர்த்துத் தாங்குவது அருமை; அந்த அருமைதான் பெருமை யுண்டுபண்ணுகிறது.

மணிமுடியணிந்து அரசக் கோலத்துடன் வருவான் என்ற பேரார்வத்தோடு எதிர்நோக்கியிருந்த கோசலைக்கு எதிரே, இராமன் தனியனாக வருகின்றான். வந்து கோசலையின் அடியில் வீழ்ந்து வணங்குகிறான். அது கண்டதும் அவள் உள்ளம் தடுமாறுகிறது. நெஞ்சு துடிக்கிறது. அறிவு அலமருகிறது.

"புனைந்திலன் மௌலி குஞ்சி
மஞ்சனப் புனித நீரால்
நனைந்திலன் என்கொல் என்னும்
ஐயத்தாள் நளினபாதம்
வனைந்த பொன் கழற்கால் வீரன்
வணங்கலும் குழைந்து வாழ்த்தி
நினைந்தது என் ? இடையூறு உண்டோ
நெடுமுடி புனைதற்கு என்றாள்"

இராமனும் நிகழ்ந்தது மொழிந்து, காடு செல்லவேண்டும் என்ற ஆணையைத் தெரிவிக்கின்றான். அச்சொல் செவியில் விழுமுன்பே, கோசலை,

"ஏங்கினாள் இளைத்தாள் மனம்
வீங்கினாள் விம்மினாள் விழுந்தாள்"

என்று கம்பர் கூறுகின்றார். நெஞ்சில் வெப்பம் தோன்றுகிறது. முகம் சிவக்கிறது.

"வஞ்சமோ மகனே உனை மாநிலம்
தஞ்சமாக நீ தாங்கு என்ற வாசகம்"

என்று வாய் பதறுகிறாள். ஆனால் அறிவு மழுங்கவில்லை. "நாடாளும் நலம் பெறாவிடினும் காடுஏகப் பணிக்க வேண்டிய காரணம் யாது?" என்று எண்ணி, காடுசெல்லற்கு வேண்டிய குற்றம் யாது செய்தாய்?

"அன்பு இழைத்த மனத்து அரசற்கு நீ
என் பிழைத்தனை"

என்று வினவுகின்றாள். நாடாளுதலும் காடு ஏகுதலும் என்ற இரண்டும் அரச கட்டளை என்று அறிந்ததனால், "அன்பு இழைத்த மனத் தந்தைக்கு நீ என் பிழைத்தனை" என்று கேளாமல் "அரசற்கு நீ என் பிழைத்தனை" என்று கேட்பது கோமகளாகிய கோசலையின்பால் அரசுநெறி ஓம்பும் அமைதியை விளக்கம் செய்கிறது. ஆணையிட்ட அரசனையல்லது, காடு ஏகும் கட்டளையை மாற்ற வல்லவர் யாவர் என்று தெளிந்து அரசனான தசரதன் இருக்குமிடம் செல்கின்றாள். அப்பொழுது அவள் வாயில் அறிவறிந்த சொற்கள் சில வருகின்றன.

"அவனிகாவல் பரதனது ஆகுக
இவன் இஞ்ஞாலம் இறந்து இருங்கானிடைத்

தவன் நிலாவகை காப்பென், தகைவு இலாப்
புவனி நாதன் தொழுது என்று போயினாள்"

இராமன் முடி சூடாமைக்குக் காரணம் பரதன் நாடாளவேண்டுமென்பதாகையால், அதன்கண் தனக்கு மாறில்லை என்பது தோன்ற, முதலில் "அவனிகாவல் பரதனது ஆகுக" என்றாள். இராமன் காடு சென்று தவநெறியில் நிற்றல் வேண்டா என்பது தான் அரசன்பால் கேட்டற்கு உரியதாதலால், "இவன் இஞ்ஞாலம் இறந்து இருங்கானிடைத்தவன் நிலாவகை காப்பென்" என்றும், விற்போரிலும் சொற்போரிலும் மாற்றுவாரில்லாத ஆற்றல் மிக்கவனாதலால், அவனைத் தொழுதும் வணங்கியும் அழுதும் அரற்றியும் போற்றிக் காடு செல்லாவகை காப்பேன்" என்று சொல்லுகிறாள். இந்நிலைமைக்குக் காரணமாயிருந்த கைகேசியையோ, அவட்கு வரம் தந்த காவலனான தசரதனையோ மறந்தும் ஒரு சிறு சொல்லும் வாய்விட்டு உரைக்கின்றாளில்லை. அரசன் ஆணை யென்றது கேட்டதும், தெறலும் அளியும், ஒறுத்தலும் அருள் செய்தலும் அரசுக்கு அறமாகும். ஒறுத்தலைச் செய்யும் அரசினைத் தொழுது வணங்கினால் அருள் பெறலாம் என்ற அரச நீதியைக் கடைப்பிடிக்கின்றாள்.

பின்னர், கோசலையின் இம்மாண்பினைப் பரதன் அறிகின்றான். அவள் அடிமேல் முடிவைத்து வணங்குகிறான்.

கங்கையாற்றில் குகன் ஒடம் செலுத்த, பரதன் கோசலை, கைகேயி, சுமித்திரை என்ற தாயார் மூவரும் உடன்வரச் செல்கின்றான். ஒடம் ஒட்டிய குகன், கோசலையை வணங்கி, இவர்கள் யார் என்று கேட்கின்றான்.

"சுற்றத்தார் தேவரொடும் தொழ நின்ற
கோசலையைத் தொழுது நோக்கிக்
கொற்றத்தார்க் குரிசில் இவர் யார் என்று
குகன் வினவக் கோக்கள் வைகும்
முற்றத்தான் முதல்தேவி மூன்று உலகும்
ஈன்றானை முன்னீன்றானைப்
பெற்றத்தால் பெருஞ்செல்வம் யான் பிறத்தலால்
துறந்த பெரியாள்" என்றான்.

இப்பாட்டில் கோசலையைச் "சுற்றத்தார் தேவருடன் தொழ நின்ற கோசலை" என்பது ஏன்? "குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை". தன் மகன் இராமன் எய்த இருந்த அரச வாழ்வை மாற்றியதோடு அவன் காடு செல்லுமாறு சூழ்ந்து வெற்றிகண்ட மந்தரை, கைகேயி முதலியோரை வெறுக்காமல் தன் துயரையே தாங்கினமையால் சுற்றத்தார் போற்றுகின்றார்கள். அரசன் ஆணை என்றதும், அதன்வழியே தன் கருத்தைச் செலுத்தினமையாலும், அந்த ஆணையை நிறைவேற்றும் அறத்தை மேற்கொண்ட இராமனை வியந்து போற்றினமையாலும் தேவர்கள் பரவுகின்றனர். இதனால்தான் "சுற்றத்தார் தேவருடன் தொழநின்ற கோசலை" என்று பாராட்டுகின்றனர்.

கம்பர் காட்டும் காரிகையரில், துன்பத் தீயில் வீழ்ந்து துவண்டு புரண்டு துடிதுடித்து வருந்திய சீதையினும் மிக்கவர் யாரும் இல்லை. இராவணனது அசோக வனத்தில் இருந்த நிலையை, மாரிக்காலத்து இருள் செறிந்த நள்ளிரவில் கருங்கடல் நடுவண் கலம் உடைந்து வருந்தும் ஒருவன் நிலைக்கு ஒப்புக் கூறலாம். அந்நிலையில் அவனுக்கு ஒளிதந்து கரைகாட்டும் புணை தோன்றியது போல, அவலக்கவலையால் கையற்றிருந்த

சீதையின் முன் அனுமன் தோன்றுகிறான். அவனோடு உரையாடி, அவன் தன் பேருருவைக் காட்டக் கண்டு மனம் தெளிகின்றாள். உள்ளத்தே ஒளி தோன்றுகிறது. இனி, இராமனை அடைவது உறுதி; இராவணன் முதலியோர் அழிவது தப்பாது என்று எண்ணுகின்றாள். அனுமனை அன்பு கனிய நோக்கி,

மாண்டேன் எனினும் பழுதன்றே
இன்றே மாயச் சிறை நின்றும்
மீண்டேன் என்னை ஒறுத்தவரைக்
குலங்களோடும் வேர் அறுத்தேன்
பூண்டேன் எங்கோன் பொலங்கழலும்
புகழேயன்றிப் புன்பழியும்
தீண்டேன் என்று மனம் மகிழ்ந்தாள்
திருவின் முகத்துத் திருவன்னாள்

அவளுடைய மனமகிழ்ச்சி முகத்தே விளங்கக் கண்ட அனுமன் உள்ளத்தில் ஆர்வம் பொங்க, ஊக்கத்தால் எழுச்சி மிகுந்து,

"நெறிந்த குழல் நின் அடிமை கண்டு
நெடியோன்பால்
வெறுங்கை பெயரேன், ஒருவராலும்
விளியாதேன்

என்று சொல்லி, சிறு சிறு தொடர்களால்,

"ஆறுதுயர் அஞ்சொல் இளவஞ்சி
அடியேன் தோள்
ஏறுகடிது என்று தொழுது
இன்னடி பணிந்தான்"

அனுமன் இவ்வாறு "என் தோள்களில் விரைந்து ஏறிக்கொள்க; யான் இராமன்பால் கொண்டு சேர்ப்பேன்"

என்று சொல்லவும் இராவணனிடமிருந்து நீங்குவது ஒன்றே கருத்தாயின் உடனே இசைந்திருப்பாள்; மாண்புமிக்க சீதையின் திருவுள்ளம் வேறுபடுகின்றது. கள்ளத்தனமாகச் செல்வது முறையாகாது என நினைக்கின்றாள். தான் இசையாமைகேட்டு அனுமன் வருந்தலாகாது என்ற கருத்தால் மிக்க நயமாக உரையாடுகின்றாள்.

> "அரியது அன்று, நின் ஆற்றலுக்கு ஏற்றதே
> தெரிய எண்ணினை செய்வதும் செய்தியே
> உரியதன்று என ஓர்கின்றதுண்டு அது என்
> பெரிய பேதைமைச் சின்மதிப் பெண்மையால்"

என்னைக் கொண்டு சேர்ப்பது என்பது உனக்கு ஆகாத செயல் அன்று என்று நன்கு அறிவேன்; வானளாவ உயர்ந்து விரிகடலைத் தாவிக் கடக்கும் வீறு கொண்ட நின் ஆற்றலுக்கு அது தக்கதே' "அரியது அன்று; நின் ஆற்றலுக்கு ஏற்றதே".

மேலும், இதனை ஊக்கமிகுதியால் நன்கு சிந்திக்க வில்லை என்பதற்கும் இல்லை என்பாள், "தெரிய எண்ணினை" என்றும், சொல்லியவாறு செய்வதிலும் தடையின்றிச் செய்தே தீர்வாய் என்பாளாய் "செய்வதும் செய்தியே" என்றும் கூறி, தோளில் கொண்டு செல்லப்படுவதற்குத் தான் இசையாமையை நேர்முகமாகச் சொல்வது நீர்மையன்று; ஆதலால் "உரியதன்று என ஓர்கின்றது உண்டு" எனப் பல சொற்களால் நெகிழ்ந்து பேசுகின்றாள். உரியதன்று எனத் தன் உள்ளம் நினைப்பதற்குக் காரணமும் உண்டு; என்னவெனில், "பெண்ணறிவு என்பது பெரும் பேதைமைத்து" என்று கூறுவர் பெரியோர். பெரும்

பேதைமையுடன் என் அறிவு சிறுமையும் உடனுடையது என்பாளாய், "பெரிய பேதைமைச் சின்மதிப் பெண்மையால்" என்று மிக மிகப் பணிவு தோன்றும் வகையில் பகர்கின்றாள்.

பெண்மைச் சிறுமதியால் என் உள்ளம் இவ்வாறு நினைக்கின்றது ஒரு புறம் இருக்க, வேறொரு காரணமும் உண்டு என்பாளாய்,

"அன்றியும் பிறிது உள்ளது ஒன்று; ஆரியன்
வென்றி வெம்சிலை மாசுணும் வேறு இனி
நன்றி என் பதம் வஞ்சித்த நாய்களில்
நின்ற வஞ்சனை நீயும் நினைத்தியோ ?"

என்று சொல்லுகிறாள். நீ விரும்புகிறபடி நான் கொண்டு செல்லப்படுவேனாயின், இராமன் ஏந்திய வெம்சிலை செயலின்றி மாசுபடும்; "செய்தக்க செய்யாமையானும் கெடும்" என்று சொல்லவும், சொல்லின் செல்வனாகிய அனுமன் சொல்லிழந்து வணங்கிச் சுருங்குகிறான். மேலும், என்னைக் கொணர்ந்த அரக்கன் அறியாமல் செல்வது வஞ்சனையாகும். வஞ்சனை அரக்கர்க்கேயுரியதாயிற்றே; அதனை நீ எங்ஙனம் நினைத்தாய்? என்று கேட்கின்றாள்.

"நன்றி என் பதம் வஞ்சித்த நாய்களில்
நின்ற வஞ்சனை நீயும் நினைத்தியோ"

என்னை வஞ்சித்த அரக்கரிடமே குடி கொண்டிருப்பது கள்ள வஞ்ச நினைவு; "என்பதம் வஞ்சித்த நாய்களில் நின்ற வஞ்சனை" நாய்களாகிய அரக்கர் உள்ளத்தில் நிலை பெற்றிருக்கும் வஞ்சனை என்றவள், இவ்வஞ்ச நினைவு எங்ஙனம் உன் நெஞ்சில் புகுந்தது என்று சொன்னால், அனுமன் மனம் வருந்தும் எனஎண்ணி, அவ்வாறு சொல்லாமல், அவர்களுடைய வஞ்சனையை நீயும்

நினைக்கிறாயா? என்பாள், நின்ற வஞ்சனை நீயும் நினைத்தியோ'' என்று கேட்கிறாள். நீ நினைப்பது கூடாது என்பது கருத்து.

இச்சொல் அனுமன் உள்ளத்தைச் சுடுகிறது; ஆனால் வருத்தமுறாது மகிழ்ச்சி மிகுகிறது; சீதையின் உள்ளத்தில் பொங்கி வழியும் கருத்துக்களை ஆர்வத்தோடு குனிந்த உடலும் கூப்பிய கையுமாய் நின்று கேட்கிறான்.

சீதையின் மனத்தில் வீரவுணர்ச்சியும் கற்பு மாண்பும் முற்பட்டு நிற்கின்றன. அரக்கர் கூட்டம் அழிந்த பின்னன்றி வாரேன் என்பாளாய்,

''பொற்பிறங்கல் இலங்கை பொருந்தலர்
என்புமால்வரை ஆகிலதே எனின்
இற்பிறப்பும் ஒழுக்கும் இழுக்கமில்
கற்பும் யான் பிறர்க்கு எங்ஙனம் காட்டுகேன்

என்று சொல்லி, தன் ஆற்றலையும் அனுமனுக்குக் காட்டலுற்று,

''எல்லைநீத்த உலகங்கள் யாவும் என்
சொல்லினால் சுடுவேன் அது தூயவன்
வில்லின் ஆற்றற்கு மாசு என்று வீசினேன்''

என்று உரைக்கின்றாள்.

வில்லால் தன்னை மணந்தவன்; வில்லால் பொல்லாதவர் பலரை வென்றவன; யான் நின்னொடு வருவதாலோ என் சொல்லால் இவ்விலங்கையைச் சுடுவதாலோ அவனது வில்லாண்மை மாண்பு எய்தாது என்றற்கு. ''ஆரியன் வென்றி வெஞ்சிலை மாசுணும்'', ''தூயவன் வில்லின் ஆற்றற்கு மாசு என்று வீசினேன்'' என்று ஒரு முறைக்கு இருமுறை எடுத்துரைக்கின்றாள்.

அனுமன் முகத்தில் புன்னகை தவழ்கிறது. கணவனான இராமன் புகழ் மாசு படுதல் கூடாது என்ற எண்ணத்தால் ஏற்றமுறும் சீதையே "புகழ் புரிந்த இல்லாள்" என நினைந்து பூரிக்கின்றான். அந்நிலையில் சீதை, அனுமனை நோக்கி, என்னை இராவணன் தீண்டினனோ என ஐயுற வேண்டா;

"தீண்டுவான் எனின் இத்தனைச் சேண்பகல்
ஈண்டுமோ உயிர் மெய்யில்; இமைப்பின்முன்
மாண்டுதீர்வன் என்றே நிலம் வன்மையால்
கீண்டுகொண்டு எழுந்து ஏகினன் கீழ்மையான்"

என்று கூறுகிறாள். என் உயிர் இவ்வுடம்பில் இருப்பது கொண்டே அரக்கன் என்னைத் தீண்டவில்லை என்பதை உணரலாம். "தீண்டுவான் எனில் இத்தனைச் சேண்பகல் ஈண்டுமோ உயிர் மெய்யில்" எப்பொழுதே இறந்து போயிருக்கும். இதனை அரக்கனும் அறிவான்; அதனால் தான் அவன் நிலத்தோடே பெயர்த்துக் கொணர்ந்தான்.

"மாண்டுதீர்வன் என்றே நிலம் வன்மையால்
கீண்டு கொண்டு எழுந்து ஏகினன் கீழ்மையான்"

என்றாள். நிலத்தைக் கீண்டு கொண்டு எழுதற்கு அவனது வன்மை, வலிமை துணையாயிற்று. இல்லையாயின் அவன் என்னைக் கொண்டுவர வழியில்லை.

இவ்வண்ணம் வீரம் புகன்ற சீதை முடிவாக, தன் உட்கோள் இதுவென்று கூறுகிறாள். காலம் மாறினும் மக்கள் நிலைமாறினும் அறம் என்றும் மாறாது வெற்றியே பெறும். "அறம் வெல்லும் பாவம் தோற்றும்"; நாயகனான இராமனது வலி நிகரற்றது. எப்படியும் அவன் தன் வலியால் என்னை மீட்பன் என்ற உறுதி எனக்குண்டு,

"மன்ற அறம் வழுவாது என்றும்
நாயகன்வலி எண்ணியும் நானுடைத்
தூய்மை காட்டவும் இத்துணைத் தூங்கினேன்"

தூங்கினேன் என்பதற்கு தூங்கிக் கிடந்தேன் என்று பொருளல்ல; சோர்வுற்றிருந்தேன் என்பது.

இவ்வாறு சொல்லி, அனுமனை நோக்கி, "வேத நாயகன்பால் இனி மீண்டனை போதல் காரியம்" என்று விடை தருகின்றாள்.

"நன்று நன்று இவ்வுலகுடை நாயகன்
தன்துணைப் பெருந்தேவி தவத்தொழில்"

என்று நினைந்து இறும்பூது பெருகுகின்றான் அனுமன்.

அதுவரை, வீரத் தீயெழுந்து கற்பொளி வீச நின்ற சீதையின் தூயவுள்ளம், பண்டு உண்டாகிய துன்ப வுணர்வுகளால் சூழப்படுகிறது. அவற்றின் சூட்டில் அறிவு ஒளி மிகுகிறது. அன்று இராமன் முடியணிந்து, அரசகோலம் பூண்டு யானை மேல் உலாவர இருந்த இன்பக் காட்சியைக் கண்டு இன்புறாதவாறு ஊழ்வினை என்னை விலக்கிற்று; இன்றும் அவ்வூழ்வினை உருத்து நிற்கிறது. நான் பல சொல்லுவதிற் பயன் யாது, சென்று வருக என்பவள்,

"அரசு வீற்றிருந்து ஆளவும், ஆய்மணிப்
புரசையானையின் வீதியிற் போகவும்
விரசு கோலங்கள் காணவிதியில்லேன்
உரைசெய்து என்னை என் ஊழ்வினையுன்னுவேன்"

முன்னமே "நீ போதல் காரியம்" என்று அனுமனுக்குச் சொல்லிவிட்டமையால், "செல்க" என்று மறுபடியும் சொல்லாமல், நீ சென்ற பின் யான் இன்னும்

மீட்கவரவில்லையே என்று இராமன் முதலியோரையோ, இடுக்கண் செய்கின்ற இராக்கதரையோ எவரையும் நொந்து கொள்ளேன்; ஊழ்வினையையே நினைந்து வருந்துவேன் என்பாள், "உரைசெய்து என்னை, ஊழ்வினை யுன்னுவேன்" என்றாள். ஊழ்வினையை உன்னுவதால், வேறு வினைகள் பெருகுதற்கு இடமில்லை. மனமும் சொல்லும் செயலும் தூய்மை எய்தும்; அது பற்றியே "ஊழ்வினை உன்னுவேன்" என இறுதியில் உரைத்துத் தன் உட்கோளை அனுமன் அறியச் செய்கிறாள்.

இதுகாறும் கூறியவற்றால், இடருற்ற காலத்து ஏற்பன எண்ணியும் கூறியும் மன மாண்பைப் புலப்படுத்தும் தமிழ்க் காரிகையரின் தனிமாண்பு தெளிவாகின்றது.

□ □ □

Wrapper Printed at **M.K. Color Process**, Triplicane,
Madras-600 005. Phone : 841478